வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 06.02.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 63 | பக்கங்கள் : 20


07
மீனவர் பிரச்னையை எதிர்கொள்வதில் இந்தியா எதிர்கொள்ளும் தந்திரோபாய நெருக்கடி


08
அதிகாரத்தை மீறி செயல் படுகிறாரா தமிழக ஆளுநர்


09
தமிழகத் தலைவர்களுடன் சென்னையில் நடந்த பேச்சு


10
சர்வதேச அளவில் சாதனை படைத்த இலங்கையின் விஞ்ஞானிகள்

# கோவிட் தடுப்பூசி ஏற்றாதவர்கள் பொது இடங்களில் நடமாட தடை!

## ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு

கொழும்பு, பெப்ரவரி 03

இலங்கையில் கட்டாய தடுப்பூசி ஆணை ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 19

## தொற்றினால் 28 பேர் மரணம்!

கொழும்பு, பெப். 06

நாட்டில் நேற்று முன்தினம் கோவிட் தொற்றால் 28 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் இதனை தெரிவித்தார்.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,572 ஆக அதிகரித்துள்ளது. (அ)

## ஒரு வயதுக் குழந்தை உட்பட 22 பேருக்கு யாழில் தொற்று

கொழும்பு, பெப். 06

ஒரு வயது ஆண்குழந்தை உட்பட 22 பேருக்கு யாழ்ப்பாணத்தில் நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 19

## எனது வாக்குறுதியை ஏற்றே மீனவர் போராட்டம் நிறைவு!

### அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

யாழ்ப்பாணம், பெப். 06

"சக தமிழ் அரசியல் கட்சிகள் மக்களை குழப்பியுள்ளன. மக்களின் பிரச்னைகளை தீர்க்கக்கூடாது என்பதே அவர்களின் உள்நோக்கம். இந்த விடயத்தைப் புரிந்து கொண்ட வடக்கு மாகாண 19

## இருப்பதை இழக்காமல் முன்னோக்கி நகர்வோம்!

### '13' குறித்து மனோ எம்.பி.



கொழும்பு, பெப். 06

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை நாம் முழுமையான தீர்வாக ஏற்கவில்லை. அதனை வைத்துக் கொண்டு முன்னோக்கி நகர வேண்டும். மாறாக 19

## வயலில் வேலை செய்த இளைஞர் திடீரென மயங்கி வீழ்ந்து மரணம்!

வடமராட்சி, பெப். 06

வயலில் வேலை செய்து கொண்டிருந்த இளைஞர் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

வடமராட்சி - கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரிக்கு முன்பாக நேற்று சனிக்கிழமை பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், கர 19

## மனித உரிமைகள் பேரவையை ஏமாற்றுகிறது இலங்கை அரசு!

### கஜேந்திரன் எம். பி. சாடல்

யாழ்ப்பாணம், பெப். 06

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் அரசாங்கம் பல ஏமாற்று வேலைகளை செய்கிறது. இதனை உணர்ந்து அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்."

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 19

## தமிழர்- முஸ்லிம்கள் ஒன்றுபடாவிடின் இரு சமூகங்களும் இல்லாமல்போகும்!

### எச்சரிக்கிறார் சாணக்கியன் எம்.பி.

மட்டக்களப்பு, பெப். 06

வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ்-முஸ்லிம் மக்கள் எவ்வாறு ஒன்றாக வாழவேண்டும் என்பதை சிந்தித்து செயற்படவேண்டும் எனவும் அவ்வாறு இல்லாமல் போனால் வடக்கு-கிழக்கில் இரு சமூகமும் குறிப்பிட்ட காலப்பகுதியில் இல்லாமல்போகும் அபாயம் உருவாகும் எனவும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டு ஊடக அமையத்தில் நேற்று நடை 19

## அரசியல்வாதிகளின் தேவைக்கேற்ப கைதிகளை விடுவிக்கவே முடியாது!

### பிரதமர் மஹிந்த சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப். 06

"அரசியல்வாதிகளின் தேவைக்கேற்ப சிறைத் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளை விடுவிக்க முடியாது. அதற்கான நடைமுறைகள் உள்ளன."

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையின் 74ஆவது சுதந்திர 19

## உள்ளூராட்சித் தேர்தலை விரைவில் நடத்த திட்டம்

கொழும்பு, பெப். 06

விரைவில் உள்ராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு பரீசிலித்துவருவதாக நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை காரணமாகவே உள்ளூராட்சித் தேர்தல் குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி 19

## பயங்கரவாத சட்டத்தை நீக்குமாறு கோரி கையெழுத்து வேட்டை கிளிநொச்சியில்!

கிளிநொச்சி, பெப். 06

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரி கையெழுத்திடும் மக்கள் போராட்டம் நேற்று கிளிநொச்சியில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வு இலங்கை தமிழரசு கட்சியில் வாலிபர் முன்னணியினால் ஆரம்பிக்கப்பட்டது. நேற்று காலை 8.30 மணி 19



## மன்னார் விபத்தில் சிறுவன் மரணம்!

மன்னார், பெப். 06

ஓலைத்தொடுவாய் சந்தியில் லொறியும் முச்சக்கரவண்டியும் மோதி விபத்துக்கு உள்ளானதில் 6 வயது சிறுவன் உயிரிழந்தார்.

பேசாலையிலிருந்து பயணித்த முச்சக்கரவண்டி ஓலைத்தொடுவாய் வீதியூடாக திரும்பியபோது பின்னால் வந்த லொறி மோதியே 19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

'நாங்கள் சுதந்திரம் இல்லாத நாட்டிலே வாழ்கின்றோம் என்பதை பெப்ரவரி 4 ஆம் திகதி உலகத்துக்கு எடுத்துக் காட்டும் ஒரு நடவடிக்கையாக குருந்தூர்மலைக்கு அதிகாலை செல்வோம்' என்று அழைப்பு விடுத்திருந்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மதியாபரணன் ஆபிரகாம் சுமந்திரன்.

'குருந்தூர்மலைக்கு செல்வதற்குத் தடையேதும் இல்லை என உச்ச நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் குறித்து பரிசீலிக்க குருந்தூர்மலை செல்லவுள்ளோம். தடுத்தால் அதனை நாம் எதிர்கொள்வோம்' - என்றும் அவர் இதன்போது கூறியிருந்தார்.

குருந்தூர் மலைக்கு செல்வதற்கு தடை விதிக்கப்படலாம் அல்லது தடுக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பில் திட்டமிடப்பட்ட இந்த போராட்டத்தில் அவ்வாறு தடுக்கப்பட்டிருந்தால் சுதந்திரம் இல்லாத நாட்டில் வாழ்கின்றோம் என்பதை உலகுக்கு காட்டியிருக்கலாம் என்ற போராட்டக்காரர்களின் திட்டம் சரியானதுதான்.

மாறாக அங்கு சென்று வருவதற்கு அனுமதிக்கப்பட்டால், சுதந்திரம் உள்ள நாட்டில் வாழ்வதாக அல்லவா அர்த்தப்படும் என்பதை சட்டத்தை மாத்திரம் மூலதனமாகக் கொண்டு அரசியல் செய்யும் நமது தலைவர்கள் அறியாததல்ல.

அவர்கள் எதிர்பார்த்ததுபோல எந்தவித எதிர்ப்பும் இன்றி எழுபத்திஐந்து 'போராளிகள்' குருந்தூர்மலைக்கு வெற்றிகரமாக சென்று திரும்பிவிட்டனர்.

இப்போது, சுதந்திரம் உள்ள நாடாகியிருக்கின்றது இலங்கை. எந்தவித எதிர்ப்பும் அவர்களுக்கு இருந்திருக்கவில்லை.

அதைவிட முக்கியமான இன்னுமொரு விடயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். எழுபத்தி நான்காவது சுதந்திர தினத்தை நமது தலைவர்கள் மிக சிறப்பாக எழுபத்தி நான்கு பேருடன் குருந்தூர் மலைக்கு சென்று இலங்கையின் சுதந்திரத்திற்கு சான்று பகிர்ந்துள்ளதையும் நாம் கவனத்தில் எடுக்கவேண்டும்.

ஒரு 'பலம்பொருந்திய' கட்சி அதுவும் எழுபது வருடங்களுக்கு மேற்பட்ட அரசியல் பாரம்பரியத்தைக் கொண்ட கட்சியின் ஒரு போராட்டத்தில் எழுபத்திஐந்து பேரை மாத்திரமே தங்களால் திரட்ட முடியும் என்பதையும் வெளிச்சம்போட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

உள்ளூர் பொறிமுறையில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று இந்தப் போராட்டத்தை முடித்துவைத்தபோது அதன் ஏற்பாட்டாளரான சுமந்திரன் எம். பி. தெரிவித்திருந்தார்.

இப்படித்தான் அரசியல்ரீதியாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகளை எல்லாம் நீதிமன்றங்களின் ஊடாக தீர்க்க முயல்வதும். எந்த உள்ளூர் பொறிமுறையில் நம்பிக்கை இல்லை என்று அவர் கூறுகின்றாரோ, அதே பொறிமுறையிலேயே கன்னியா வெந்நீரூற்று ஆலய பிரச்னையை தீர்க்கமுயன்று உள்ளூர் நீதிமன்றை நாட்டியவரும் இவர்தான்.

அவர் நம்பிய உள்ளூர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வேறு விதமாக இருந்திருந்தால், வெந்நீரூற்று ஆலயப் பிரச்னை முற்றுப்பெற்றிருக்கும்.

அரசாங்கம் இன்று வடக்கு கிழக்கு இணைப்பிற்கு நீதிமன்றத் தீர்ப்பை துணைக்கு இழுப்பதுபோல, வெந்நீரூற்று பிரச்னைக்கும் அரசு முற்றுப்புள்ளி வைத்திருக்கும்.

எல்லாவற்றையும் சட்டத்தரணி மூளைகள்- அதே பார்வையில் சிந்திப்பதுதான் இன்று நமது முக்கிய பிரச்னை என்பதை நமது அரசியல் தலைவர்கள்- சிந்திக்கவேண்டும்.

அப்படி சிந்திக்க முடியாதது ஏனெனில், நமது அரசியல் தலைமைகளே இந்த சட்ட 'மேதை'களிடம்தானே இருக்கின்றது.

எனவே இதுகுறித்து சிந்திக்கவேண்டியவர்கள் நாம் தான். அதாவது மக்கள் மட்டும்தான்.

**- ஊர்க்குருவி.**

# இலங்கை பின்நோக்கிப் பயணித்தமைக்கு இரு கட்சிகளும் பொறுப்பு கூறவேண்டும்

### சரத் பொன்சேகா எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 06

"சுதந்திரமடைந்த பின்னர் இந்நாடு பின்நோக்கிப் பயணித்தமைக்கு நாட்டை மாறி, மாறி ஆண்ட இரு கட்சிகளும் பொறுப்புக்கூற வேண்டும்."

- இவ்வாறு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது: -

நாடு சுதந்திரமடைந்த போது இலங்கை சிறந்த மட்டத்தில் இருந்தது. அதன் பின்னரும் ரூபாவின் பெறுமதி பாதுகாக்கப்பட்டது. இன்று எமது நாட்டு நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி கண்டுள்ளது. கறுப்பு சந்தையில் 250 ரூபா வுக்கு டொலரை வாங்கவேண் டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, மக்களும் அரசியல்வாதிகளை முழுமையாக நம்பாமல், சிந்தித்து, தகுதியானவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். அப்போதுதான் நாடு மேம்படும். இங்கு ஆட்சிகள் மாறும்போது கொள்கைகளும் மாறுகின்றன. இந் நிலைமை மாறவேண்டும். நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான உறுதியான கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும் - என்றார் .

(அ)

# பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருள் வழங்காமையாலேயே நாட்டில் மின்தடை!

கொழும்பு, பெப். 06

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து இலங்கை மின்சார சபைக்கு போதிய எரிபொருளை பெற்றுக்கொடுக்காததன் விளைவாகவே ஆங்காங்கே மின் வெட்டு ஏற்படுவதாக தொழிற் சங்கங்கள் கூறுகின்றன.

தொடர்ந்தும் எரிபொருள் வழங்கப்படும் என எரிசக்தி அமைச்சர் கூறிய பின்னர் கடந்த வியாழக்கிழமை மின் வெட்டு அமுல்படுத்தப்பட்டதாக ஐக்கிய தொழிற்சங்கத்தின் அழைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்தார்.

மின்சார சபைக்கு எரிபொருளை வழங்குவதற்கு பெற்றோலிய கூட்டுத்தாபனம் தவறியதால் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகிறது.

அமைச்சர் வேண்டுமென்றே அரசாங்கத்தை அசௌகரியத்துக்கு உள்ளாக்க முயற்சிக்கின்றாரா?

டீசல் மற்றும் உலை எண்ணெய் பற்றாக்குறையாக இருந்தால், மின் நிலையங்கள் மூடப்பட்டால், எரிபொருள் நெருக்கடி இருப்பது தெளிவாகிறது.

வியாழன் அன்று எரிசக்தி அமைச்சர் கூறியது போல் டீசல் இலங்கைக்கு வரவில்லை - என்றார். (அ)

## வெள்ளவத்தை கடற்கரையில் 2 சடலங்கள் மீட்பு

கொழும்பு, பெப். 06

வெள்ளவத்தை கடற்கரையில் நேற்றுக் காலை இரண்டு பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இருவரில் ஒருவரின் உடலில் பல காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் மேலும் கூறினர்.

உயிரிழந்தவர்கள் தொடர்பில் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. (அ)

## 9 வயது சிறுமி நீரில் மூழ்கி பலி!

கொழும்பு, பெப்.6

கேகாலை, நூரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிரிஹேன, ரக்கனாவ நீர்வீழ்ச்சியில், நேற்றுமுன்தினம் நீராட சென்றவர்களில் ஒன்பது வயது சிறுமி நீரில் மூழ்கி மரணமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அங்ஹேட்டிகம பிரதேசத்தை சேர்ந்த ஒன்பது வயதுச் சிறுமியே இவ்வாறு மரணமானார்.

நீரில் மூழ்கிய சிறுமியை மீட்டு தெரணியகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(கே)

## இந்திய மீனவர் வருகையை எதிர்த்து மன்னாரில் கண்டனப் போராட்டம்!



மன்னார், பெப். 06

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய வருகையால் இடம் பெற்ற அனர்த்தத்தின் போது யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் உயிரிழந்த 2 மீனவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும், இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையை கண்டித்தும் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் மன்னாரில் கண்டனப் போராட்டம் இடம் பெற்றது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில், மாவட்ட இணைப்பாளர் எ.பெனடிற் குரூஸ் தலைமையில் நேற்று மன்னார் புதிய பஸ் நிலையத்துக்கு முன் இந்த போராட்டம் அமைதியான முறையில் இடம் பெற்றது. (அ)

## மட்டு. விக்னேஸ்வரா ம. வியில் கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டல்!



கல்குடா, பெப். 06

கல்குடா கதிரவெளி விக்னேஸ்வரா தேசிய பாடசாலையின் தொழில்நுட்ப பிரிவுக்கு 3 மாடிக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இராஜாங்க அமைச்சர் ச. வியாழேந்திரன், சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி. சந்திரகாந்தன் ஆகியோர் விருந்தினர்களாகப் பங்கேற்று அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

இந்த நிகழ்வு கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி தலைமையில் இடம்பெற்றது.

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் முன்மொழிவில் பாடசாலையின் அபிவிருத்திக்கு 53.3 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதுக் என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ)

ஈழநாடு
Eelanadu
06.02.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், தை 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## எந்த சக்திகள்?

ஜனாதிபதி தனது சுதந்திர தின உரையில் இலங்கைக்கு எதிராக சர்வ தேச சக்திகள் ஒன்றிணைந்துள்ளன என குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால் அந்த சக்திகள் யார் என்று அவர் குறிப்பிடவில்லை. அரசாங்கம் தொடர்ந்தும் நெருக்கடிகளை சந்தித்துவரும் நிலையில்தான் ஜனாதிபதி இவ்வாறான தொரு கருத்தை வெளியிட்டிருக்கின்றார். 2015இல் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த போது, உடனடியாகவே அவர் இந்திய உளவுத் துறையின் மீதே குற்றஞ்சாட்டியிருந்தார். ஒரு சில தினங்களில் அமெரிக்க பிரித்தானிய உளவுத் துறைகள் மீதும் அவர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

சந்திரிகா குமாரதுங்க பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கான தயாரிப்பு பணிகளை ஆரம்பித்திருப்பதாக செய்திகள் வெளிவந்திருக்கும் சூழலில்தான், ஜனாதிபதி, சர்வதேச சக்திகள் தொடர்பில் பேசியிருக்கின்றார். விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் நிறைவுற்றதை தொடர்ந்து, இலங்கைத் தீவின் அரசியல், தொடர்ந்தும் நெருக்கடிளையே சந்தித்து வருகின்றது. இந்த நெருக்கடிகளில் இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தம் ஒரு துருப்பு சீட்டாகவே பயன்படுத்தப்படுகின்றது. யுத்தத்திற்கு பின்னரான இலங்கைத் தீவு அதிகம் சீனாவுடன் நெருங்கிச் சென்றது. இவ்வாறானதொரு சூழலில்தான், 2012இல், ஜக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் பொறுப்பு கூறல் தொடர்பில் முதலாவது பிரேரணை கொண்டுவரப்பட்டது. அமெரிக்கா இதற்கான ஆதரவை வழங்கியிருந்தது. அமெரிக்கப் பிரேரணை என்றே இது அழைக்கப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அகப்படப் போகின்றனர். அவர்களில் பலர் கொல்லப்படப் போகின்றனர் என்பது ஏற்கனவே தெளிவாகவே அனுமானிக்கப்பட்டது. இறுதியில் எதிர்பார்த்தவாறே - முள்ளிவாய்க்கால் பல்லாயிரக்கணக்கான உயிர்களை காவு கொள்ளப்பட்டன. இறுதி யுத்தத்தின் போது, ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளராக இருந்த கோடன் வைஸ் ‘கூண்டு’ என்னும் பெயரில் நூலொன்றையும் எழுதியிருக்கின்றார். யுத்தத்தின் போக்கையும் அதனால் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்படப் போகின்றனர் என்பதையும் மேற்குலக நாடுகள் நன்றாகவே அறிந்திருந்தன.

மேற்கின் வீதிகளில் புலம்பெயர் சமூகம், ஆயிரக்கணக்கில் திரண்டு தங்களது எதிர்ப்பை வெளியிட்டிருந்தன ஆனால் யுத்தத்தை நிறுத்தி, மக்களை காப்பாற்றுங்கள் என்னும் குரலுக்கு எந்தவொரு நாடுமே செவி சாய்க்கவில்லை. இன்று ஜனநாயகம் மனித உரிமைகள் தொடர்பில் பேசும் எந்தவொரு நாடும் யுத்தத்தை தடுக்க முயற்சிக்கவில்லை. ஆனால் யுத்தம் முடிந்ததும் பொறுப்பு கூறும் விடயத்தை கையிலெடுத்தன. இதிலிருந்து நாம் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். இலங்கையின் மீதான அழுத்தங்கள் ஈழத் தமிழர்களுக்கானது அல்ல. ஆனால், ஈழப் போரின் விளைவுகளை முன்வைத்தே அனைத்தும் நடக்கின்றன. இனியும் நடக்கப் போகின்றன.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போதும், சர்வதேச சக்திகள் மீதே அனைவரது பார்வையும் திரும்பியது ஆனால் அந்த ஆட்சி மாற்றம் எதிர்பார்த்த விளைவுகளை தரவில்லை. இவ்வாறானதொரு சூழலில்தான் மீண்டும் ஆட்சி மாற்றம் தொடர்பான சிந்தனைகள் எட்டிப்பார்க்கின்றன. எதிரணிகள் சந்திப்புக்களை மேற்கொள்கின்றன. இப்படியானதொரு பின்னணியில்தான் ஜனாதிபதியும் சர்வதேச சக்திகள் தொடர்பில் பேசியிருக்கின்றார்.

இலங்கைத் தீவின் அரசியலில் சர்வதேச சக்திகளின் தலையீடுகள் தவிர்க்கவே முடியாதவை. எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்த நிலைமையிலிருந்து இலங்கைத் தீவு இனி தப்பவே முடியாது. கொழும்பில் எவர் ஆட்சியிலிருந்தாலும், அவர்கள் வெளியாரை அனுசரித்துத்தான் நடக்க வேண்டும். அதேபோன்று தமிழ் தேசிய அரசியல் தரப்புக்களுக்கும் வெளியாரைவிட்டால் வேறு வழியில்லை. அண்மையில் ஆறு கட்சிகள் இணைந்து, இந்திய பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தையும் இந்த பின்புலத்தில்தான் நாம் நோக்க வேண்டும். எனவே கடந்த கால அனுபவங்களிலிருந்து நாம் விடயங்களை கற்றுக்கொள்ள வேண்டும். எந்தவொரு வெளிச் சக்தியும் தங்களின் நலனை நிறுத்துப் பார்த்துத்தான் தீர்மானங்களை எடுப்பார்கள். இதுதான் உலக யதார்த்தம். அவர்கள் தங்களது நலன்களுக்காக செயற்படும் போது, எங்களது நலன்களை வெற்றிகொள்வதற்கான வாய்ப்புக்களை தேட வேண்டியது எங்களுடைய கடமையாகும்.

# சிரியாவில் ஐ.எஸ் தலைவரை அழிப்பதற்கு அமெ. ஜனாதிபதி பைடன் வகுத்த வியூகம்



வடமேற்கு சிரியாவில் அமெரிக்க சிறப்புப் படைகள் நடத்திய தாக்குதலில் இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) என தங்களை அழைத்துக் கொள்ளும் குழுவின் மூத்த தலைவர் கொல்லப்பட்டதாக ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அபு இப்ராஹிம் அல்-ஹாஷிமி அல்-குரேஷியின் மரணத்தின் மூலம் “உலகின் முன்னிருந்த ஒரு பெரிய பயங்கரவாத அச்சுறுத்தல் நீங்கியுள்ளது,” என்று பைடன் கூறியுள்ளார்.

அமெரிக்க படையினரின் இராணுவ நடவடிக்கையின் கடைசி கட்டத்தில், குரேஷி ஒரு வெடிகுண்டை வெடிக்கச் செய்து தன்னையும் தனது சொந்த குடும்ப உறுப்பினர்களின் உயிரையும் மாய்த்துக் கொண்ட செயல், கோழைத்தன விரக்தியின் அடையாளம்” என்று பைடன் தெரிவித்தார். தாக்குதலுக்குப் பிறகு சம்பவ பகுதியில் 13 பேரின் உடல்கள் கிடைத்ததாக சிரியாவின் மீட்புக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் இந்த இராணுவ நடவடிக்கையானது, வடக்கு இட்லிப் மாகாணம் மற்றும் துருக்கியின் எல்லைக்கு அருகே உள்ள எதிர்கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள அட்மேஹ் நகரின் புறநகரில் உள்ள இரண்டு மாடி குடியிருப்பு கட்டடத்தை இலக்கு வைத்து நடந்தது.

இப்பகுதி ஜிஹாதி குழுக்கள் மற்றும் ஐ.எஸ் குழுவுக்கு எதிரான துருக்கிய ஆதரவு கிளர்ச்சிப் பிரிவுகளின் கோட்டையாக கருதப்படுகிறது. கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இராணுவ ரீதியாக இங்கிருந்த ஜிஹாதி குழுக்கள் வீழ்த்தப்பட்டிருந்தாலும், பின்னர் அவை படிப்படியாக எழுச்சி பெற்று வந்தன.

அப்துல்லா கர்தாஷ் மற்றும் ஹஜ்ஜி அப்துல்லா என்றும் அழைக்கப்படும் குரேஷியை பிடிக்க அல்லது கொல்லும் நடவடிக்கை குறித்து பைடனுக்கு ஒரு மாதத்திற்கு முன்பே அமெரிக்க இராணுவ தளபதிகள் விவரித்திருந்தனர் என்று அதன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

குரேஷி தனது குடும்பத்துடன் அட்மேயில் உள்ள குடியிருப்பு கட்டடத்தின் இரண்டாவது மாடியில் வசித்து வந்ததாகவும், அவர் ஒருபோதும் வெளியில் செல்வதில்லை என்றும், அதற்கு பதிலாக கூரியர்களை பயன்படுத்தி சிரியா மற்றும் பிற இடங்களில் உள்ள ஐஎஸ் குழுக்களுக்கு தகவல் பரிமாற்றம் செய்து வந்ததாகவும் உளவுத்துறை தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இத்தனைக்கும் இதே கட்டடத்தில் ஐ.எஸ் குழுவுடன் தொடர்பில்லாத அல்லது குரேஷியின் இருப்பை அறியாத மற்றொரு குடும்பம் தரை தளத்தில் வசித்து வந்தது. இந்த நிலையில், குரேஷியை இலக்கு வைக்கும் ராணுவ நடவடிக்கைக்கு கடந்த செவ்வாய்க்கிழமை ஜோ பைடன் அனுமதி அளித்தார். இதையடுத்து புதன், வியாழனுக்கு இடைப்பட்ட நள்ளிரவில் பல ஹெலிகாப்டர்கள் அட்மேக்கு வந்தன. அங்கிருந்தபடி வெள்ளை மாளிகையின் போர்ச்சூழல் கண்காணிப்பு அறையில் இருந்தபடி குரேஷி தாக்குதல் நடவடிக்கையை நேரலையில் ஜனாதிபதி கண்காணித்தார்.

இந்த இராணுவ நடவடிக்கையின் தொடக்கத்தில் தரை தளத்தில் வசிக்கும் குடும்பத்தில் இருந்த ஒரு பெண், ஒரு ஆண் மற்றும் பல குழந்தைகள் - பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். இருப்பினும், குரேஷி “ஒரு குண்டை வெடிக்கச் செய்தார் என்றும் அது அவரையும் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட அவரது சொந்த குடும்ப உறுப்பினர்களையும் கொன்றது” என்றும் ஒரு அதிகாரியை மேற்கோள்காட்டி ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டிருக்கிறது.

“இந்த நடவடிக்கையின் முடிவுகளை நாங்கள் இன்னும் மதிப்பிடும்போது, அல்-பாக்தாதியை அழித்த 2019ஆம் ஆண்டு நடவடிக்கையில் நாங்கள் பார்த்த அதே கோழைத்தனமான பயங்கரவாத தந்திரமாக இது தோன்றுகிறது” என்று அந்த அதிகாரி ராய்ட்டர்ஸிடம் கூறியுள்ளார்.

குரேஷியின் முன்னோடியான அபு பக்கர் அல்-பாக்தாதி, அட்மேவிலிருந்து 16 கிமீ (10 மைல்) தொலைவில் உள்ள ஒரு மறைவிடத்தில் இருந்தபோது அவரை பிடிக்க அமெரிக்க சிறப்புப் படைகள் நடத்திய சோதனையின் போது அவரும் ஒரு வெடிகுண்டை வெடிக்கச் செய்து தன்னையும் மூன்று குழந்தைகளையும் கொன்றதாக அமெரிக்கா கூறியது. குரேஷியின் கூட்டாளி ஒருவர் தனது சொந்த குடும்ப உறுப்பினர்களுடன் முதல் மாடியில் மறைந்திருந்ததாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்த ஆயுததாரியும் அவரது மனைவியும் சாகும்வரை அமெரிக்க துருப்புக்களுடன் சண்டையிட்டனர். பின்னர், கட்டடத்தில் இருந்து ஏராளமான குழந்தைகள் வெளியே வந்து பத்திரமாக வெளியேற்றப்பட்டனர்.

அதிகாரிகளின் கூற்றுப்படி, வேறொரு இடத்தில் இருந்து கொண்டு இராணுவ ஹெலிகாப்டர் ஒன்றில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களில் குறைந்தது இரண்டு பேரும் அந்த நடவடிக்கையில் கொல்லப்பட்டனர்.

வியாழன் காலையில் குடியிருப்பு கட்டடத்தை பார்வையிட்ட ஏஎஃப்பி செய்தி நிறுவன நிருபர் ஒருவர், இரத்தம் தெறித்த

(18ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# இந்தவார ராசிபலன்
## 06.02.2022 – 12.02.2022

பெப்ரவரி. 06 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - தை - 24
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : சஷ்டி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

எதிர்ப்புகள் விலகும். தடை நீங்குவதால் எண்ணம் பலிக்கும். தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் முன்பைவிட கூடுதல் நன்மை காண்பர். வழிகாட்டும் நபரின் சந்திப்பு உண்டு. எதிர்பார்த்த பணம் விரைவில் கைக்கு வரும். குடும்பத்தினரின் செயல்பாடு மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும். பேச்சில் நிதானத்தைக் கடைபிடிப்பது வீண் பிரச்னை ஏற்படாமல் தடுக்கும். பணியாளர்கள் அலைச்சலையும், வேலைப் பளுவையும் தாண்டி சிறந்த பலன் காண்பர். சிலருக்கு விருப்பத்தின் பேரில் இடமாற்றம் கிடைக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ]

வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் விஷயத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து பிறரிடம் பாராட்டு பெறுவீர்கள். விடாமுயற்சியால் பணவரவு கூடும். கவர்ச்சியும் செல்வாக்கும் அதிகரிக்கும். வாக்குவன்மையால் நன்மை ஏற்படும். சிறு ஏமாற்றங்களைப் பொருட்படுத்த வேண்டாம். மற்றவர்களின் பொருட்களையோ, பணத்தையோ கையாளும் போது கவனமாக இருக்கவும். வாழ்க்கைத் துணையை அனுசரித்துச் செல்வது நன்மை தரும். பிள்ளைகள் உதவுவர்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

அலுவலகப் பொறுப்புகள் அதிகரிக்கும். மாணவர்கள் வளர்ச்சிக்கான சூழல் அமையப் பெறுவர். கூடுதலாக நேரம் ஒதுக்கிக் கடமைகளை முடிப்பீர்கள். கௌரவம் உயரும். விரும்பிய பதவி கிடைக்கும். கலைத்துறையில் ஆர்வம் அதிகரிக்கும். வீண் விரயங்களைக் குறைப்பீர்கள். திடீர் வருமானம் வரலாம். மாணவர்களுக்கு உதவித் தொகை கிடைக்கும். வழக்கு விவகாரங்களில் முடிவு சாதகமாக இருக்கும். கைவிட்டுப் போன அல்லது தொலைந்த பொருட்கள் கிடைக்கும். அலட்சிய போக்கைக் கைவிடுவது நல்லது.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

சாதுர்யமாகப் பேசி எதையும் வெற்றிகரமாக முடிப்பீர்கள். அரசியல் துறையினருக்கு பணப்புழக்கம் அதிகரிக்கும். எடுத்த பொறுப்புகள் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். சமூகத்தில் மதிப்பு கூடும். பணியிடத்தில் செல்வாக்கு உயரும். உணவு விஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது. சுபவிஷயம் குறித்த பேச்சு நடக்கும்.நட்பு வட்டாரத்தில் குதூகலம் ஏற்படும். உறவினர்களை அனுசரித்துச் செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். குடும்ப நலனுக்காக உழைக்க வேண்டி இருக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

விரும்பியபடியே பணி, இடமாற்றம் கிடைக்கும். ஆடை, ஆபரணம் சேரும். தொழில், வியாபாரத்தில் எந்தத் தடையும் இருக்காது. லாபம் உயரும். கடன் பாக்கிகள் வசூலாகும். வியாபாரத்தில் மன நிறைவு காண்பீர்கள். சிறு அலைச்சலுக்குப் பிறகு கடினமான விஷயம் கூட கைகூடும். சமூக அந்தஸ்து அதிகரிக்கும். கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி முன்னேறுவீர்கள். பிறரிடம் கோபத்தைக் காட்டாமல் நிதானமாகப் பேசுவது நல்லது. வழக்கு, விவகாரங்களில் முடிவு தள்ளிப் போகும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

பணவரவுக்கு குறைவிருக்காது. அவ்வப்போது குழப்பங்களின் காரணமாக சோர்வாகக் காணப்படுவீர்கள். கணவரின், மனைவியின் அன்பு ஆறுதலாக இருக்கும். சகோதர வகையில் சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். உறவினர்களால் செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்வதைத் தவிர்க்கவும். மற்றவர்களின் ஆலோசனை கேட்டுப் புதிய முயற்சியில் ஈடுபடவேண்டாம். உங்கள் துறையில் அனுபவசாலிகளை மட்டுமே நம்பலாம்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். ஆடம்பர பொருள் வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். நிர்வாகத்தினரின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பர். எதிர்பார்த்ததை விட நன்மை கூடுதலாகும். பணியாளர்கள் சிறப்பான முறையில் பணியாற்றுவர். குடும்பச் செலவுக்கு தேவையான பணம் கிடைப்பதில் சிரமம் இருக்காது.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

தாமதம் ஏற்பட்டாலும் விடாமுயற்சியுடன் பணியாற்றுவீர்கள். கணவன், மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். தந்தையின் உடல்நலனில் கவனம் தேவை. தேவையான சமயத்தில் அனுபவசாலிகளின் ஆலோசனை பெறுங்கள். வேலை தேடுவோருக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். உங்களின் ஆலோசனை கேட்டு வருவோர் பயனடைவார்கள். பிள்ளைகளின் ஆதரவு உண்டு. நல்ல மனிதர்களைச் சந்திப்பீர்கள்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும். பணியாளர்கள் உற்சாகமாக பணிபுரிவர். வியாபாரத்தை விரிவுபடுத்த வங்கிக் கடனுதவி கிடைக்கும். குடும்பத்தை சிறப்பாக நிர்வகிப்பீர்கள். பெண்கள் பணிச்சுமையால் சிரமப்படுவர். கணவருடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. செலவு அதிகரிக்கும். பொருளாதார வசதிக்கு குறைவில்லை. புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல்நலம் சீராகும். கணவன், மனைவிக்கிடையே சுமுக உறவு ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் காணப்படும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த விஷயம் நிறைவேறுவதில் இழுபறி நீடிக்கும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடுங்கள். நண்பர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவீர்கள். தடைகளும் தாமதங்களும் உங்களை அசர வைக்காது. குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலை அமையும். மகிழ்ச்சியான வாரம். உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லையே என்ற கவலை வேண்டாம். உடல்நிலை சீராக இருக்கும். போட்டிகளைச் சமாளிக்க கடுமையாகப் பாடுபடவேண்டி இருக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

உறவினர்கள் அனுசரணையாக நடந்து கொள்வார்கள். வாழ்க்கை வசதிகள் ஓரளவுக்குத் திருப்தி தரும். கணவருக்கு, மனைவிக்கு நன்மை நடைபெற உள்ளது. அலுவலகத்தில் உங்கள் திறமைக்கு உரிய அங்கீகாரமும் அதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும். எதிர்பார்த்தபடியே பதவி உயர்வோ அல்லது ஊதிய உயர்வோ கிடைக்கும். நீங்கள் சற்றும் எதிர்பாராத சில சக ஊழியர்கள் பணிகளில் உதவி செய்வார்கள். நிதானமாகப் பேசி மற்றவர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். நெருங்கிய நண்பர்களுடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடு நீங்கும். அலுவலகத்தில் இணக்கமாக நடப்பது அவசியம். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். நண்பர்களுக்கு உதவுவீர்கள். அலுவலகத்தில் உழைப்புக்கேற்ற அங்கீகாரம் தாமதமாகக் கிடைக்கும். தந்தையுடன் அனுசரணையாக இருப்பது நல்லது. மனதில் உற்சாகம் கூடுதலாகும். சக பணியாளர்களிடம் தேவையான ஒத்துழைப்பு கிடைக்க சற்றுப் பாடுபட வேண்டியிருக்கும். நண்பர்களுக்கு நன்மை நிகழும்.

# நூல் பகிர்வு

பகிர்வு -15

**கணபதி சர்வானந்தா**

இந்தியாவை ஆட்சி செய்த ஆங்கில அரசை அறவழியில் போராடி வெற்றி கண்டவர் காந்தியடிகள் என்று சொல்லப்படுகிறது. இருந்தும் அவர் பற்றிப் பல எதிர்கருத்துகளும் எதிர்வாதங்களும் உண்டு.

பகவத் கீதை, ஜைன சமய கொள்கைகள், லியோ டால்ஸ்டாயின் எழுத்துக்கள் போன்றவற்றால் ஈர்க்கப்பட்ட காந்தி, சத்தியம், அகிம்சை ஆகிய கொள்கைகளை விடாமல் கடைபிடித்தார். அசைவ உணவுகளை தவிர்க்கும் வைணவ குடும்பத்தில் பிறந்த காந்தி, சிறு வயதில் புலால் உணவை சிறிது உண்டாலும், பின்னர் சைவ உணவாகிய பழங்கள், கடலை, ஆட்டுப்பால் போன்றவற்றையே உண்டார். சைவ உணவே அசைவ உணவை விட மனித உடலுக்கு ஆரோக்கியமானது என்று தன் சோதனைகள் மூலம் அறிந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். 1902 ஆம் ஆண்டுக்குப் பிறகு, பிரம்மச்சரிய விரதத்தையும் கடைபிடித்தார். அப்போது தனது காமத்தை வெல்லும் பொருட்டுப் பல்வேறு சோதனைகளைச் செய்து வந்தார். அப் பரிசோதனைகளை அவரது மனைவியின் அனுமதியுடன் தான் செய்தார். அவை பெரும் விமரிசனத்திற்கு உள்ளாகின. இவை இன்றளவும் சரியாகப் புரிந்து கொள்ளப்படாமல் விமர்சிக்கப்படுகின்றன.

வாரத்திற்கு ஒருநாள் மௌன விரதம் மேற்கொண்டார். தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியவுடன், மேல்நாட்டு உடை அணிவதைத் தவிர்த்து இந்திய உடைகளையே அணியத் தொடங்கினார். உள்நாட்டில் தயாரிக்கப்படும் காதி உடையையே இந்திய மக்கள் உடுத்தவேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தாழ்த்தப்பட்டவர்களையும் கோயிலுக்கு செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் எனப் போராட்டங்கள் எழுந்த பொழுது, அனைவரும் இந்து மதத்தின் அறத்தைப் பேண வேண்டும் எனக் காந்தி சொன்னார் என அம்பேத்கர் எழுதி உள்ளார். திருநெல்வேலி சைவ சித்தாந்த குருகுலப் பள்ளியில், சமூகத்தில் உயர்ந்த வகுப்பினர்க்குத் தனி விடுதி, மற்றவர்க்குத் தனி விடுதி எனக் கடைபிடிக்கப்பட்டதை, இந்து மத அறத்தின்படி சரி எனக் காந்தி வாதிட்டார். இதனால் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளே, ஈ. வெ. இராமசாமி நாயக்கரை பேராய கட்சியிலிருந்து (உழபெசநளளியசவல) வெளியேற முடிவெடுக்கத் தள்ளியது. இதனை ஒட்டி, பெங்களூரில் ஈ. வெ. இராமசாமி நாயக்கருக்கும், காந்திக்கும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றது. இக் கலந்தாய்விலும், காந்தி இந்து மத அறத்தின் தேவையை வலியுறுத்தியதாகச் சொல்லப்படுகிறது - எனப் பல குறிப்புகள் இணையத்தில் உண்டு.

“காந்தியம்: ஓர் உரையாடல்” எனும் புத்தகம் தன்னம் வெளியீடாக வந்திருக்கிறது. அது பற்றி எனது நண்பர் சிவராஜ் பின்வருமாறு அவரது முகநூலில் பதிவிட்டிருக்கிறார். இப்புத்தகம் அம்பேத்கரியரான தொல்.திருமாவளவன் அவர்களோடு எழுத்தாளர் சித்ரா பாலசுப்ரமணியன் அவர்கள் பொதிகைத் தொலைக்காட்சியில் நிகழ்த்திய நல்லதொரு நேர்காணலின் அச்சுவடிவம். எந்தெந்தப்புள்ளிகள் எல்லாம் காந்தியத்தில் கைகொள்ளத்தக்கவை என்பது குறித்த தன்னுடைய அனுபவங்களைத் தெளிவின் மொழியில் திருமாவளவன் பதிவுசெய்திருக்கிறார். காணொளி வடிவிலான இந்த ஆவணத்தை, தனக்கேயுரிய தவிப்போடும் ஆழ்விருப்பத்தோடும் எழுத்தாக்கம் செய்த கார்த்தியின் மெனக்கெடல் என்றும் நன்றிக்குரியது. கார்த்தியின் விருப்பவுழைப்பில் விளைந்த முதல் அச்சுநூலை வெளியிடுவதில் தன்னறம் பெருமகிழ்வு அடைகிறது. அத்தனை கோணங்களிலும் அலசப்பட்டு அணுவணுவாக அடையத்தக்கது காந்தியம். அவ்வாறு அடைவது பெரும் அறைகூவல் எனக் கருதினால், அதனை அடைவதற்கான அகவழிப்பாதையை துலங்கப்படுத்தும் நூல்வரிசைகளில் இச்சிறுபுத்தகமும் இணைந்துகொள்கிறது.

காந்தியைச் சந்தித்த ரொனால்ட் டங்கன் பற்றி எழுத்தாளர் பாவண்ணன் அவர்கள் கணையாழி இதழில் எழுதியிருந்த கட்டுரையில் கீழ்காணும் சம்பவம் விவரிக்கப்படுகிறது. ஏதோவொருவகையில் காந்தியை கண்டடைவதற்கு மீளமீள வரலாற்று அனுபவங்கள் நமக்குக் கிடைத்துக்கொண்டே இருக்கின்றன. அவ்வகையில் சமகாலத்தில் காந்தியத்தை அணுகுவதற்கான மிகச்சிறந்த புள்ளிகளில் ஒன்று அம்பேத்கரிய பார்வையையும் உள்ளடக்கி காந்தியின் உள்ளார்ந்த செயல்முடிவுகளை அறியமுனைவது. ஒவ்வொரு தரப்பும் எதிரெதிர் நின்று விவாதித்து மட்டும் விலகிச்செல்வதைக் காட்டிலும், எக்காலத்துக்குமான எதிர்மைகளை வென்றுகடக்க கிடைக்கக்கூடிய ஒவ்வொரு செயல்வாய்ப்பையும் நாம் ஆதிக்கச்சக்திகளைவிட முனைப்போடும் அர்ப்பணிப்போடும் ஆற்றவேண்டி உள்ளது.

“ஒரு நாள், அதிகாலை நடைப்பயிற்சியின்போது ரொனால்ட் டங்கனையும் தன்னோடு அழைத்துக்கொண்டு சென்றார் காந்தியடிகள். அழகான கரும்பு வயல்களைக் கடந்து குடிசைப் பகுதிகளின் ஊடே அவர் சென்றார். அத்தருணத்தில் அவர்கள் நின்றிருந்த இடத்திலிருந்து சிறிது தொலைவில் நான்கைந்து பேர் அமர்ந்து மலம் கழித்துக் கொண்டிருந்தார்கள். அதைக் கண்டு டங்கன் அதிர்ச்சியில் உறைந்துவிட்டார். ஆனால் அவர்களை நெருங்கி காந்தியடிகள் எதுவும் பேசவில்லை. துயரமும் இரக்கமும் படிந்த முகத்தோடு மௌனமாக அவர்கள் அமர்ந்திருந்த திசையிலேயே பார்த்தபடி இருந்தார். அவர்களைப் பழிக்கவோ அல்லது அவர்களை நெருங்கித் தூய்மையைப் பற்றி அறிவுரை கொடுக்கவோ முற்படவில்லை. ஆனால், அவர்கள் எழுந்து விலகியதும் அந்த மலக்குவியலுக்கு அருகில் பள்ளம் தோண்டி, அனைத்தையும் திரட்டி அதற்குள் தள்ளத் தொடங்கினார்.

முதலில் எதுவும் புரியாமல் காந்தியடிகள் தன்னந்தனியாக அந்தச் செயலைச் செய்வதைப் பார்த்த டங்கன், பிறகு மனம் தெளிந்து காந்தியடிகளுக்கு உதவியாக சுத்தம் செய்யும் வேலையில் ஈடுபடத் தொடங்கினார். அக்கம்பக்கத்தில் காணப்பட்ட மலக்குவியல்களை கொஞ்சம் கொஞ்சமாக இழுத்துவந்து இருவரும் பள்ளத்துக்குள் தள்ளத் தொடங்கினார்கள். அதுவரையில் அவர்கள் செய்வதை விலகி நின்று வேடிக்கை பார்த்த குடிசைவாசிகள் ஒவ்வொருவராக அவர்களை நெருங்கி வந்து அவர்கள் செய்யும் வேலையுடன் இணைந்துகொண்டார்கள்.

ஒற்றைச்சொல் கூட இல்லாமல் தன் செயல்முறை வழியாக மக்களைத் தன்னை நோக்கி ஈர்க்கிற காந்தியடிகளின் ஆளுமையைக் கண்டு டங்கன் வியப்பில் மூழ்கினார். அவரிடம் கேட்பதற்காக அவர் எண்ணியிருந்த பல கேள்விகளுக்கு அந்தக் கணத்திலேயே விடைகள் புலப்படத் தொடங்கின.”

# சகல அரசியல் கைதிகளையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை

## மஸ்தான் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, பெப். 06

நல்லாட்சி காலத்தில் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாத நிலையில் தற்போது பல அரசியல் கைதிகளை ஜனாதிபதி விடுவித்துள்ளார்.

இந்நிலையில் ஏனையவர்களையும் விடுவிக்க தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் நாம் முயற்சி எடுத்துள்ளோம் என வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் - முல்லைத்தீவு அபிவிருத்தி குழுத் தலைவருமான கே. கே. மஸ்தான் தெரிவித்தார்.

அவரது நேற்று அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் கொரனா தொற்று இருந்தாலும் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக கிராம சேவகர் ரீதியில் 30 இலட்சம் ரூபா மற்றும் வட்டார ரீதியில் 40 இலட்சம் ரூபா எனவும் பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவருக்கு 100 கோடி ரூபா என நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அதில் 100 வீதம் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக செலவு செய்யக்கூடியதாக உள்ளது. ஏனைய வேலைத் திட்டங்களுக்கு 40 வீதமளவில் பயன்படுத்திக்கொள்ள முடியும். இந்த திட்டத்துக்கு பெரும் விமர்சனம் வந்த போதிலும் நாம் குறித்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

வவுனியாவில் பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டம் கடந்த ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்டாலும் அது தொய்வு நிலையில் காணப்பட்டது. எனினும் பின்நாட்களில் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் கதைத்து விரைவாக எமது மாவட்ட மக்களுக்கான கல்வி வளத்தை நான் உருவாக்கியுள்ளேன்.

இதேபோல் ஓமந்தையில் உள்ள அரச வீட்டுத்திட்டத்துக்கான காணி ஆவணங்கள் அவர்களுக்கு கிடைக்காத நிலை காணப்பட்டது. அவர்கள் வீடுகளை அமைத்து வசிக்கின்றபோதிலும் காணி ஆவணம் இல்லாத நிலையில் அமைச்சருடன் கதைத்து தற்போது அமைச்சரவைப் பத்திரம் போட்டு மிக விரைவில் ஆவணங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிலையில் தற்போதைய சூழலில் இரண்டு வருடங்களுக்கு புதிய கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்குவதில்லை என அரசாங்கம் கொள்கையாக கொண்டுள்ளது. எனினும் நாம் இங்குள்ள அரசசார்பற்ற நிறுவனங்களுடன் கதைத்து எமது பகுதியில் பாடசாலைகளில் வகுப்பறை கட்டடம் குறைவு என்பதனால் அதனை அமைப்பதற்காக மூன்று பாடசாலைகளில் 50 மில்லியன் பெறுமதியான கட்டட வேலைகள் இடம்பெறுகின்றன.

அத்துடன் அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக கல்வி வளர்ச்சிக்காக பாடசாலைகளில் பல கட்டடப் பணிகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

நல்லாட்சி காலத்தில் எத்தனை அரசியல் கைதிகளை விடுவித்தார்கள்? எனினும் தற்போதைய ஜனாதிபதி பொறுப்பேற்றவுடன் அரசியல் கைதிகளின் விடுதலை இடம்பெற்றுள்ளது. அது மாத்திரமின்றி அரசியல் நோக்கத்துக்காக கைது செய்யப்பட்ட அனைவரையும் விரைவாக விடுதலை செய்வதற்கான முனைப்பை சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் ஜனாதிபதியுடன் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்



பினர்கள் என்ற வகையில் பேசி தொடர் முயற்சிகளை எடுத்துள்ளோம்.

அத்துடன் உரிமை சம்பந்தப்பட்ட பிரச்னைகளையும் அவ்வப்போது விளக்கம் கொடுத்து அதற்கான ஏற்பாடுகளையும் செய்யலாம் என்ற முழு நம்பிக்கையில் இருக்கின்றோம்.

இந்தியாவில் இருந்து வரும் மீனவர்கள் எமது மீனவர்கள் பாதிக்கும் வண்ணம் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றனர். எனவே இரண்டு நாடுகளுக்கிடையில் முரண்பாடு வராத வகையில் ஒரே மொழி பேசும் சமூகம் என்பதனை உணர்ந்து இந்தியாவில் இருந்து வரும் மீனவர்கள் எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்காத வகையில் அவர்களது எல்லையில் இருந்து மீன்களை பிடிக்க வேண்டும் என்பதனை ஒரு கோரிக்கையாக வைக்கின்றேன்-என்றார். (அ)

# ஒன்பது வயதுச் சிறுமி நீரில் மூழ்கி மரணம்!

கொழும்பு, பெப். 06

கேகாலை, நூரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரிஹேன, ரக்கனாவ நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்றவர்களில் சிறுமி ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அங்ஹேட்டிகம பிரதேசத்தைச் சேர்ந்த 9 வயது சிறுமியே இவ்வாறு மரணமடைந்தார்.

நீரில் மூழ்கிய சிறுமி மீட்கப்பட்டு தெரணியகல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். பிரதே பரிசோதனைக்காக தெரணியகல வைத்தியசாலை யின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வெளிநாட்டுத் துப்பாக்கிகளுடன் இரத்தினபுரியில் இருவர் கைது!

கொழும்பு, பெப். 06

இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி, எஹலியகொட ஆகிய பொலிஸ் பிரிவுகளில் வெளிநாட்டுத் துப்பாக்கிகள் இரண்டுடன் இருவர் நேற்று முன் தினம் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எஹலியகொட பொலிஸ் பிரிவு கொடகம்பொல பரக்கடுவ பிரதேசத்தில் இராஜகிரிய குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்படும் துப்பாக்கி மற்றும் நான்கு தோட்டாக்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

கொடகம்பொல பிரதேசத்தை சேர்ந்த 44 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

இதேவேளை, இரத்தினபுரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லெல்ல பிரதேசத்தில், இரத்தினபுரி குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

கல்லெல்ல, இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# "எமது சுற்றாடலை நாமே பாதுகாப்போம்" சிரமதான திட்டம் மன்னாரில் முன்னெடுப்பு

மன்னார், பெப். 06

கடற்கரைச் சூழலில் காணப்படும் இயற்கைக்கு தீங்கு விளைவிக்க கூடிய கழிவு பொருட்களை அப்புறப்படுத்தும் முகமாக "எமது சுற்றாடலை நாமே பாதுகாப்போம்" எனும் தொனிப் பொருளில் சிரமதான செயற்திட்டம் மன்னார் பிர தேச செயலகத்தின் ஏற்பாட்டில் மன்னார் நகர் பிரதேச செயலாளர் ம.பிரதீப் தலைமையில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் மெசிடோவின் அனுசரனையில் மன்னார் சௌத்பார் தொடக்கம் தாழ்வுபாடு கடற் கரை பகுதி வரை நேற்று சனிக் கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 9 மணி வரை இடம் பெற்றது.

இதன் போது சாந்திபுரம், கீரி, தாழ்வுபாடு, ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளை சேர்ந்த சமுர்த்தி பயனாளிகள், மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டு சிரம தான பணிகளை முன்னெடுத்த னர்



சௌத்பார் கடற்கரை தொடக்கம் தாழ்வுபாடு வரை சுமார் 4 கிலோமீற்றர் வரையிலான கடற்கரை பகுதி மேற்படி சுத்தம் செய்யப்பட்டது டன் அனைத்து கழிவுகளும் நகரசபையின் ஒத்துழைப்புடன் அப்புறப்படுத்தப்பட்டன.

இதன்போது மன்னார் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர், கிராம அலுவலர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மெசிடோ நிறுவன ஊழியர்கள் நகர சபை சுத்திகரிப்பு பணியாளர்கள் இணைந்து கடற்கரைப் பகுதியில் மாபெரும் சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

குறித்த செயற்திட்டம் தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் மன்னார் பிரதேச செயலக பிரிவில் உள்ள கடற் கரைப் பகுதிகளில் விரிவுபடுத் தப்பட உள்ளமை குறிப் பிடத் தக்கது. (அ)

# சர்வதேச நாணய நிதியத்தை நாட அமைச்சர் விமலும் பச்சைக்கொடி

கொழும்பு, பெப். 06

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துவது எமக்கு எவ்வித பிரச்னையும் இல்லை என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தப்படும் என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

சர்வதேச நாணய நிதியமாக இருக்கலாம். சர்வதேச அமைப்புகளாக இருக்கலாம். அவற்றுடன் பேச்சு நடத்துவதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது. ஆனால் மேற்படி தரப்புகளால் முன்வைக்கப்படும் நிபந்தனைகளே முக்கியம். அவை நாட்டுக்கு எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பது பற்றி ஆராய வேண்டும்.

இறுதியில் நாட்டுக்கு பாதிப்பு ஏற்படாத தேர்வையே நாம் நாட வேண்டும்-என்றார். (அ)

# மேலும் 550 பேர் தொற்றிலிருந்து குணமடைவு!

கொழும்பு, பெப். 06

நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து 550 பேர் குணமடைந் துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரையில் கொவிட்-19 தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 580,770 ஆக அதிகரித்துள்ளது. (அ)

# கல்கிஸையில் 3 விடுதிகள் சுற்றிவளைப்பு; 8 பேர் கைது!

கொழும்பு, பெப். 06

கொழும்பு, கல்கிஸை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இருவேறு பிரதேசங்களில் ஆயுள்வேத சிகிச்சை நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த மூன்று விபச்சார விடுதிகள் நேற்று முன் தினம் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதுடன் 8 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

விபசார விடுதிகளை நடத்தி வந்த மூவரும், அவற்றை நடத்துவதற்கு உடந்தையாக இருந்த ஐந்து பெண்களுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

பயாகல, விஹாரஹேன, பாணந்துறை, போனுவிட்ட, கஹடட்கஸ் ஹந்திய, மடுல்சீமை மற்றும் புவாக்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 22 முதல் 39 வரையான வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர். (அ)

ஈழநாடு



# இந்திய மீனவர்களின் அத்துமீறல் இராஜதந்திர ரீதியிலான பிரச்னை!

## கடற்படைப் பேச்சாளர் கூறுகிறார்



கொழும்பு, பெப். 06

**இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறும் விவகாரம் இராஜதந்திர ரீதியிலான பிரச்சினை என இலங்கை கடற்படைப் பேச்சாளர் கப்டன் இந்திக டீ சில்வா தெரிவித்துள்ளார்.**

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்தும், வடமராட்சி கிழக்கு மீனவர்கள் இருவர் உயிரிழந்த சம்பவத்திற்கு நீதி கோரியும், நேற்றும் முன்தினம் ஐந்தாவது நாளாகவும் வடமராட்சி மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைத் தடுக்க கடற்படை உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

இந்நிலையில், இந்த விடயம் தொடர்பில், கடற்படை பேச்சாளர் கெப்டன் இந்திக்க டி சில்வாவிடம் கொழும்பு ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது பதிலளித்த அவர்,

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறும் பகுதிகள் தொடர்பான கண்காணிப்புகளின் அடிப்படையில், அந்தப் பகுதிகளில் கடற்படை படகுகள் கண்காணிப்பில் ஈடுபடுகின்றனர்.

எவ்வாறிருப்பினும், சில சில இடங்களில் அவர்கள் ஊடுருவ முடியும்.

இது கடற்படைக்கு அப்பால், இராஜதந்திர ரீதியிலான பிரச்னையாகும்- என்றார். (அ)



# கிளிநொச்சியில் புதையல் தோண்டிய ஆறு பேர் இராணுவத்தினரால் கைது!

கிளிநொச்சி, பெப். 06

கிளிநொச்சி - இராமநாதபுரம் அழகாபுரியில் புதையல் தோண்ட முற்பட்ட குற்றச்சாட்டில் ஆறு பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து புதையலை கண்டறிவதற்காக பயன்படுத்தபடுத்தப்படும் ஸ்கானர் கருவி ஒன்றும் இராணுவத்தினரால் மீட்கப்பட்டது.

கிளிநொச்சி இராணுது புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் தர்மபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பயணக் கட்டுப்பாடுகளை விதிக்கும் திட்டம் இல்லை

## சன்ன ஜயசுமண கூறுகிறார்

கொழும்பு, பெப். 06

நாட்டைப் முடக்கவோ அல்லது பயணக் கட்டுப்பாடுகளை விதிக்கவோ இதுவரை எந்த முடிவும் எட்டப்படவில்லை என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

அதிகரித்து வரும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு எதிர்கால நடவடிக்கைகள் குறித்த கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

தற்போதைய சூழ்நிலையில் காரணமாக கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இருப்பினும் சுகாதார வழிகாட்டுதல்களை கடைபிடிப்ப



தோடு பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொண்டால் கொரோனா தொற்று சவாலை சமாளிக்க முடியும் என அவர் கூறினார். (அ)

# வெசாக் தினத்தன்றே ரஞ்சனுக்கு மன்னிப்பு?

கொழும்பு, பெப். 06

சிறைத் தண்டனை அனுபவித்துவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு, ஜனாதிபதியால் நேற்று முன் தினம் பொதுமன்னிப்பு வழங்கப்படவில்லை.

சிறையில் இருக்கும் ரஞ்சன் ராமநாயக்க, சுதந்திர தினத்தன்று ஜனாதிபதியின் பொது மன்னிப்பின்கீழ் விடுதலை செய்யப்படுவார் என பல தரப்பினரும் தகவல்கள் வெளியிட்டுவந்தனர். இது தொடர்பில் ஜனாதிபதியிடமும் கோரிக்கைகள் முன்வைத்தனர்.

எனினும், நேற்று முன் தினம் சிறைக்கைதிகள் சிலர் விடுதலை செய்யப்பட்டபோதிலும், அந்தப்பட்டியலில் ரஞ்சன் ராமநாயக்கவின் பெயர் உள்ளடக்கப்படவில்லை.

அதேவேளை, எதிர்வரும் வெசாக் தினத்தன்று ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்படும் என அரச தகவல்கள் தெரிவித்தன. (அ)

# இது கோமாளி அரசு!

## சாடுகிறார் வேலுகுமார் எம்.பி.

கொழும்பு, பெப். 06

"இது வெத்து வேட்டு அரசு. வேலைத்திட்டங்கள் எதுவும் அற்ற வெற்று அரசு. எதற்கெடுத்தாலும் 'சதி' .'சதி' யென 'சதி' புராணம்பாடும் கோமாளி அரசு." - என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

நாவலப்பிட்டிய பகுதியில் நேற்று இடம்பெற்ற ஆன்மீக நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டை ஆளுகின்ற இந்த அரசு வெற்று அரசாகும். அதனிடம் உரிய வேலைத்திட்டங்கள் இல்லை. இது உள்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல முழு உலகுக்குமே தெரியும். நல்லாட்சியின்போது முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு திறப்பு விழா நடத்தி அகம் மகிழ்கின்றனர்.

ஊழல் மோசடிகள் மற்றும் சதித்திட்டங்கள் ஊடாக ஆட்சிக்கு வந்த இந்த அரசு, தற்போது எதற்கெடுத்தாலும்



'சதி' புராணம் பாடுகின்றது. சமையல் எரிவாயு வெடித்தாலும் சதி, நாட்டில் மின்வெட்டு அமுலானாலும் சதியென காரணம் கூறுகின்றனர். மக்களை ஏமாற்றவே அவர்கள் அவ்வாறு செயற்படுகின்றனர். ஆனால் அவர்களின் நாடகத்தை நாட்டு மக்கள் தற்போது புரிந்துகொண்டுள்ளனர்.

இந்த அரசு தன்னைசூழ இராணுவத்தை வைத்துக் கொண்டுள்ளது. எனவே, சதி இடம்பெறுகின்றதெனில் அதை கண்டுபிடித்து நட வடிக்கை எடுக்கவும். மாறாக பூச்சாண்டி அரசியல் நடத்தக் கூடாது.

அதேவேளை, நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமானால் இன ஒற்றுமை அவசியம். ஆனால் நுவரெலியாவில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொழியும், கலா சாரமும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. தேசிய நிகழ்விலும் தமிழுக்கு இடமில்லை-என்றார். (அ)

# இலங்கை படைகளினால் நிகழ்த்தப்பட்ட சித்திரவதை குறித்து பிரிட்டன் அவதானம்

லண்டன், பெப். 06

இலங்கையில் படையினரால் நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறைகள் மற்றும் சித்திரவதைகள் குறித்து முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அவதானம் செலுத்தியிருப்பதாக பிரிட்டன் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் நிலைவரத்தைக் கண்காணிப்பதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் அது கூறியுள்ளது.

பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் டொனியா அன்டோனியஸியினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அமன்டா மில்லிங், இதனை கூறினார்.

மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 கீழ் ஒன்று தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கடப்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் மீண்டும் வலியுறுத்தினார். (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் மன்னாரில் மூன்று பேர் கைது!

மன்னார், பெப். 06

மன்னார்- தலைமன்னார் பிரதான வீதி எருக்கலம் பிட்டி பகுதியில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக் கையில் சுமார் ஒரு கிலோ 76 கிராம் ஐஸ் போதைப்பொரு ளுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்துக்கிடமான வகையில் மோட்டார் சைக்கிள் ஒன்றை சோதனையிட்டபோது, போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டு மோட்டார் சைக்கிளில் இருந்த இருவரால் கடத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இருவரிடமிருந்து கிடைத்த மேலதிக தகவலின் அடிப்படையில் இந்த மோசடியில் ஈடுபட்ட மற்றொரு நபர் கைது செய்யப்பட்டுள்ளதோடு முச்சக்கர வண்டியொன்றும் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருளின் தோராயமான பெறுமதி 08 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என நம்பப்படுகிறது. சந்தேக நபர்கள் மன்னார் மற்றும் பேசாலை பிரதேசத் தைச் சேர்ந்த 21 மற்றும் 39 வயதுடையவர்கள் என தெரி விக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)



# இரு நாட்டு மீனவர் பிரச்னையை எதிர்கொள்வதில் இந்தியா எதிர்கொள்ளும் தந்திரோபாய நெருக்கடி

**அபிவிருத்தித் திட்டங்களின் உதவியுடன் வடபகுதி மீனவர்களை சீனா கவர்ந்து வருகின்ற சூழ்நிலையில், வடபகுதி மீனவர்களின் துயரங்களை இந்தியா புறக்கணிப்பது அதற்கு மூலோபாய ரீதியில் பின்னடைவுகளை ஏற்படுத்தும். மறுபுறத் தில் தமிழக மீனவர்களின் கவலைகளை புறக்கணிப்பது தமிழக வாக்கு வங்கி அரசியலை பாதிக்கும்! இந்த நிலையில் இந்தியா செய்யப்போவது என்ன?**

**பி.கே.பாலச்சந்திரன்**

இலங்கையின் வடபகுதி மீனவர்களை இந்தியா புறக்கணிப்பதால், அது மூலோபாய ரீதியில் விளைவுகளை எதிர்கொள்ளவேண்டிய நிலையேற்படும். இந்தியாவின் போட்டியாளரான சீனா அபிவிருத்தித் திட்டங்களின் உதவியுடன் வடபகுதி மீனவர்களை கவர்ந்து வருகின்ற சூழ்நிலையில் இந்தியா வடபகுதி மீனவர்களின் துயரங்களை புறக்கணிப்பது அதற்கு மூலோபாய ரீதியில் பின்னடைவுகளை ஏற்படுத்தும்.

வட இலங்கையை தனது மூலோபாய கொல்லைப் புறமாக கருதும் இந்தியா அங்கு சீனாவின் பிரசன்னத்தை வெறுக்ககூடும். தமிழ்நாடு மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை காரணமாக இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் உள்ள குறுகிய கடற்பாதையில் தங்களிற்கு உள்ள உரிமைகளை வடபகுதி மீனவர்கள் இழந்துள்ளனர்.

தமிழ்நாடு மீனவர்கள் ஆழமற்ற கடலின்அடியை துழாவிச்செல்லும் உள்ளூர் மீனவர்களின் வலைகளை அழிக்கும் டிரோலர்களை பயன்படுத்துகின்றனர். இந்திய மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி முறைகளை பயன்படுத்துவது குறித்தும் அவர்களின் சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து பல வருடங்களாக முறையிட்டும் நடவடிக்கைகள் எடுத்தும் அதனால் எந்த பலனும் ஏற்படவில்லை.

தமிழ்நாட்டின் வாக்குகளை இழக்ககூடும் என்ற அச்சம் காரணமாக தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துவதில் தோல்வியடைந்துள்ளனர். தென் இந்திய மாநிலத்தில் மீனவர்கள் வாக்குபலம் மிக்கவர்கள். தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும்போதெல்லாம் தமிழக அரசியல்வாதிகள் பெரும் போர்க்கொடி தூக்குவார்கள். கூச்சலிடுவார்கள், அதன் பின்னர் புதுடில்லி அவர்களை மனிதாபிமானத்துடன் நடத்திவிடுதலை செய்யுமாறு கொழும்பை கேட்டுக்கொள்ளும்.

வடபகுதி மீனவர்களின் நலன்களை காப்பாற்றுவதைவிட இந்தியாவுடனான உறவுகள் முக்கியமானவை என்பதால் கொழும்பு அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளும்.

தமிழர்களிற்கு சுயாட்சி வழங்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கு தமிழக அரசியல்வாதிகளின் ஆதரவு அவசியம் என்பதால் இலங்கை தமிழ் அரசியல்வாதிகள் தமிழக இந்திய அரசியல் தலைவர்களுடன் முரண்பட விரும்ப மாட்டார்கள்.

வேறு வழியின்றி சில வேளைகளில் உதவியற்ற வடபகுதி மீனவர்கள் இந்திய மீனவர்களை தாக்குவதுண்டு,சமீபத்தில் நடுக்கடலில் இடம்பெற்ற மோதலில் இரு மீனவர்கள் கொல்லப்பட்டனர்.

இதற்கு எதிர்ப்புதெரிவித்து வடமராட்சி கிழக்கு மீனவர்கள் 30 ம் திகதி முதல் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆனால் தமிழ் அரசியல்வாதிகளிடமிருந்துமாறாக அவர்களில் ஒருவரான சுரேஸ்பிரேமசந்திரன் தமிழ்நாட்டில் உள்ள தங்கள் சகாக்களிற்கு எதிராக வடபகுதி மீனவர்கள் மோதலில் ஈடுபடுவது உகந்தவிடயமல்ல என தெரிவித்துள்ளார். பிரேமசந்திரனும்அவரது சகாக்களும் இந்த விடயத்தை தங்கள் எதிரி மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தாக்குவதற்காகவே பயன்படுத்துகின்றனர். இந்த விவகாரத்திற்கு தீர்வைகாண வேண்டிய முழுப்பொறுப்பையும் அமைச்சர் மீது அவர்கள் சுமத்துகின்றனர்.

எனினும் இந்திய இலங்கை அரசாங்கங்களின் உதவியில்லாத நிலையில் இந்த விவகாரத்தில் எதனையும் செய்ய முடியாத நிலையில் தேவானந்தா காணப்படுகின்றார். பாதிக்கப்பட்டமீனவர்களிற்கு வேறு தொழிலில் ஈடுபடுவதற்கான நிதியை வழங்குவதை மாத்திரம் அவரால் செய்யமுடியும்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் உதவ முன்வந்துள்ள நிலையில் கடலட்டை பண்ணையையும் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலையும் கடந்த டிசம்பரில் ஏற்படுத்தப்பட்டன. சீன தூதுவர் இங்கு விஜயம் செய்து இந்த துறையில் மேலும் உதவிகளை வழங்க தயார் என தெரிவித்திருந்தார். தமிழ் நாட்டிற்கு செல்லும் வழியில் உள்ள சில தீவுகளிற்கும் அவர் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

ஆனால் இந்தியா வடபகுதி குறித்த சீனாவின் ஆர்வத்தை தனது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான விடயமாக கருதுகின்றது. வடஇலங்கையின் தீவுப் பகுதிகளில் மின் நிலையங்களை ஏற்படுத்தும் திட்டத்திற்கு தனது பாதுகாப்பை காரணம் காட்டி இந்தியா எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. கேள்விப் பத்திர முறை மூலம் சீன நிறுவனம் இந்த திட்டத்திற்கான அனுமதியை பெற்றிருந்தபோதிலும் இலங்கை இந்த திட்டத்தை இடைநிறுத்தியுள்ளது.

ஆனால் இந்த திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளமை சீனா வடபகுதிக்குள் காலடி எடுத்துவைப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்வதை தடுத்து நிறுத்தப்போவதில்லை. குறிப்பாக அங்குள்ள மீன்பிடித்துறைக்குள் ஊடுருவுவதை சீனா கைவிடப்போவதில்லை.

இலங்கை கடற் பரப்பில் தனது மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவதை இந்தியாவால் தடுத்து நிறுத்தமுடியாவிட்டால் (அரசியல் காரணங்களிற்காக அதனால் செய்ய முடியாது) இந்தியா ஏனைய வருமானம் ஈட்டித்தரும் அபிவிருத்தி திட்டங் களை இலங்கை மீன்பிடித்துறை அமைச் சுடன் இணைந்து முன்னெடுப்பதன் மூலம் இலங்கை தமிழ் மீனவர்களை கவர முயல வேண்டும்.




இந்தியாவால் அதனை செய்ய முடியாவிட்டால் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுதலை செய்வதை மாத்திரம் அது செய்தால் கூடிய விரைவில் இலங்கையின் வடபகுதி மீனவர்கள் மத்தியில் சீனா தனது காலடியை பதிக்கும். இலங்கை மூலோபாய ரீதியில் பெறுமதியான விடயத்தை சீனாவிடம் இழக்கும்.

மீனவர் விவகாரத்தை ஐ.நாவிற்கு கொண்டு செல்வது குறித்த தனது எச்சரிக்கையை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் முன்னெடுத்தால் மீனவர் விவகாரம் மேலும் சிக்கலானதாக மாறும்.

இலங்கை மீனவர்களிற்கு மீன்பிடி உபகரணங்களையும் பயிற்சியையும் வழங்குவதன் மூலம் அவர்கள் ஆழ்கடல் மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவதை இந்தியா ஊக்குவிக்க வேண்டும் என்ற யோச னையை ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் முன்வைத்துள்ளார்.

எனினும் முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஏற்கனவே முயற்சி செய்து தோல்வியடைந்த விடயம் இதுவென்பதால் இது சாத்தியமாகபோவதில்லை. ■

- நன்றி : நியுஸ் இன் ஏசியா



# அதிகாரத்தை மீறி செயற்படுகிறாரா தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி?

**நீட் மசோதா குறித்து முடிவெடுப்பதில் ஆளுநரின் அதிகார எல்லை என்ன? அதை அவர் மீறினாரா? இந்த விவகாரத்தில் அரசியல் கட்சி கள் ஒருபுறம் குற்றம்சாட்டி வந்தாலும், அரசியலமைப்பின் 200ஆவது விதி என்ன சொல்கிறது? இதில் மூன்று தேர்வுகள் ஆளுநருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.**

தமிழ்நாட்டு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட நீட் விலக்கு மசோதாவை ஆளுநர் ஆர்.என். ரவி திருப்பி அனுப்பிய நடவடிக்கை, அரசியல் சர்ச்சையாக மாறி, மாநில அரசுக்கும் மாநில ஆளுநருக்கும் இடையிலான மோதலாக உருவெடுத்திருக்கிறது. இந்த விவகாரத்தில் ஆளுநரின் அதிகாரம் என்ன?

2021ஆம் ஆண்டு, செப்டம்பர் 13ஆம் திகதி தமிழகத்திற்கு நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்கக் கோரி சட்டப்பேரவையில், தமிழக அரசு நிறைவேற்றிய மசோதாவை சட்டப்பேரவை சபாநாயகரின் மறுபரிசீலனைக்காக திருப்பி அனுப்பியுள்ளார் மாநில ஆளுநர் ஆர்.என்.ரவி.

இந்ச மசோதா நிறைவேற்றப்பட்ட சுமார் 5 மாதங்களுக்குப் பின் தமது நிலைப்பாட்டை ஆளுநர் தெரிவித்துள்ளார். "இந்த சட்ட முன்வடிவு மாநிலத்திலுள்ள குறிப்பாக கிராமப்புற மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்களின் நலன்களுக்கு எதிரானது என ஆளுநர் கருதுகிறார்" என ஆளுநர் மசோதாவை திருப்பி அனுப்பியதற்கான காரணமாக அவரது மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டில், அரியலூரைச் சேர்ந்த மாணவி அனிதா, நீட் தேர்வின் அடிப்படையிலான மருத்துவ மாணவர் சேர்க்கை நடைபெற்றதால், தன் மருத்துவ கனவு சாத்தியமாகவில்லை எனக்கூறி தற்கொலை செய்து கொண்டார். அப்போதிலிருந்து 5 ஆண்டுகளாக தமிழகத்தில் நீட் தேர்வு குறித்த விவாதம் பொதுவெளியில் தீவிரமாக காணப்படுகிறது.

ஏற்கெனவே, 2017ஆம் ஆண்டு அப்போது நடந்த அதிமுக ஆட்சியின்போது நீட் தேர்வுக்கு எதிராக சட்டப்பேரவையில் மசோதா நிறைவேற்றப்பட்டு, குடியரசு தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. அதற்கு குடியரசு தலைவர் ஒப்புதல் கிடைக்கவில்லை. இதையடுத்தே மருத்துவ படிப்பில் நீட் தேர்வில் தேர்ச்சி பெறும் அரசு பள்ளி மாணவர்களுக்கு 7.5% இடஒதுக்கீடு வழங்கி முந்தையை அதிமுக அரசு சட்டம் இயற்றியது.

இந்த நிலையில், புதிதாக ஆட்சிக்கு வந்த திமுக, முதலாவதாக நீட் தேர்வின் தாக்கம் குறித்து அறிய ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில் உயர் நிலை குழுவை அமைத்தது.

இக்குழு வெளியிட்ட 165 பக்க ஆய்வறிக்கையில், நீட் தேர்வு தமிழக மாணவர்களிடையே ஏற்படுத்திய தாக்கம் குறித்து மட்டுமல்லாமல், இத்தேர்வு தொடர்ந்தால் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரிய போதிய மருத்துவர்கள் இல்லாமல், தமிழ்நாட்டின் பொது சுகாதார கட்டமைப்பே கேள்விக்குள்ளாகும் என தரவுகளுடன் எடுத்துரைத்தது.

மேலும், கிராமப்புற மற்றும் நகரங்களில் வசிக்கும் ஏழை மாணவர்கள் மருத்துவக் கல்வியை படிக்க முடியாத நிலை ஏற்படும் எனவும், நகர்ப்புறங்களில், ஏற்கெனவே கல்வி கற்ற தலைமுறையைச் சேர்ந்த மாணவர்கள், ஆங்கில வழிக்கல்வி பயின்ற மாணவர்களுக்கு மட்டுமே நீட் தேர்வு உதவியுள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனவே, பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையிலேயே மருத்துவ மாணவர் சேர்க்கை நடத்தப்பட வேண்டும் என அக்குழு பரிந்துரைத்திருந்தது.

இந்த அறிக்கையின் அடிப்படையில், தமிழக அரசு நிறைவேற்றிய மசோதாவைத்தான் ஆளுநர் ஆர்.என்.ரவி தற்போது திருப்பி அனுப்பியுள்ளார். இதையடுத்து, ஆளுநரின் இச்செயலுக்கு எதிராக, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

**ஆளுநர் ரவிக்கு கண்டனம்**

"அண்ணாவின் 53-ஆவது நினைவுநாளில், ஆட்டுக்குத் தாடியும், நாட்டுக்கு ஆளுநரும் தேவையா?" என்று அண்ணா அன்றே காரணத்தோடு எழுப்பிய கேள்வியை எண்ணிப் பார்க்கிறேன்" என மு.க.ஸ்டாலின் தன் ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். மேலும், ஆளுநர் ஆர்.என்.ரவியை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என நாடாளுமன்றத்தில் இரு தினங்களாக தி.மு.க. உறுப்பினர்கள் முழக்கமிட்டு வருகின்றனர்.

இப்போது ஆளுநரை திரும்பப் பெற வேண்டும் என தமிழக அரசே வலியுறுத்தி வருகிறது. அதன் பிரதிபலிப்புதான், நாடாளுமன்றத்தில் தமிழக எம்.பிக்கள் எழுப்பும் "ஆளுநரை திரும்பப்பெறு" முழக்கம்.

**ஆளுநருக்கு உள்ள அதிகாரம்**

நீட் மசோதா குறித்து முடிவெடுப்பதில் ஆளுநரின் அதிகார எல்லை என்ன? அதை அவர் மீறினாரா? இந்த விவகாரத்தில் அரசியல் கட்சிகள் ஒருபுறம் குற்றம்சாட்டி வந்தாலும், உண்மையில் அரசியலமைப்பின் 200ஆவது விதி என்ன சொல்கிறது? இதில் மூன்று தேர்வுகள் ஆளுநருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

ஒரு மாநிலத்தின் சட்டப்பேரவையால் ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டாலோ சட்டப்பேரவையைக் கொண்ட மாநிலம் என்றாலோ, மாநிலத்தின் சட்டமன்றத்தின் இரு அவைகளாலும் மசோதா நிறைவேற்றப்பட்டால், அது ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதற்கு ஆளுநர் ஒப்புதல் அளித்ததாகவோ அல்லது அதற்கான ஒப்புதலை தடுத்து நிறுத்துவதாகவோ அல்லது குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக மசோதா மீதான முடிவை ஒத்திவைத்திருப்பதாகவோ அறிவிக்கலாம்.

மற்றொரு தேர்வு, அந்த மசோதா பண மசோதாவாக இல்லாவிட்டால், அதில் குறிப்பிட்ட சில அம்சங்களை மறுபரிசீலனை செய்யக் கோரி ஆளுநர் திருப்பி அனுப்பலாம். குறிப்பாக மசோதாவில் திருத்தம் செய்தால் சரியாக இருக்கும் என ஆளுநர் அறிவுறுத்திய விஷயங்களை திருத்தம் செய்ய மாநில சட்டப்பேரவை கூடி மசோதாவில் திருத்தம் செய்தோ மீண்டும் திருத்தமின்றியோ நிறைவேற்றி மீண்டும் ஆளுநருக்கு அனுப்பலாம். அப்படி அனுப்பப்படும் மசோதாவுக்கு ஆளுநர் மறுப்பு தெரிவிக்கக் கூடாது.

**மற்றொரு தேர்வு:** ஒருவேளை மசோதா சட்டமாக மாறினால், உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்களிலிருந்து பதவிக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில், அது இருப்பதாகக் கருதி ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் தவிர்த்து அதை குடியரசு தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பலாம்.

இந்த மூன்று அம்சங்களில் தனக்கான முதலாவது தேர்வை ஆளுநர் இப்போது பயன்படுத்தியிருக்கிறார்.

**நந்தினி வெள்ளைச்சாமி**

**தி.மு.க. சுமத்தும் குற்றச்சாட்டு**

ஆனால், ஆளுநர் இந்த விவகாரத்தில் அரசியல மைப்பை மீறியுள்ளார் என்கிறார் வழக்கறிஞரும் மாநிலங் களவை திமுக உறுப்பினருமான வில்சன். இது குறித்து பிபிசி தமிழிடம் பேசிய அவர், "இந்த விவகாரத்தில் அரசியலமைப்புக்கு எதிராகத்தான் ஆளுநர் நடந்திருக் கிறார். மசோதா குறித்து விவாதிக்க அவருக்கு அதிகா ரமே இல்லை. மசோதாவின் அம்சங்கள் குறித்தெல்லாம் ஆளுநர் குறிப்பிட்டிருப்பது தவறு. இது, அரசியலமைப் புக்கு எதிரானது. குடியரசு தலைவருக்கு மட்டுமே இது பொருந்தும்," என்றார்.

"மசோதா எந்த பட்டியலின் கீழ் வருகிறது (மாநில பட்டியல், மத்திய பட்டியல், பொதுப் பட்டியல்), ஏற்கெனவே இது தொடர்பாக உள்ள சட்டத்திற்கும், மசோதாவுக்கும் இடையே என்ன முரண்பாடுகள் இருக்கின்றன என்பதைத்தான் ஆளுநர் பார்க்க வேண்டும். ஆனால், அதைத்தாண்டி, அரசின் ஆய்வறிக்கை குறித்தெல்லாம் ஆளுநர் குறிப்பிட்டுள்ளது தவறு. ஆய்வறிக்கையை அவர் படித்தாரா என்பதும் தெரியவில்லை. மசோதாவை மதிப்பீடு செய்யும் அதிகாரம் ஆளுநருக்கு இல்லை," என்கிறார் வில்சன்.

"ஆளுநர் பெயரளவுக்கான நிர்வாகத் தலைவர். மக்களின் பிரச்னைகள் குறித்துத்தான் ஆளுநர் சிந்திக்க வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் ஆட்சியமைக்கின்றனர், மசோதாவை நிறைவேற்றுகின்றனர். அதை ஆதரிக்காமல், மக்களுக்கு எதிராக ஆளுநர் செயல்படுவதால்தான் அவரை திரும்பப் பெற வேண்டும் என்ற குரல் அதிகரித்திருக்கிறது" என்றார் வில்சன். பிபிசி தமிழிடம் பேசிய உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் பிரணவ், இதே கருத்தை தெரிவித்துள்ளார்.

"இந்த மசோதா சட்ட ரீதியாக தவறானதா என்பது குறித்து நீதிமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும். தவறானது என நீதிமன்றம் உத்தரவிட்டால், அரசு அதை அமல்படுத்த முடியாது. ஆனால், மாநில அரசின் முடிவு குறித்து கருத்து சொல்வதற்கோ, தீர்ப்பு சொல்வதற்கோ ஆளுநருக்கு எந்த அதிகாரமும் இல்லை" என்கிறார் பிரணவ்.

வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி தொடர்பான உச்ச நீதிமன்ற வழக்குக் குறித்து, ஆளுநர் மாளிகை குறிப்பிட்டுள்ளது குறித்துப் பேசிய வில்சன், "உச்ச நீதிமன்ற தீர்ப்புகளை ஒரு சட்டம் போன்று படிக்கக் கூடாது. அவை மாறிக்கொண்டே இருக்கும். அந்த குறிப்பிட்ட விஷயத்திற்கான தீர்ப்பாகத்தான் அதை எடுத்துக்கொள்ள வேண்டும். நீட் தேர்வுக்கு எதிராக எந்த சட்டமும் கொண்டு வரக்கூடாது என்று எந்த உத்தரவும் போடவில்லை" என்றார்.

**அரசுக்கு என்ன வாய்ப்புகள் உள்ளன?**

இது குறித்து உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் பிரணவ் சச்தேவா கூறு கையில், "மாநில அரசு மீண்டும் இது மசோதாவை நிறை வேற்றி அனுப்பினால், இம்முறை ஆளுநர் அதை கட்டா யம் குடியரசு தலைவருக்கு அனுப்பித்தான் ஆக வேண் டும். இரண்டாவது முறையும் அந்த மசோதாவை ஆளு நரால் நிராகரிக்க முடியாது. வழக்கமாக, மாநில அரசின் மசோதாக்களை ஆளுநர்கள் நிலுவையிலேயே வைத்திருப்பார்கள். அது தவறானது. ஆளுநர் மீண்டும் தாமதப்படுத்தினால் நீதிமன்றத்திற்கு செல்லலாம். ஆனால், இம்மாதிரியான வழக்குகளில் நீதிமன்றம் பெரும்பாலும் தலையிடாது," என்கிறார்.

உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே நீட் தேர்வை கட்டாயமாக்கியுள்ள சூழலில், இந்த மசோதாவின் சட்ட அங்கீகாரம் என்ன என்பது குறித்துப் பேசிய பிரணவ் சச்தேவா, "உச்ச நீதிமன்றம் நீட் தேர்வை கட்டாயமாக்கியுள்ளது. மத்திய அரசின் சட்டமும் உள்ளது. எனவே, சட்டபூர்வமாக, தமிழக அரசின் மசோதா எளிதில் இலக்காகக்கூடியதாக உள்ளது" என தெரிவித்தார்.

- பி.பி.சி.

# தமிழகத் தலைவர்களுடன் சென்னையில் நடந்த பேச்சு



இந்திய வெளிநாட்டு அமைச்சகத்தில் இணைச் செயலாளர் மோகன் என்பவரு டனும், கொழும்பு இந்தியத் தூதரகத்தில் துணைத் தூதர் மாணிக்கம் என்பவருடனும் இரா. சம்பந்தன் பேசி வருகிறார் என்பைதயும் மாவை சேனாதிராசா என்னிடம் கூறியிருந்தார்.



## இந்தியத் தலையீட்டை விரும்பாத தமிழரசுக் கட்சி -04-

மறவன்புலவு க. சச்சிதானந்தன்



**11.09.2006** அன்று மாலை பெண் விடுதலை என்ற தலைப்பில் பாரதியார் நினைவு நாள் விழா. தமிழக அரசின் விழா. என்னை அழைத்திருந்தனர். காலம் பிந்திேனாமெனினும் பத்மினி சிதம்பரநாதனை அந்நிகழ்ச்சிக்கு அழைத்துச் சென்றேன்.

**பொதுவுடைமை மார்க்கசீயர்**

மாவை சேனாதிராசா ஏற்பாடு செய்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர்களைப் பார்க்கச் சென்றோம். மா. வரதராசன், ஏ. கே. பத்மநாதன், இராமகிருஷ்ணன் உள்ளிட்ட 5 தலைவர்கள் இருந்தனர். தீக்கதிர் இதழ் ஆசிரியர் அங்கிருந்தார். சுருக்கமான சந்திப்பு.

அன்றும் வெளியே செய்தியாளர் கூடியிருந்தனர். பிபிசி நிருபருக்கு இரா. சம்பந்தன் பேட்டி கொடுத்தார்.

அன்று மாலை, பத்மினி சிதம்பரநாதன் என்னிடம் பேசினார். தான் வந்தே புதுடில்லி போவதற்காக என்றும் வந்த பின்பு தன்னையும் சேர்த்து அழைத்துச் செல்லாமல் விட்டு விட்டுச் செல்ல முயல்வதாகவும் மிக மனம் நொந்து கூறினார்.

தமிழக முதலமைச்சரைச் சந்திக்க விரும்பி, முதலமைச்சரின் உதவியாளருடன் வழமைபோல அன்றும் மாவை சேனாதிராசா பேசினார்.

**யார் யார் குழுவில்?**

*13.09.2006* அதிகாலை மாவை சேனாதிராசாவுடன் பேசினேன். பத்மினி சிதம்பரநாதனை டில்லிக்கு அழைக்காமல் விட்டுச் செல்வது உசிதமல்ல. திட்டமிடாமல் நடந்து கொண்டதால் வந்த விளைவு. இப்பொழுதாவது இரா. சம்பந்தனுடன் பேசுங்கள், அழைத்துச் செல்லுங்கள் என்றேன்.

இந்திய அரசு கடந்த 1983-91 காலப் பகுதியில் நடந்து கொண்ட முறைகள், அவற்றுக்கு நாம் ஈடு கொடுக்கமுடியாததால் ஏற்பட்ட பின் விளைவுகள், இந்திய அரசுக்குள்ளே எமக்கு எதிரானவர்கள் எம்மிடையே பிளவுக்கு முயல்வார்கள் என யாவற்றையும் விரிவாக என் அறிவுக்கு எட்டியதை மாவை சேனாதிராசாவுக்கு விளக்கினேன்.

இந்திய அரசு பெயரிட்டு ஐந்து பேரை அழைத்திருப்பதாகவும், இரா. சம்பந்தன், மாவை சேனாதிராசா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருக்குத் தனித்தனி அழைப்புகளையும் விமானப் பயணச் சீட்டுகளையும் கொழும்பில் இந்தியத் தூதரகம் வழங்க உள்ளதாகவும் இரா. சம்பந்தன் சொன்னதாக மாவை சேனாதிராசா என்னிடம் கூறினார்.

இந்திய வெளிநாட்டு அமைச்சகத்தில் இணைச் செயலாளர் மோகன் என்பவருடனும், கொழும்பு இந்தியத் தூதரகத்தில் துணைத் தூதர் மாணிக்கம் என்பவருடனும் இரா. சம்பந்தன் பேசி வருகிறார் என்பைதயும் மாவை சேனாதிராசா என்னிடம் கூறியிருந்தார்.

*18.9* தொடக்கம் *21.9* வரை அல்லது *19.9* தொடக்கம் *22.9* வரை டில்லியில் தங்கவேண்டியிருக்கும் எனவும், இந்திய அரசின் விருந்தினர்களாகத் தங்குவோம் எனவும் மாவை சேனாதிராசா கூறினார்.

**கி. வீரமணியுடன்**

மாவை சேனாதிராசா ஏற்பாடு செய்து, கி. வீரமணியுடன் பகல் 12 மணிக்குச் சந்திப்பு. நான் போகவில்லை. ஏனைய ஐவரும் போய் வந்தனர். கலைஞருடனான சந்திப்பை ஏற்படுத்த வேண்டுமென கி. வீரமணியிடம் மாவை சேனாதிராசா கேட்டுக் கொண்டார். கலைஞருக்கு அனுப் பிய கடிதப் படியையும் கொடுத்தார்.

மாலை 4 மணிக்கு வீட்டுக்குள் நுழைகிறேன், பத்மினி சிதம்பரநாதனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் சூடாகவே பேசிக்கொண்டிருந்தனர். தான் சென்னைக்கு வந்த காரணத்தையும் பின்னணியையும் சூழ்நிலையையும் பத்மினி சிதம்பரநாதன் கூறிக் கொண்டிருந்தார்.

**பாரதீய சனதாக் கட்சியுடன்**

மாவை சேனாதிராசா ஏற்பாடு செய்து, மாலை 5 மணிக்கு, பாரதிய ஜனதாக் கட்சி அலுவலகத்தில் சந்திப்பு. இல. கணேசன், சுகுமாரன் நம்பியார், குமாரவேலு ஆகியோர் இருந்தனர். யாவரும் போயிருந்தோம்.

விரிவான விளக்கமான கலந்துரையாடல். இரா. சம்பந்தன் வரலாற்று விவரங்களைச் சொன்னார். திருகோணமலை பறிபோவைதச் சொன்னார். சிவாஜிலிங்கம் தெளிவாக விவரங்களைச் சொன்னார். பேச்சு வார்த்தையில் அளவுக்கதிகமாக விட்டுக் கொடுத்து நடந்த விடுதலைப் புலிகளின் அமைதி ஆர்வத்தைக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எடுத்துக் கூறினார்.

தமிழரின் பாதுகாப்புத் தமிழரிடமே இருக்கக் கூடிய அமை தித் தீர்வை நோக்கி இந்தியா உதவக் கோரினேன்.

செய்தியாளர் வெளியே கூடியிருந்தனர். இரா. சம்பந்தன் பேசினார்.

**சம்பந்தரின் நிலை**

மாவை சேனாதிராசா ஏற்பாடு செய்து, பழ. நெடுமாறனைச் சந்திக்கப் போனோம். இரா. சம்பந்தன், பத்மினி சிதம்பரநாதன், மாவை சேனாதிராசா மூவருடன் நானும் ஒரே வண்டியில் போனோம்.

தூதுக்குழுவின் எண்ணிக்கையையும், யார் எவர் என்பைதயும் தலைவராகிய நீங்கள் தீர்மானியுங்கள். டில்லியிடம் பேசுங்கள். பத்மினி சிதம்பரநாதனைத் தனிமைப் படுத்துவது நல்லதல்ல, அவரையும் சேர்த்துக் கொண்டு போங்கள். எனக்குத் தெரிந்தவர்கள் மூலம் டில்லிக்குப் பேசட்டுமா என்று இரா. சம்பந்தனிடம் கூறினேன். மற்ற இருவரும் கேட்டுக் கொண்டிருந்தனர்.

என்னுடைய தீர்மானங்கள் எப்பொழுதும் சரியானதாகவே இருக்கும். நீங்கள் இது தொடர்பாக வேறு யாருடனும் பேசினால் எனக்கும் அதற்கும் தொடர்பில்லை எனச் சொல்லிவிடுவேன் என்றார் இரா. சம்பந்தன்.

**நெடுமாறனிடம்**

பழ. நெடுமாறன் வீட்டில் மாலை 7 மணியளவில் சந்திப்பு. அனைவரும் போயிருந்தோம். பிரதமரிடம் என்னென்ன பேசவேண்டும் எனக் கேட்டேன். உங்களுக்குத் தெரியாததா? என்றார். உங்கள் கருத்து என்ன என்பைதக் கூறுங்கள் என்றேன்.

வரிசைப் படுத்தித் தமது கருத்துகளை நெடுமாறன் எம்மிடம் தெரிவித்தார். *15.09.2006* வெள்ளி மாலை இரவுணவுக்கு வாருங்கள் என அவரை மாவை சேனாதிராசா அனைவர் சார்பிலும் அழைத்தார். செய்தியாளர் எவரும் அங்கு வரவில்லை.

பிரதமருக்கு ஈழத்தமிழர் சார்பில் கொடுக்கும் கடித வரைவு தயாரிப்பதில் *14.09.2006* அன்று என் வீட்டில் ஈடுபட்டோம். சிவாஜிலிங்கம் வரவில்லை.

சுருக்கமாக எழுதவேண்டும் என்பதில் சிலர், நீண்டே எழுதலாம் எனச் சிலர் கூற, வரைவுக்குரிய பனுவலை இரா. சம்பந்தன் தன் கைப்பட எழுத, பின்னர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தட்டச்சுச் செய்தார்.

அங்கிருந்தோர் சொன்னனவும் இருந்தன, சொன்ன பல விடுபட்டும் இருந்தன. சொல்லாதனவும் இருந்தன. *7.9* தொடக்கம் *14.9* வரை எழுதிய, எழுதிக்கொண்டிருந்த பனுவல் 8 பக்கங்கள் வரை நீண்டது.





**மடத்தனமானதே**

இவ்வாறு எழுதிக் கொண்டிருக்கையில், இரா. சம்பந்தன், என்னைப் பார்த்து, சச்சி, தமிழர் தாயகத்தின் பாதுகாப்புத் தமிழரிடமே இருக்கவேண்டிய தேவை பற்றிப் பாஜக விடம் நீங்கள் கூறியது மடத்தனமான கருத்து என்றார்.

நீண்ட எல்லைகளையும் பரந்த நிலப்பகுதியையும் காக்கும் படைகளை நாம் வைத்திருக்க முடியுமா? எனக் கேட்டார்.

அடித்தளத்திலேயே கை வைக்கிறாரே? சொல்லாட்சி கூடப் பொருத்தமானதாக இல்லையே!


உங்கள் சொல்லாட்சியைப் பொருட்படுத்தவில்லை, 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம் எந்தத் தனமானேதா, அந்தத் தனமானதுதான் நான் தொடர்ந்து பாஜக விடம் மட்டுமல்ல, இங்குள்ள அரசியல் தலைவர்களிடமும் வலியுறுத்தி வருகிற கருத்து என்றேன்.

மாவை சேனாதிராசாவும் நானும் அந்தக் கருத்தை வலியுறுத்தியே தமிழகத் தலைவர்களிடம் பேசி வந்தோம். சிவாஜிலிங்கமும் அதையே தமிழகத் தலைவர்களிடம் பேசி வருகிறார்.

மாவை சேனாதிராசாவுக்கு இது நன்றாகத் தெரிந்தும் அவர் வாய் திறக்கமால் இருந்தமை, தமிழகத் தலைவர்களிடம் தான் பேசியைதத் தன் தலைவரிடமே பேச முயலாமல் மௌனியாக இருந்தமை வியப்பாக எனக்கு இருக்கவில்லை. நாடாளுமன்றப் பதவி அரசியலே அதுதான்.

**அடுத்த வாரமும்...**

# சர்வதேச அளவில் சாதனை படைத்த இலங்கையின் விஞ்ஞானிகள்







உலகத்தில் சாதானை படைத்த விஞ்ஞானிகளின் பட்டியலில் நம் நாட்டு விஞ்ஞானிகளும் காணப்படுகின்றமை இங்கு எமது நாட்டிற்கும் விஞ்ஞானத்திற்கும் பெருமை சேர்ப்பதாகவே காணப்படுகின்றது.

இலங்கை விஞ்ஞானிகளும் அவர்களின் சாதானைகளும் என்னும் விடயத்தில்  இங்கு மிகவும் பிரசித்தமான எம் நாட்டு விஞ்ஞாகளின் விபரம் மற்றும் அவர்களின் சாதானைகள் குறித்து சுருக்கமாக   சில விபரங்களை பார்ப்போம்.

உலசடை சிறில் பொன்னம்பெரும இலங்கையின் விஞ்ஞானிகளில் முக்கியமான ஒருவர்.

1923ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி இலங்கையில் காலியில் பிறந்தார். அவர் காலி, புனித. அலோசியஸ் கல்லூரியிலும் அதைத் தொடர்ந்து கொழும்பு புனித. யோசப் கல்லூரியிலும் கல்வி பயின்றார். அவர் சென்னை பல்கலைக்கழகத்தில் தத்துவயியலில் இளமானி பட்டம் பெற்றார். அவர் 1959ஆம் ஆண்டு இலண்டன் பிறிஸ்பெக் பல்கலைக் கழகத்தில் இரசாயனத்தில் இளமானி பட்டம் பெற்றார். 1962ஆம் ஆண்டு அவர் நொபெல் லொரேட் மெல்வின் கல்வின் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் பெர்க்லே, கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் இரசாயனவியலில் கலாநிதி பட்டம் பெற்றார்.

1962ஆம் ஆண்டு, ஏமெஸ் ஆய்வு மையத்தில் நாஸா நியைத்துடன் சேர்ந்து வதிவிட ஒன்றியத்தின் விஞ்ஞானத்தில் தேசிய கல்வி நிலைய விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். 1963ஆம் ஆண்டு நாஸாவின் உயிரியல் பிரிவில் இணைந்துகொண்டதோடு இரசாயான பரிணாம பிரிவின் பிரதான பகுதியின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அப்போலோ செயற்றிட்டத்தின் கீழ் சந்திரனிலிருந்து பூமிக்கு கொண்டுவரப்பட்ட மண்ணைப் பகுப்பாய்வு செய்வதற்கு பிரதான புலனாய்வாளராக இவர் தெரிவுசெய்யப்பட்டார். அதன் பின்னர், இவர் வைகிங் மற்றும் வொயேஜர் நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகளில் நாஸாவுடன் (NASA) நெருங்கி பணியாற்றினார். அத்துடன் நாஸாவின் விண்வெளி விஞ்ஞான ஆலோசனை பேரவையிலும் வாழ்நாள் விஞ்ஞான ஆலோசனை பேரவையிலும் இவருக்கு அங்கத்துவம் வழங்கப்பட்டது.

“சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்ட இலங்கை விஞ்ஞானிகள் இவரைவிட வேறு ஒருவருமில்லை” என்பது ஆர்தர் சி. கிளார்கின் கருத்தாகும். அவருடைய குறுகிய வாழ்நாளில் 400க்கு மேற்பட்ட விஞ்ஞான வெளியீடுகளை அவர் வெளியிட்டுள்ளதோடு கல்விமானாக பல பதவிகளையும் வகித்துள்ளார்.

ஐ.எம். தர்மதாச குறிப்பிடத்தக்க மற்றொரு இலங்கையின் விஞ்ஞானி.

இரசாயனவியல், பௌதிகவியல் மற்றும் கணிதவியல் என்பவற்றில் இரண்டு இளமானி விசேட கௌரவ பட்டங்களைப் பூர்த்திசெய்து இலங்கை பேராதெனிய பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றுள்ளார். 1977ஆம் ஆண்டு பகிரங்க பொதுநலவாய புலமைப்பரிசை வென்று தர்ஹாம் பல்கலைக்கழகத்தில் 1980ஆம் ஆண்டு அவருடைய PhD ஆய்வுகட்டுரையைப் பூர்த்திசெய்தார்.

பேராசிரியர் தர்மதாச ஷெப்பீல்ட் ஹல்லாம் பல்கலைக்கழகத்தில் இலத்திரனியல் பொருட்கள் மற்றும் கருவிகளில் சிரேஸ்ட பதவிநிலை தர பேராசிரியராக இருக்கின்றார். அவருடைய ஆய்வுகள் அடுத்த தலைமுறையின் அபிவிருத்தி மற்றும் குறைந்த செலவு மற்றும் கூடிய வினைத்திறன்மிக்க சூரிய கலம் என்பவை தொடர்பிலும், கைத்தொழில் மற்றும் கல்வித்துறை ஆகிய இரண்டிலும் அவருக்கு சுமார் நான்கு தசாப்த அனுபவம் உண்டு. அவர் 250க்கு மேற்பட்ட கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். அவற்றில் அவரே எழுதிய“மென் சவ்வு சூரிய கலங்களில் உள்ள அனுகூலங்கள்” என்ற நூலும் உள்ளடங்குகின்றது. அவருடைய படைப்புகள் புதிய அபிவிருத்தி நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டு ஆறு ஆக்கவுரிமைகளைப் பெற்றுள்ளது.



மேலும் அவர் ஒளி மின்னழுத்த சூரிய கலங்களின் விருத்தி பற்றிய இரண்டு புதிய விஞ்ஞான மாதிரிகளை முன்மொழிந்துள்ளார்.

கலாநிதி இளங்கசேகர குறிப்பிடப்பட வேண்டிய மற்றொரு இலங்கை விஞ்ஞானி.

இலங்கை பல்கலைக்கழகத்தில் சிவில் பொறியியலில் (1971) விஞ்ஞான இளமானி (விசேட) பட்டத்தைப் பெற்றார். ஆசிய தொழில்நுட்ப நிறுவகத்தில் நீரியல் மற்றும் நீர்வள அபிவிருத்தியில் (1974) முதுமானி பட்டம் பெற்றார். தனது PhD பட்டத்தை (1978) கொலராடோ அரச பல்கலைக்கழகத்தில் சிவில் பொறியியலில் பெற்றுக்கொண்டார். அத்துடன் சுவீடன், அப்சலா பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் கௌரவ கலாநிதி பட்டம் பெற்றார்.

ஊடுருவத்தக்க மற்றும் பகுதிபடுத்தத்தக்க ஊடகத்தில் பாய்வு மற்றும் கொண்டு செல்லத்தக்கவைகளை மாதிரிப்படுத்தல் என்பதே உருமாதிரி இளங்கசேகர அவர்களின் முதன்மை ஆய்வு பகுதியாக இருந்தது. அவருடைய ஆய்வில் பல பகுதிகள் உள்ளடங்கியிருந்தன. அவையாவன மண் பாய்வில் செறிவுள்ள மற்றும் செறிவற்ற எண் உருமாதிரி பகுதிகள், பகுதிபடுத்தப்பட்டதுமான மேற்பரப்பு-துணை மேற்பரப்பு, உலர் வலய நீரியல், ஒருங்கிணைக்கப்பட்ட நிர் உருமாதிரி, துணை பனிக்கட்டி பாய்வு, கரைந்த மற்றும் பன்னிலை கழிவுகளைக் கொண்டு செல்தல், சூழலியல் கண்காப்புக்கு கம்பியில்லாணி உணர்வலை வலையமைப்பு மற்றும் புலமையுள்ள பரிகாரம் மற்றும் வலுசக்தி அபிவிருத்தியில் சூழலியல் அழுத்தங்கள் என்பவை அவருடைய ஆய்வில் உள்ளடங்கியிருந்த பகுதிகள் தரும்.

கலாநிதி திஸ்ஸ எச். இளங்கசேகர, ஜனாதிபதி பரக் ஒபாமா அவர்களால் 2017 ஜனவரி 18ஆம் திகதி ஐ.கு. அணு கழிவு தொழில்நுட்ப மீளாய்வு சபைக்கு நியமிக்கப்பட்டார். அவர் AMAX கௌரவிக்கப்பட்ட சூழலியல் மற்றும் பொறியியல் தலைவராக பதவி வகித்தார். துணை மேற்பரப்பு சூழலியல் நடைமுறையின் (CESEP) பரிசோதனை ஆய்வு நிலையத்தின் பணிப்பாளராகவும் சிவிலி பொறியியல் பேராசிரியராகவும் செயலாற்றினார்.

இவ்வாறு விஞ்ஞாகளின் வரலாறு காணப்படும் அதேவேளை இன்னமும் இலை மறை காயாக பல விஞ்ஞாகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

---


**▶ பொன்னம்பலம் விஜயகுமாரன்**
**விரிவுரையாளர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி கோப்பாய்**
**▶ ஜஸ்மின் சரண்யா சக்திகுமாரன்**
**இரண்டாம் வருட விஞ்ஞான மாணவ ஆசிரியர்**

# நியூசிலாந்தில் தமிழருக்கு உயரிய விருது

**தமிழ் சமூகத்தில் மட்டுமன்றி, நியூசிலாந்தின் பரந்துபட்ட சமூக மட்டத்திலேயும் பரவலான செயற்பாடுகளிலே ஈடுபடுபவர். காத்திரமான பங்களிப்புக்களை வழங்குபவர். அந்தவகையிலே, சமூக சேவைக்கான உயரிய விருது வழங்கி ஜோர்ஜ் அருளானந்தம் அவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளமை சாலப் பொருத்தமானதாகும்.**

**நியூசிலாந்து சிற்சபேசன்**





நியூசிலாந்தின் உயரிய விருதொன்று தமிழர் ஒருவருக்குக் கிடைத்துள்ளது. தேசத்துக்குச் சேவையாற்றியவர்களைக் கௌரவிக்கும் வகையில், ஒவ்வொரு புதிய ஆண்டு பிறக்கின்றபோதும் நியூசிலாந்திலே உயர் விருதுகள் அறிவிக்கப்படுகின்றன. சமூகசேவை, கல்வி, சுகாதாரம், அறிவியல், ஆராய்ச்சி, இராணுவச்சேவை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலான பங்களிப்புக்களே இவ்வாறாகப் பெருமைப்படுத்தப்படுகின்றன.

அந்தவகையிலே, ஆக்லாந்து வாழ் தமிழரான ஜோர்ஜ் அருளானந்தம் சமூகத்துக்கு வழங்கிய சேவைகளைக் கௌரவிக்கும் வகையில், நியூசிலாந்தின் உயரிய விருதொன்று வழங்கி 2022ஆம் ஆண்டில் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

பசுபிக் சமுத்திரத்தின் தென்மேற்கில் இரண்டரை லட்சம் சதுரகிலோ மீட்டர் நிலப்பரப்பிலே ஐந்து மில்லியன் மக்கள் தொகையைக் கொண்டதே நியூசிலாந்தாகும். அஃது வெண்முகில்கூட்டங்களின் தேசமென வர்ணிக்கப்படுகின்றது. மொத்தச் சனத்தொகையில் எழுபது விழுக்காடு ஐரோப்பிய பின்புலத்தைக் கொண்டவர்களாகும். பூர்வீகக்குடிகளான மவோரி இனத்தவர் இரண்டாவது பெரிய இனக்குழுவாகும். மிகுதி, ஆசியா, பசுப்பிக் உள்ளிட்ட பிறபின்புலங்களைக் கொண்டோராகும்.

ஐரோப்பியப் பின்புலத்தைக் கொண்டிராதவர்களின் குடிபெயர்வுக்கு நியூசிலாந்தின் குடிவரவு வரைமுறைகள் அனுகூலமானதாக நெடுங்காலமாகக் காணப்படவில்லை. 1980களில் குடிவரவு அணுகுமுறையில் மாற்றங்கள் ஏற்பட்டன. அதனைத் தொடர்ந்த காலங்களில் ஐரோப்பிய பின்புலத்தைக் கொண்டிராதவர்களும் குடிபெயர்வதற்கான வாய்ப்புகள் அதிகரித்தன. அதன்பின்னர் தமிழரின் வருகை படிப்படியாக அதிகரித்தது. ஆனாலும் 1960களிலிருந்து நியூசிலாந்தில் தமிழர் வாழ்கின்றனர்.

அந்தவகையிலே நியூசிலாந்திற்கு தமிழர் புலம்பெயர ஆரம்பித்து சுமார் அரைநூற்றண்டு கடந்திருக்கின்றது. கல்வி, பொறியியல், மருத்துவம், அரசசேவை எனப் பல்வேறு துறைகளிலும் தமிழரின் வளர்ச்சியை அவதானிக்க முடிகின்றது. கவனிக்கப்படக்கூடிய சமூகமாக தமிழர் ஏற்றமடைகின்றனர். அந்தவகையிலேயே ஜோர்ஜ் அருளானந்தம் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள விருதும் கவனிப்பைப் பெறுகின்றது.

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை உயரப்புலத்தைப் பூர்வீகமாகக் கொண்டவரே ஜோர்ஜ் அருளானந்தம் அவர்களாகும். அவர் தனது ஆரம்பக்கல்வியைப் பாட்டனார் றப்பியல் சட்டம்பியாரால், ஏறத்தாழ நூறு ஆண்டுகட்கு முன்னர், ஸ்தாபிக்கப்பட்ட ஆனைக்கோட்டை ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்பித்தவர். உயர்கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பயின்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் இளமானிப் பட்டத்தையும், பாங்காக்கிலுள்ள, சர்வதேசப் புகழ்பெற்ற, ஏசியன் இன்ஸ்டிடியூட் ஒவ் டெக்னோலாஜியில் பொறியியல் முதுமானிப் பட்டதையும் பெற்றவர்.




1990களின் பிற்பகுதியில் நியூசிலாந்துக்குப் புலம்பெயர்ந்தவர். சமூகச் சிந்தனை கொண்டவர். சமூகத்தில் ஆரோக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும். அதற்குப் பங்களிப்புச் செய்யவேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர். அதனால் சமூகப்பணிகளில் ஈடுபடுபவர். புதிய தேசத்துக்கு புலம்பெயரும்போது வேலைதேடல், குடும்பம், வதிவிடம், பிள்ளைகளின் கல்வி எனப் பலமுனைகளிலே அதிககவனம் தேவைப்படுவதாகும். அத்தகைய சூழ்நிலையிலும்கூட, தானுண்டு தன்னுடைய குடும்பம் என ஜோர்ஜ் அருளானந்தம் அவர்களால் இருந்துவிடமுடியவில்லை. அன்றைய காலப்பகுதியில், தாயகத்தில் காணப்பட்ட சூழலினால் பலர் நியூசிலாந்துக்கு அகதி அந்தஸ்துக் கோரி வந்திருந்தனர். அத்தகையோருக்கு வேண்டிய ஆலோசனைகளையும், உதவிகளையும் செய்தவர். அதனுடைய தொடர்ச்சியாக நியூசிலாந்து தமிழ் அமைப்புக்களுடன் நெருக்கமாகச் செயற்பட்டவர். நியூசிலாந்து தமிழ் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை அலங்கரித்தவர்.



நியூசிலாந்து அரசியல் சமூக மட்டத்தில் தமிழ் சமூகச் செயற்பாட்டாளராக நன்கு அறியப்பட்டவர். நியூசிலாந்து தமிழ் சமூகத்தில் ஆரோக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும் என்னும் தீர்க்கமான பார்வை கொண்டவர். சமூகத்தின் அடையாளத்தைக் காத்திரமாகப் பேணுவதற்கு மொழி அவசியம் என்பதை உணர்ந்தவர். அதனால், தமிழ்க் கல்வியை வழங்கக்கூடிய வாரஇறுதிப் பாடசாலைகளின் அவசியத்தை உணர்ந்து செயற்பட்டவர்.

இவருடைய அர்ப்பணிப்பான சமூகப்பணிகளின் அத்திவாரமே இவரது குடும்பமாகும். மனைவி உமா ஜோர்ஜ், பிள்ளைகள் நிருபா, நிருஷா ஆகியோரும் சமூகம்சார்ந்த செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபடுபவர்கள்.

குடாநாட்டில் அசாதாரண சூழ்நிலை காணப்பட்ட காலங்களில், பொறியியல் துறை சார்ந்த அவருடைய காத்திரமான பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். போக்குவரத்துதடை, மின்வெட்டு, இராணுவக்கெடுபிடி என்றவகையிலான இறுக்கமான சூழலாகும். போக்குவரத்துத்தடை காரணமாக வைத்தியசாலைகளிலேயுள்ள இயந்திரங்கள் தொடர்பில் பாரிய சிக்கல்கள் எழுந்தன. அவற்றிலே ஏற்படுகின்ற கோளாறுகளைச் சீர்செய்ய முடியவில்லை. இயந்திரங்களுக்கான மருத்துவத்தர உதிரிப்பாகங்கள் கிடைக்கவில்லை. கூடவே, தொழிநுட்ப தேர்ச்சியுடைய ஆளணிவளம் இருக்கவில்லை. அதனால் எக்ஸ்ரே கருவிகளைத் திருத்த முடியவில்லை. சத்திரசிகிச்சைக்கு ஆதாரமான உபகரணங்களைப் பேணமுடியவில்லை.

அன்றையகாலப்பகுதியில் ஜோர்ஜ் அருளானந்தம் அவர்கள் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் பொறியியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர். அவருடையை பொறியியல் பேராசானான மாமனிதர் பேராசிரியர் துரைராஜா அன்றையகாலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக இருந்தவர். “இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன்கண் விடல்” என்னும் வள்ளுவன் வாக்கின்படி மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் மாணவனாக ஜோர்ஜ் அருளானந்தம் அவர்களின் திறமைகளைப் பேராசிரியர் துரைராஜா அறிந்திருந்தார். அதனால் வைத்தியசாலை உபகரணங்களை சீர்செய்யும் பணிகளில் ஈடுபடுத்தினார். மிகத்தெளிவாகவும், திறமையாகவும் செயற்பட்டு மருத்துவ உபகரணங்களைச் சீர்செய்வதிலே பங்குகொண்டு “காலத்தினால்செய்த நன்றி சிறிதுஎனினும், ஞாலத்தின் மாணப் பெரிது” என மாமனிதர் பேராசிரியர் துரைராஜாவின் அன்பையும் பாரட்டையும் பெற்றவர்.

தமிழ் சமூகத்தில் மட்டுமன்றி, நியூசிலாந்தின் பரந்துபட்ட சமூக மட்டத்திலேயும் பரவலான செயற்பாடுகளிலே ஈடுபடுபவர். காத்திரமான பங்களிப்புக்களை வழங்குபவர். அந்தவகையிலே, சமூகசேவைக்கான உயரிய விருது வழங்கி ஜோர்ஜ் அருளானந்தம் அவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளமை சாலப்பொருத்தமானதாகும்.



## கவர்ச்சியின் உச்சம்

மாலைதீவு சென்றுள்ள மாளவிகா மோகனன் வித விதமான கவர்ச்சிப் படங்கள் மூலம் ரசிகர்களை மகிழ்ச் சிப்படுத்தி வருகின்றார்.

கவர்ச்சியின் உச்சம் என்று கூறுமளவுக்கு அவரின் படங்கள் சமூகவலைத்தளங்களில் பிரபலமாகி வருகின் றன.

நீச்சல் உடையில் ஒளிப்படங்களை வெளியிட்ட அவர் “கடலுக்குள் என்னுடைய வழியைத் தேடிக் கொண்டிருக்கிறேன்,” என்றும் பதிவிட்டுள்ளார்.



## மகான் டீசர் வெளியானது

கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் விக்ரம், துரு விக்ரம் இணைந்து நடித்துள்ள படம் மகான். இந்த படம் எதிர் வரும் 10ஆம் திகதி அமேசன் பிரைமில் வெளியாகிறது.

இதன் டீசர் அண்மையில் வெளியானது. அதில் ஆடுகளம் நரேன் சிறுவனாக இருக்கும் தனது மகனை பார்த்து காந்தி மாதிரி ஒரு மகானாக வாழ்வியா? என்று திரும்ப திரும்ப கேட்பது போன்றுஆரம்பிக்கிறது. அந்த மகன்தான் பின்னர் விக்ரமாக மாறுகிறார்.

இதையடுத்து தனது தந்தைக்கு கொடுத்த வாக்குறு திப்படி காந்தி மகனாக விக்ரம் வாழ்ந்தாரா? இல்லை அதற்கு நேரெதிராக வாழ்ந்தாரா? என்பதையே டீசர் கூறுகிறது.

## சிவகார்த்திகேயனின் நாயகி



தென்னிந்திய திரையுலகின் முன்னணி நாயகியாக வலம்வரும் சாய் பல்லவி சிவகார்த்தி கேயனின் 21ஆவது படத்தில் நாயகியாக நடிக்கவுள்ளார்.

டாக்டர் படத்தை அடுத்து சிவகார்த்தி கேயன் நடித் துள்ள டான் படம் மார்ச் 25ஆம் திகதி வெளியாகிறது. அதையடுத்து தெலுங்கு இயக்குநர் அனுதீப் இயக்கும் படத்தில் நடித்து வரும் சிவகார்த்திகேயன், அந்த படத்தை முடித்ததும் கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் தயாரிப்பில் ராஜ்குமார் பெரியசாமி இயக்கும் படத்தில் நடிக்கப் போகிறார்.

இந்த படத்திலேயே சிவகார்த்திகேயனுக்கு நாயகி யாக நடிக்கவுள்ளார். எனினும், இதனை தயாரிப்பு தரப்பு இன்னமும் உறுதி செய்யவில்லை.

## பிசாசு 2இல் விஜய்சேதுபதி!

விஷால் நடித்த துப்பறி வாளன் 2 படத்தை இயக்கி வந்தபோது அவருடன் ஏற் பட்ட பிரச்னை காரணமாக அந்த படத்தில் இருந்து வெளி யேறினார் மிஷ்கின்.

இதையடுத்து ஏற்கனவே தான் இயக்கி வெற்றி பெற்ற பிசாசு படத்தின் இரண்டாம் பாகத்தை தொடங்கினார். அண்ட்ரியாவை பிரதானப் படுத்தி எடுத்த நிலையில், இரண்டாம் பாகத்துக்கு முதல் படத்தில் சிறப்பு தோற்றத்தில் நடித்த விஜய் சேதுபதியை நாய கனாக ஒப்பந்தம் செய்துள்ளார்.



## திரை விமர்சனம்




**திரைப்படம் : வீரமே வாகை சூடும்**
**இயக்கம் : து.ப.சரவணன்**
**இசை : யுவன்ஷங்கர் ராஜா**
**நடிப்பு : விஷால், டிம்பிள் ஹயாத்தி, யோகிபாபு**

பொலிஸ் கொன்ஸ்டபிள் மாரிமுத்துவின் மகன் விஷால். பொலிஸ் வேலைக்காக காத்திருக்கிறார். விஷாலின் தங்கை ரவீனா ரவிக்கு அந்த பகுதியின் ரௌடியின் தம்பி அடிக்கடி காதல் தொல்லை கொடுக்கிறார். இதனால் சண்டையும் வருகிறது. இந்நிலையில் ரவீனா ரவி கொலை செய்யப்படுகிறார். தன் தங்கை ரவீனா கொலையில் வேறு ஏதோ விவகாரம் இருக்கிறது என சந்தேகப்படும் விஷால், பொலிஸ் ஆவதற்கு முன் இந்த வழக்கை விசாரித்து உண்மைக் குற்றவாளிகளை கண்டுபிடிக்க முயல்கிறார். அதில் வாகை சூடினாரா இல்லையா என்பது தான் படத்தின் மீதி கதை.

கோபாவேசம், சண்டை படங்களில் என கதாபாத்திரத்தில் விஷால். அவரின் கதாபாத்திர பெயர் போரஸ். அந்தப் பெயர் ஏன் என்ற கேள்விக்கு இறுதிக்கட்டத்தில் விடை தருகிறார்கள். இந்த மாதிரி கதாபாத்திரம் எல்லாம் விஷாலுக்கு சர்வ சாதாரணம். வழக்கம் போல் வெளுத்து வங்கியிருக்கிறார். குறிப்பாக விஷாலின் சண்டைக் காட்சிகளில் சண்டை பயிற்றுநர்கள் தனிக் கவனம் செலுத்தியுள்ளனர்.

படத்தில் விஷால் காதலியாக டிம்பிள் ஹயத்தி. நாயகனுக்கு முக்கியத்துவம் உள்ள படத்தில் நாயகிக்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கும் என்பது நம் அனைவருக்கும் தெரியும். கிடைத்த ஒரு சில காட்சிகளில் மிரள வைக்கிறார்.

விஷாலின் நண்பனாக யோகிபாபு. தேவைப்படும் காட்சிகளில் அவரை வர வைத்து படம் முழுவதும் இருப்பது போல் செய்திருக்கிறார்கள். அவ்வப்போது சிரிக்க வைக்கிறார், மற்ற படி தோழனுக்கு தோள் கொடுப்பவராக இருக்கிறார்.

வில்லனாக பாபுராஜ். ஒரு சில படங்களில் நடித்திருந்தாலும் இந்தப் படத்தில் தனி வில்லனாக மிரட்ட முயற்சித்திருக்கிறார். விஷாலின் அப்பாவாக மாரிமுத்து, அம்மாவாக துளசி நடுத்தரக் குடும்பத்து பெற்றோர்களை கண்முன் நிறுத்துகிறார்கள்.

விஷாலின் தங்கையாக ரவீனா ரவி. நமது குடும்பத்தில் ஒருவராக, நமது பக்கத்து வீட்டில் இருக்கும் ஒருவராகத் தெரிகிறார். ரௌடியின் தம்பியிடம் சிக்கித் தவிக்கும்போது பரிதாப்பட வைக்கிறார்.

யுவன்ஷங்கர் ராஜாவின் இசையில் ஒரே ஒரு டூயட் பாடல் மட்டும் கொஞ்சமாக ரசிக்க வைக்கிறது. படத்தின் ஆரம்பத்தில் என்ன சொல்வது என இயக்குநர் தடுமாறியது தெரிகிறது. எதையெதையோ சொல்லிவிட்டு இடைவேளைக்கு சற்று முன்பாகத்தான் கதைக்குள்ளேயே வருகிறார்.

டீசர், டிரைலரில் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய படம். ஆனால், அந்த எதிர்பார்ப்பையெல்லாம் தவிடுபொடியாக்கியுள்ளது படம்.



## ஆர். ஆர். ஆர். வெளியீடு?

‘பாகுபலி’ படங்களுக்கு பின் ராஜமவுலி இயக்கி உள்ள பிரம்மாண்ட படைப்பு ‘ஆர். ஆர். ஆர்’. ஜூனியர் என். டி. ஆர், ராம் சரண் தேஜா, ஆலியாபட், அஜய் தேவ்கான், சமுத்திரகனி உள்ளிட்டவர்களுடன் ஆங்கில நடிகர்கள் சிலரும் நடித்துள்ளனர். இந்திய சுதந்திர போராட்டத்தை மையமாக வைத்து இந்தப் படம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 7ஆம் திகதி இந்தப் படம் வெளியாவ தாக இருந்தது. ஆனால், தொற்று பரவலால் வெளியாக வில்லை. இந்நிலையில் வரும் மார்ச் 18இல் படம் வெளியிடத் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், எதிர்வரும் மார்ச் 25ஆம் திகதி படத்தை வெளியிடத் திட்டமிட்டுள்ளனர்.



## மீண்டும் ஸ்ரீதிவ்யா

வருத்தப்படாத வாலிபர் சங்கம் படத்தின் மூலம் பலருடைய கவனத்தை ஈர்த்த நடிகை ஸ்ரீதிவ்யா, அடுத்ததாக பிரபல நடிகருக்கு ஜோடியாக மீண்டும் நடிக்க இருக்கிறார்.

வெள்ளக்கார துரை படத்தில் விக்ரம் பிரபுவுடன் இணைந்து ஸ்ரீதிவ்யா நடித்து இருந்தார். தற்போது நீண்ட இடைவெளிக்கு பிறகு மீண்டும் அவருக்கு இணையாக டைகர் என்னும் படத்தில் இணைந்துள் ளார் ஸ்ரீதிவ்யா.

இப்படத்திற்கு இயக்குனர் முத்தையா கதை வசனம் எழுத இயக்குநர் கார்த்தி இந்தப் படத்தை இயக்க இருக்கிறார்.

# ரென்னிஸை விட்டு ஓடியவர்



ஆஷ்லே பார்ட்டி - இன்று ரென்னிஸ் உலகின் முதல்நிலை வீராங்கனை இவர்தான். 3 கிராண்ட் ஸ்லம் பட்டங்களை வென்றது மட்டுமல்ல 45 வருடங்கள் அவுஸ்திரேலியாவுக்கு கனவாக இருந்த ஆஸி. ஒப்பன் ரென்னிஸ் கிண்ணத்தை தனது தாய் நாட்டுக்கு பெற்றுக் கொடுத்தவர் இவர்தான்.

இவர் பங்கெடுத்த முதல் 12 கிராண்ட்ஸ்லம்களில், ஏழில் முதல் சுற்றோடு வெளியேறுகிறார். இரண்டு தொடர்களில் இரண்டாவது சுற்றோடு வெளியேறுகிறார். மூன்று முறை தகுதிச் சுற்றையே தாண்ட முடியவில்லை. சர்வதேச அளவில் அவரின் தரவரிசை 300இற்கும் கீழ்தான். திடீரென ரென்னிஸிலிருந்து இடைவிலகுவதாக அறிவிக்கிறார் 18 வயதான ஆஷ்லே.

இரு ஆண்டு இடைவெளியின் பின்னர் மீண்டும் 2017இல் ரென்னிஸுக்கு வருகிறார். தரவரிசையில் 271ஆவது இடத்தில் இருந்தவர் அந்த ஆண்டு இறுதியில் 17ஆவது இடத்துக்கு முன்னேறுகிறார்.

அந்த 2 வருட இடைவெளியில் ரென்னிஸ் நுணுக்கங்களை அவர் மாற்றினார் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், அதுதான் இல்லை. அவர் ரென்னிஸ் மட்டையைத் தொடாமல், கிரிக்கெட் துடுப்பைக் கையில் எடுத்து பிக் பாஷ் லீக்கில் ஆடினார். இவர்தான், கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்று இப்போது சாதிக்கிறார்.

# இந்தியாவின் புதிய வரலாறு




இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் மேற்கிந்திய தீவுகள் அணி மூன்று ஒரு நாள் போட்டிகள் மற்றும் மூன்று இருபது - 20 போட்டிகளை ஆடவுள்ளது. இன்று ஞாயிற்றுக் கிழமை தொடங்கும் ஒருநாள் தொடரின் அனைத்துப் போட்டிகளும் அகமதாபாத் நகரில் உள்ள நரேந்திர மோடி மைதானத்திலும், இருபது - 20 தொடர் முழுவதும் கொல் கத்தா ஈடன் கார்டன் மைதா னத்திலும் நடைபெறவுள்ளன.

ரோஹித் சர்மா தலைமையி லான இந்திய அணி, இந்தத் தொடரின் முதல் ஒருநாள் போட்டியில் விளையாடுவதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் வர லாற்றில் புதியதொரு மைல் கல்லை எட்டவுள்ளது. இதுவரை 999 சர்வதேச ஒரு நாள் போட்டிஷகளை விளை யாடியுள்ள இந்திய அணி, மேற் கிந்திய தீவுகளுக்கு எதிரான இந்தப் போட்டியின் மூலம் தனது 1000ஆவது ஒருநாள் போட்டியில் களமிறங்கவுள்ளது.

இதன் மூலம் உலக கிரிக் கெட் வரலாற்றில் 1000 ஒரு நாள் போட்டிகளில் விளையாடிய முதல் அணி என்ற பெருமையை பெறுகிறது இந்தியா.

1974ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக லீட்ஸ் நகரில் தனது முதல் ஒருநாள் போட்டி யில் விளையாடிய இந்தியா, அதில் 4 விக்கெட் வித்தியாசத்தில் தோற்றிருந்தது. அன்றிலிருந்து இன்று வரை சுமார் 48 ஆண்டுகளில் 999 போட்டிகளை விளையாடியுள்ள இந்தியா அதில் 518 வெற்றிகளையும் 431 தோல்விகளையும் பெற்றுள்ளது. 9 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன. மீதமுள்ள 41 போட்டிகள ரத்து செய்யப்பட்டன.

இந்தப் பட்டியலில் இந்தியாவுக்கு அடுத்தப்படியாக அவுஸ்திரேலியா (958 போட்டி கள்), பாகிஸ்தான் (932 போட்டிகள்) நாடுகள் உள்ளன. இந்தியாவின் முதல் ஒருநாள் போட்டியில் கேப்டனாக இருந்தவர் அஜய் வடேக்கர், 100ஆவது போட்டியில் கபில் தேவ், 200ஆவது போட்டியில் அசாருதீன், 300ஆவது போட்டி யில் சச்சின் டெண்டுல்கர், 400 ஆவது போட்டியில் அசாரு தீன், 500ஆவது போட்டி யில் சௌரவ் கங்குலி, 600ஆவது போட்டியில் வீரேந்தர் சேவாக், 700, 800, 900ஆவது போட்டி களில் எம்.எஸ். டோனியும் இந்திய அணிக்கு தலைவர்களாக செயல்பட்டனர். இந்த வரிசை யில் 1000ஆவது போட்டியில் இந்திய அணிக்கு தலைமை தாங்கவுள்ளார் ரோஹித் சர்மா.

ஒருநாள் போட்டியின் ஒரு இனிங்ஸில் அதிக ஓட்டங்கள் பெற்ற பட்டியலில் இந்தியா 5ஆவது இடத்தில் உள்ளது. 2011ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதி மேற்திந்திய தீவுகள் அணிக்கு எதிராக சேவாக் அடித்த 219 ஓட்டங்களின் உதவியோடு இந்தியா குவித்த 418 ஓட்டங்களே அந்த அதிக பட்ச ஓட்டமாகும்.

தனிப்பட்ட அணிகளுக்கு எதிராக இலங்கையுடன் மட் டும் 161 போட்டிகளை விளையாடியுள்ளது இந்தியா. இதில் 93 வெற்றிகளையும் 56 தோல்வி களையும் பெற்றுள்ளது. மேலும், அவுஸ்திரேலியாவுடன் 144 போட்டிகள், மேற்கிந்திய தீவுகளுடன் 133 போட்டிகள், பாகிஸ்தானுடன் 132 போட்டிகள், நியூசிலாந்துடன் 110 போட்டிகள், இங்கிலாந்துடன் 103 போட்டிகள் விளையாடியுள்ளது இந்தியா.




# கோடிகள் கொட்டப் போகும் ஐ. பி. எல்.!

ஐ.பி. எல். தொடரின் தொலைக்காட்சி உரிமம் தற் போது ஸ்ரார் நிறுவனத்தின் வச முள்ளது. இந்த நிறுவனத்துட னான ஒப்பந்தம் இவ்வருடத் தோடு நிறைவு பெறுவதால் 2023 முதல் 2027 ஆண்டுகளுக் கான ஏலம் மார்ச் இறுதியில் இணைய வாயிலாக நடைபெற லாம் எனத் தெரிகிறது. இந்த உரிமத்தை கைப்பற்ற சொனி ஸ்போர்ட்ஸ் நெட்வொர்க், டிஸ்னி ஸ்ரார் நெட்வொர்க், ரிலையன்ஸ் - வயாகாம் 18, அமேசன் முதலிய நிறுவனங் களுக்கிடையே கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படு கிறது.

ஐ. பி. எல். தொடங்கப்பட்ட 2008ஆம் ஆண்டிலிருந்து அடுத்த பத்து வருடங்களுக்கு அதன் ஒளிபரப்பு உரிமத்தை வைத்திருந்தது சொனி நிறுவனம். அந்த உரிமத்திற்கான அப்போதைய தொகை 8,200 கோடி இந்திய ரூபாய். அதற்கடுத்த ஐந்து வருடங்களுக்கான உரிமம் (2018-2022) 16,347 கோடி ரூபாய்களுக்கு ஸ்ரார் நிறுவனத்திடம் சென்றது.

தற்போது நடைபெறவிருக்கும் இந்த ஏலத்தில் இந்தத் தொகையானது இரண்டிலிருந்து மூன்று மடங்காக உயர வாய்ப்பிருக்கிறது. இந்திய கிரிக்கெட் சபையின் கணிப்புப்படி இந்த ஏல தொகை சுமார் 35,000 கோடி இந்திய ரூபாய் வரை செல்லலாம் என்று முதலிலிருந்தது. ஆனால் தற்போதைய நிலையில் இத் தொகை 40,000 முதல் 45,000 கோடி இந்திய ரூபாய் வரை உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நெகிழ்ச்சி ஒப்பந்தம்!

ஜனவரி மாத உதைபந் தாட்ட வீரர்கள் பரிமாற்றத்தில் வழக்கத்துக்கு மாறாக பல முன்னணி அணிகள் பெரிய தொகை செலவு செய்திருக்கின்றன. ஒரு சில அணிகள் சுமார் 100 மில் லியன் டொலர்கள் வரையிலுமே பணத்தை வாரி இறைத்திருக்கின்றன.

பிளிப் கொடினியோ, வெளட் வெகோர்ஸ்ட், கிரன் டிரிப்பியர் போன்றவர்கள் தாங்கள் இருந்த அணியிலிருந்து சிறிய அணிகளுக்கு மாற, கிறிஸ்டியன் எரிக்சன் மீண்டும் உதைபந்தாட்ட களத்துக்குத் திரும்பி ரசிகர்களை நெகிழ வைத்திருக்கிறார்.

மோசமான பொருளாதார நிலையில் இருந்த (இருந்ததாக சொல்லிக் கொண்ட) பார்சிலோனா திடீரென பெரிய பெரிய தொகை பரிமாற்றத்தில் இறங்கியுள்ளது. ஜாவியின் பயிற்சியில் பெரிய மாற்றங்களைக் கண்டுகொண்டிருக்கும் அந்த அணி, நிறைய ஸ்பெயின் வீரர்களை ஒப்பந்தம் செய்துள்ளது. மன்செஸ்டர் சிட்டி யிலிருந்து இளம் விங்கர் ஃபெரன் டாரஸை 60.5 மில்லியன் டொலர்களுக்கு வாங்கியது.


அதுமட்டுமல்லாமல், வோல்வர் ஹாம்ப்டன் வோண் டரர்ஸ் அணியிலிருந்து மற் றொரு ஸ்பெயின் அடாமா டிர யோரே கடன் மூலம் அந்த அணிக்கு ஒப்பந்தமாகியிருக்கிறார்.



பிறீமியர் லீக்கில் மிகப்பெரிய பரிமாற்றத்தை அரங்கேற்றியது லிவர்பூல். போர்டோ அணியின் அதிரடி வீரரான லூயிஸ் டியாஸை 49.5 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஒப்பந்தம் செய்திருக் கிறது.

பல முன்னணி வீரர்கள் அணிகள் மாறியிருந்தாலும், ரசிகர்களை நெகிழ வைத்தது பிரென்ட்ஃபோர்ட் செய்த ஓர் ஒப்பந்தம்தான். கடந்த யூரோ 2020 தொடரின்போது மார டைப்பு ஏற்பட்டு களத்திலேயே விழுந்த டென்மார்க் வீரர் கிறிஸ்டியன் எரிக்சனை ஆறு மாத காலத்துக்கு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். இன்ரர் மிலன் அணியில் விளையாடிக் கொண்டிருந்த அவர், நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் உதைபந்தாட்டத்துக் திரும்புவதால் ரசிகர்கள் மிகவும் நெகிழ்ச்சியடைந்து உள்ளனர்.

# இலக்கிய விருது விழாவும் நூல் வெளியீடும்


















லண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து நடாத்தும் இரா.உதயணன் இலக்கிய விருது விழாவும் ஊடகவியலாளர் கே.பொன்னுத்துரையின் அகவை 70 நூல் வெளியீடும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் விநோதன் மண்டபத்தில் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிமை மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.

முதன்மை விருந்தினராக "சாகித்திய ரத்னா" பேராசிரியர் சபா. ஜெயராசா கலந்து சிறப்பிக்க, இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் நடைபெறும். பேராசிரியர் சோ.சந்திரசேகரம், கலாகீர்த்தி உடுவை எஸ் தில்லை நடராசா, வைத்தியகலாநிதி தி.ஞானசேகரன், ஐ.இராசரத்தினம், ஆகியோர் கௌரவிருந்தினராக கலந்து சிறப்பிபார்கள்.

கலாபூசணம் பி. திருஞாவுக்கரசு, வைத்திய கலாநிதி நா. நுவகீதன், அ. வைத்திலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றார்கள்.

**விருது பெறும் படைப்பாளிகள்**

சின்னத்தம்பி ஸ்ரீ இராமகிருஸ்ணா, திருமதி கமலநாயகி ஸ்ரீ இராமகிருஸ்ணா ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது பெறும் நாவல் "மூங்கிலாகும் முட்புதர்" திருமதி மைதிலி தயாபரன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

டாக்டர் யோவான்பிள்ளை சந்திரசேகரம். திருமதி பாக்கியம் சந்திரசேகரம் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது. சிறுகதை "தஞ்சம்" க. சட்டநாதன் யாழ்ப்பாணம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

டாக்டர் எம்.என். ஸ்ரீ ஸ்கந்தராசா அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது. தமிழ் வளர்ச்சி இலக்கியம் - "சங்கமும் தமிழரும்" கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

சின்னவட்டர் ஐயம்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது. சிறந்த ஊடகவியலாளர் விருது - சின்னத்துரை சண்முகராஜா அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

சின்னத்தம்பி ஸ்ரீ இராமகிருக்ஷ்ணா, திருமதி கமலநாயகி ஸ்ரீ இராமகிருக்ஷ்ணா அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் உயர் இலக்கிய விருது திருமதி. அன்னலட்சுமி இராஜதுரை (யாழ்.நங்கை) அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

முருகேசு தம்பு, திருமதி தையல்நாயகி தம்பு அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது.

கவிதை "கவிதை சிறகு" - வைத்திய கலாநிதி தாஸிம் அகமது அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

திருமதி கிட்னர் பாப்பாத்தியம்மாள் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது.
"இனநல்லுறவு இலக்கிய விருது" - ஜீ.ஜீ. சரத் ஆனந்த அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

திருமதி தவமணி சிவஞானம் அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் "வாழ்நாள் சாதனையாளர் விருது" கே.ஆர் டேவிட், யாழ்ப்பாணம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

சிவகாமிநாதபிள்ளை சிங்காரம்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது. அயலகப் படைப்பு - கவிதை "அகாலத்தின் நித்தியக்கடல்" தமிழ் உதயா அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

வைரமுத்து தம்பிராசா அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது. "வாழ்நாள் சாதனையாளர் விருது -திருமிகு. இரத்தினசபாபதி மகேந்திரன் (முல்லை அமுதன்) அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

கலாநிதி தம்பிராசா வசந்தகுமார் அவர்களின ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது. "தேகவியோக நிலையில் சாகித்திய சமத்ஹார" உயர் விருது அமரர் திருமதி பத்மா சோமகாந்தன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

# சிறந்த நூல்களுக்கு ஐம்பது ஆயிரம் ரூபா பரிசு பெறும் இலங்கை எழுத்தாளர்கள் !


எழுத்தாளர்
கே.ஆர்.டேவிட்


எழுத்தாளர்
காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீன்


எழுத்தாளர்
எம். வாமதேவன்


எழுத்தாளர்
சீமான் பத்திநாதன் பர்ணாந்து

அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கம் இலங்கை எழுத்தாளர்களுக்காக நடத்திய இலக்கியப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக அவுஸ்திரேலியாவில் இயங்கிவரும் தமிழ் இலக்கிய கலைச் சங்கம், இலங்கை தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில், கடந்த 2019 - 2020 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் வெளியான நூல்களில் சிறந்தவற்றை தேர்வுசெய்து, அவற்றை எழுதியவர்களுக்கு பரிசு வழங்கத் தீர்மானித்திருந்தது.

இந்தத் தீர்மானத்திற்கு அமைவாக குறிப்பிட்ட இரண்டு ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் வெளியான சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை , மொழிபெயர்ப்பு முதலான ஐந்து துறைகளில் வெளியான நூல்கள், அவற்றை எழுதிய எழுத்தாளர்களிடமிருந்து கோரப்பட்டிருந்தன.

அதன்பிரகாரம் கிடைக்கப்பெற்ற நூல்களை தேர்ந்த இலக்கிய வாசகர்கள் படித்து, பரிந்துரை செய்தவற்றிலிருந்து இறுதிக்கட்டத் தேர்வில் சிறந்த நூலாக தெரிவானவற்றுக்கு பரிசில்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மொழிபெயர்ப்புத் துறையில் ஒரே ஒரு நூலே போட்டிக்கு வந்தமையால், இனிவரும் ஆண்டுகளில் நடத்தவிருக்கும் போட்டியில் அதனை பரிசீலிப்பது என முடிவாகியிருக்கிறது.

போட்டி முடிவுகளும் பரிசுத் தொகையும்
கே. ஆர். டேவிட் சிறுகதைகள் ( சிறுகதை )
கே. ஆர். டேவிட் எழுதியது - ரூபா ஐம்பதினாயிரம்
குஞ்சரம் ஊர்ந்தோர் ( நாவல் ) - ரூபா ஐம்பதினாயிரம்
சீமான் பத்திநாதன் பர்ணாந்து எழுதியது
மைவண்ணன் இராம காவியம் - ( கவிதை ) ரூபா ஐம்பதினாயிரம்.
காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீன் எழுதியது.
குன்றிலிருந்து கோட்டைக்கு - ( கட்டுரை ) ரூபா ஐம்பதினாயிரம்.
எம். வாமதேவன் எழுதியது.

பரிசு பெற்றவர்களுக்கான பரிசுத் தொகையும் சான்றிதழ்களும், 2022 ஏப்ரல் மாதத்திற்கு முன்பாக அனுப்பி வைக்கப்படும் .

பரிசுத்தொகை - இலங்கை நாணயத்தில் தலா 50 ஆயிரம் ரூபா. (50,000/= ரூபா )

குறிப்பிட்ட பரிசுத்தொகைகளை வழங்க முன்வந்துள்ளவர்கள்:
நா . அருணகிரி ( மெல்பன் )
எழுத்தாளர் ( அமரர் ) அருண் விஜயராணி நினைவுப்பரிசு.
முகம்மது ஆரீஃப் ( சிட்னி )
எழுத்தாளர் அமரர் மருதூர்க்கொத்தன் நினைவுப்பரிசு.
மருத்துவர் ( திருமதி ) வஜ்னா ரஃபீக் ( மெல்பன் )
எழுத்தாளர் (அமரர் ) மருதூர்க்கனி நினைவுப்பரிசு .
மருத்துவர் நொயல் நடேசன் ( மெல்பன் )
எழுத்தாளர் ( அமரர் ) மல்லிகை ஜீவா நினைவுப்பரிசு .

**தகவல்: அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம்.**



# ஆசை முகம் மறந்து போமோ?

குரு அரவிந்தன்

இவன் விளக்கை அணைத்துவிட்டு கட்டிலை நோக்கி வந்தபோது அவள் கண்களை இறுக மூடிக் கொண்டாள். உணர்வுபூர்வமாய் அவள் தன்னைத் தருவதற்குத் தயா ராக இருந்தாலும், மனசும் உடம் பும் முதலில் ஒத்துழைக்க மறுத்ததென்னவோ உண்மைதான்.

இவனது மெல்லிய வருடலில் எழுந்த அந்த ஸ்பரிசம், அது தந்த உணர்வுகள் எல்லாமே அவளை ஒரு கணம் உறைய வைத்தன. கற்பனையில் இதுவரை கண்டதெல்லாம் க்ண்முன்னால் காட்சியான போது, பட்டும் படாமலும் விலகி இருக்கவே மனசு நினைத் தாலும், இவனிடம் தன்னைத் தந்துவிடவே அவள் விரும்பினாள்.

என்னாச்சு என்று புரியவில்லை. எல்லாமே புதுமை யாக இருந்தன. அதிகாலை விழித்தபோது யன்ன லுக்கால் தெரிந்த வானம், ஜில்லென்று வீசும் காற்று, புள்ளினங்களின் கீதம் எல்லாமே அவளுக்குப் புதுமை யாக இருந்தன. ஏன் அவளது படுக்கையில் பட்டு வெள்ளிச் சிதறலாய் தெறித்த காலைக் கதிர்கள் கூடக் கதைகள் பல சொல்லி அவளுக்குக் கிளுகிளுப்பூட்டின.

மூடிய கண்ணுக்குள் யார் இருந்தார்கள் என்பது தான் அவளுக்கும் புரியாத புதிராக இருந்தது. மங்கிய நினைவுபோல அடிக்கடி அது வந்து வந்து போனது. வெறுக்கிற மனசு அவனைத் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தாலும், அவனை மறந்துவிடுவதில் இவள் பிடிவாதமாய் இருந்தாள்.

‘நிலவு செய்யும் முகமும் - காண்பார்
நினைவ ழிக்கும் விழியும்
கலக லென்ற மொழியும் - தெய்வக்
களிது லங்கு நகையும்’

இவளுக்குக் கவிதையில் இருந்த ஈடுபாட்டை அவன் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டான். தெரிந்த தெரியாத கவிகளிடம் எல்லாம் யாசித்து அவன் அள்ளியள்ளி வீசிய வார்த்தைகள் அவளை நிலைகுலைய வைத்ததென்னவோ உண்மைதான்.

வேண்டாம், எதுவுமே வேண்டாம் என்று எல்லாவற்றையுமே அவள் மறந்து விட்டாள். புதிய இடம், புதிய வாழ்க்கை, புதிய முகம் என்று எல்லா வற்றையும் ஏற்றுக் கொள்ளப் பழகிக் கொண்டாள்.

இவன் எழுந்து குளியலறை நோக்கிச் செல்லும் சத்தம் காதில் பட்டுத் தெறித்தது.

இனி என்ன, இவனைக் கைப்பிடித்த நாளில் இருந்து தினம் தினம் நடக்கும் ஒரு சம்பவம்போல இதுவும் தொட ரும். இவன் கிளம்பி விடுவான். இரவு மீண்டும் வரு வான். மீண்டும் இதே படுக்கை அணைப்பில் தினந் தினம் வித்தியாசமான கதைகள் சொன்னாலும் அவள் அதற் காக ஏங்கியதில்லை. இனி அவளுக்கு இதுதான் வாழ்க்கை, பெரியோர் நிச்சயித்த வாழ்க்கை, இதுதான் சமுதாயம் அவளுக்காக அங்கீகரித்த வாழ்க்கை என் றாகி விட்டது.

இதற்காகவா, இந்த வாழ்க்கைக்காகவா அவள் இத் தனை துன்பங்கள் துயரங்கள் எல்லாம் தாண்டி வந் தாள். தெரியவில்லை. ஆனால் மனதிலே அவன்மீது கொண்ட வெறுப்பு தீராத வெறியாக நிலைத்து நின் றது. தான் தோற்றுப் போய்விடவில்லை என்பதை நிரூபிக்க அவளுக்கு இவனுடனான இந்த வாழ்க்கை தேவையாயிருந்தது. அதையே அவள் முழுமனதோடு ஏற்றுக் கொண்டாள்.

இவ்வளவு நெருக்கமாய்ப் பழகிவிட்டு சட்டென்று பிரிந்து செல்ல அவனால் எப்படி முடிந்தது. அதைத் தான் அவளாலும் நம்பமுடியாமல் இருந்தது. அவளது காதல் வாழ்க்கையில் அதுதான் அவர்களின் கடைசிச் சந்திப்பாக இருக்கும் என்று அப்போது அவள் நினைத்ததில்லை. எதிரெதிரே அமர்ந்திருந்தாலும், நீண்ட மௌனத்தின்பின் அவன்தான் வாய் திறந்தான்.

‘காலையில நான் ஊருக்குப் போகிறேன்’ என்றான்.

‘எப்போ திரும்பி வருவாய்?’ என்றாள் சாதாரணமாக.

அதற்கு அவன் பதில் சொல்லாது மௌனமாக இருந்தான்.

கலகலப்பாக எப்போதும் பேசிக்கொண்டிருக்கும் அவனது மௌனம் அவளுக்குள் பயத்தைத் தந்தது. எதையோ அவன் சொல்லத் தயங்குவதும் புரிந்தது.

‘சீக்கிரம் வந்திடுவேன்’ என்றான்.

‘சீக்கிரம் என்றால்..’

‘தெரியாது!’ என்றான்.

‘பிளீஸ், சீக்கிரம் வந்திடு, காத்திருப்பேன்!’ என்றாள்.

அவனது தயக்கம் அவளை அச்சமுற வைத்தாலும், அவள் அவனது வார்த்தைகளை நம்பினாள். அப்படி யான ஒரு நம்பிக்கையில்தான் அவள் அவனோடு இது வரை நெருங்கிப் பழகினாள்.

வழமைபோலவே அவனுக்காக அவளும் காத்திருந் தாள். சொன்ன சொல்லைக் காப்பவன்போல, சொன்ன படியே அவனும் திரும்பி வந்தான், ஆனால் தன்னோடு ஒரு துணையையும் கொண்டு வந்தான்.

அவளோ அதிர்ந்து போய் நின்றாள். அதற்காக ஆயி ரம் காரணங்கள் அவன் சொல்ல நினைத்திருக்கலாம், ஆனாலும் அவள் கேட்கிற நிலையில் இருக்கவில்லை.

எல்லாமே இடிந்து சரிந்து கண்முன்னால் சிதறி விட்டது போல - வாழ்க்கையே அஸ்தமித்து விட்டது போலத் தவித்தாள்.

‘கோழைகளுக்கு ஏன்டா காதல்’ என்பது போன்ற பாவனையோடு ஒரு புழுவைப் பார்ப்பதுபோல அவ னைப் பார்த்தாள்.

அவன் எதுவுமே நடக்காததுபோல முடிவாக ஒரு ‘சொறி’ சொல்லிவிட்டு, காதலுக்கு இதெல்லாம் சகஜம் என்பதுபோல நகர்ந்தான்.

‘காதலுக்கல்ல, உன்னைப் போன்ற காமுகனுக்கு’ என்று உரக்கக் கத்தவேண்டும் போலத் தவித்தாள்.

இவ்வளவுதானா, இவ்வளவுதானா? ஒரு சொறி யோடு உறவெல்லாம் எல்லாமே முடிந்து போயிற்றா?

அவள் பதற்றத்தோடு நின்றாள். அதன் பிறகு ‘சொறி’ என்று யாராவது சொல்வதைக் கேட்டாலே அவளுக்கு எரிச்சல்தான் வந்தது. செய்வ தெல்லாம் செய்துவிட்டு எவ்வளவு இலகு வாகச் சொல்லி விட்டு நழுவி விடுகிறார்கள்.

அந்த நிலையில் அவளால் வேறு எது வும் செய்யமுடியவில்லை. நம்பிக்கை என்ற கோட்டை உடைந்து சரிந்தபோது அவ ளும் மனமுடைந்து போனாள். ஆனாலும் எல்லாம் நன்மைக்கே என்று தன்னால் முடிந்த மட்டும் அவனை மறந்துவிட முயற்சி செய்தாள்.

நேச மறக்கவில்லை நெஞ்சம் - எனில்
நினைவு முகமறக்க லாமோ?

வீட்டிலே ஒரு பிரளயமே நடந்தது. அவள் எதிபார்க்காத கோணத்தில் இருந் தெல்லாம் தாக்குதல் தொடுத்தார்கள். தப்பான ஒருவனைக் காதலித்த பாவத் திற்காக எல்லாவற்றையும் இடிதாங்கி போலத் தாங்கிக் கொண்டாள்.

மனமுடைந்து போனபோது, ஆற்றா மையால் தற்கொலை செய்து விடு வோமோ என்றுகூடப் பயந்தாள்.

‘காதலில்லை யானாற் கணத்திலே
சாதலென்றாய்
காதலினாற் சாகுங் கதியினிலே
என்னை வைத்தாய்’

காதல் என்ற சொல்லுக்கு அவனுக்கு அர்த்தம் தெரிந்திருக்கவில்லை. இடையே எது அவனது கண் ணை மறைத்தது என்பதும் இவளுக்குப் புரியவில்லை. எல்லாமே சட்டென்று அடங்கிப்போன உணர்வில் நாட்கள் மாதங்களாய்க் கழிந்தபோது அவள் மீண்டும் விழித்துக் கொண்டாள்.

எவ்வளவு முட்டாள் தனமாக நடக்கவிருந்தேன் என்று தன்னைத் தானே நொந்து கொண்டாள். அவன் மட்டும் சந்தோஷமாய் இல்லற வாழ்க்கையில் ஈடுபட, நான்மட்டும் ஏன் ஏங்கித் தவிக்க வேண்டும் என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள்.

அதுவே ஒரு வெறியாக உருவெடுத்தது.

எவ்வளவு காலத்திற்குத்தான் காத்திருப்பது. தந்தை தயங்கித் தயங்கிக் கேட்டபோது சம்மதம் என்று சட்டென்று ஒத்துக் கொண்டாள். அவர் ஆச்சரியத் தோடு அவளைப் பார்த்துவிட்டு நகர்ந்தார்.

வந்தவனுக்குக் தனது கடந்த காலத்தை எடுத்துச் சொன்னாள். அவன் சிரித்துவிட்டு, ‘இதெல்லாம் சகஜம். இந்தக் காலத்தில மனசாலகூட விரும்பாதவங்கள் யாரா வது இருப்பாங்களா, அப்படி இருந்தால் ஒருத்தரைக் காட்டுங்க பார்க்கலாம்’ என்று திருப்பிக் கேட்டான்.

‘இப்படியும் ஒருவனா?’ என்று அவள் விழி உயர்த்தி அவனைப் பார்த்தாள்.

‘இல்லை, நான் சொல்ல வந்தது..!’

‘தெரியும்! உங்களுடைய கடந்தகாலம் எனக்குத் தேவையில்லை. புதிய இரண்டு உள்ளங்கள் சந்திக்கப் போகின்றன. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டாலே போதும். என்னோடு நீங்க வாழப்போகிற வாழ்க்கை தான் எனக்கு முக்கியம். அதிலே நீங்க தெளிவாக இருந்தால் அதுவே எனக்குப் போதும்!’ என்றான்.

அவளை அவன் அதிகம் பேசவிடவில்லை. புரிந்துணர்வு உள்ளவனாகப் பெருந்தன்மையோடு அவன் நடந்து கொண்டது போலவே அவளும் நடந்து கொண்டாள். பெரியதொரு சுமையை இறக்கிவைத் ததுபோல அவள் உணர்ந்தாள். கடந்த காலத்தைப் பற்றி அவனோ அவளோ அலட் டிக் கொள்ளவில்லை. இதுதான் வாழ்க்கை என்று ஆன பிறகு அதைப்பற்றி எல்லாம் அலசி ஆராய்வதில் எந்தப் பலனும் இல்லை.

அவனுக்குக்கூட அவளைப் போன்ற காதல் அனுப வம் இருந்திருக்கலாம். அதை வெளிக்காட்டுவதாலோ அல்லது அதைப்பற்றி அறிய முயல்வதாலோ எந்தப் பலனும் கிடைக்கப் போவதில்லை. கிடைக்காத ஒன்றை நினைத்து ஏங்குவதுதான் மனித இயல்பு என் றாலும் அந்த நினைவுகளைக் குழி தோண்டிப் புதைத்து விடவே அவள் விரும்பினாள்.

எதைஎதையோ நினைத்து, இருப்பதை இழந்து விடா மல் இருப்பதுதான் வாழ்க்கைக்கு அழகு, அவளது இந்த வாழ்க்கை நிஜமானது என்பதைப் புரிந்து கொண்டாள். முக்கியமாக மாற்றாரின் தலையீட்டைத் தவிர்த்துக் கொண் டால் எல்லாமே சுகமானது தான் என்பதை உணர்ந்து கொண்டாள். வாழ்க்கை வாழ்வதற்கே என்பதை உணர்ந்து கொண்டதால் யதார்த்தத்தை ஏற்று அவளும் அவனோடு இணைந்து வாழப்பழகிக் கொண்டாள்.

# பொங்கல்விழாவில் அதிதிகள் மூவருக்கு கௌரவம்







காரைதீவு பிரதேசசபையின் வருடாந்த தித்திக்கும் தைப்பொங்கல்ப்பெருவிழா தவிசாளர் கி.ஜெயசிறில் தலைமையில் பிரதேசசபையில் சிறப்பாக நடைபெற்றவேளையில் மூவருக்கு சிறப்புப்பாராட்டு கௌரவம் இடம்பெற்றது. பிரதமஅதிதியான கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையின் தலைமை பொறியியலாளர் ஏ.எஸ்.கௌரிபாலன்,கௌரவ அதிதியான அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.எல்.எ.கமல் நெத்மினி ,சாதனை அதிதியாக கலந்துகொண்ட கொழும்புமருத்துவ பீடத்தில் அதிகூடிய 13தங்கப்பதக்கங்களைப் பெற்று முதல்தரமாணவியாக தெரிவுசெய்யப்பட்ட அக்கரைப்பற்றைச் சேர்ந்த சாதனை மாணவியும் ,மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வைத்தியஅதிகாரியுமான டாக்டர் தர்ஷிகா தணிகாசலம் ஆகியோர் பொன்னாடை போர்த்தப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அதன்போதான படங்கள்..

**படங்கள்: காரைதீவு சகா**

# மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு திறன் வகுப்பறை






வலிகாமக் கல்வி வலயத்திற்கு உட்பட்ட சண்டிலிப்பாய் கோட்டத்தின் மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை திறப்பு விழா நிகழ்வு பாடசாலை அதிபர் செல்வி.இ.சுலோசனா தலைமையில் இடம் பெற்றது.

இரட்ணம் அறக்கட்டளை நிறுவனமும், பாடசாலை அதிபர் செல்வி. இ.சுலோசனா அவர்களினதும் நிதியொதுக்கீட்டின் மூலம் இத்திறன் வகுப்பறையானது மாணவர்களின் பயன்பாட்டிற்காக வழங்கி வைக்கப்பட்டது.

நவீனகல்விமுறைமையில் திறன் வகுப்பறையானது புதியதோர் அத்தியாயம். இது நகர்புறப் பாடசாலைக்குரியதொன்றல்ல. கிராமத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் இப்பாடசாலையில் திறந்து வைப்பதில் நான் பெருமையடைகின்றேன். ஆசிரியர்கள் கற்பிக்கும் பொழுது இதனைப் பயன்படுத்துவதால் மாணவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் கற்றலில் ஈடுபட முடியும் என்றும், மாணவர்கள் தாமாகவே தேடி கற்க முடியும் என்றும் , பெரிய திரையில் கற்றலில் ஈடுபடுவதால் சிறார்களின் கண்களிற்கு பாதிப்பு ஏற்படுவது குறைவு என்றும் வலிகாம வலயத்தில் இவ் வசதி கிடைக்கப் பெறாத பாடசாலைகளுக்கு இந்நிறுவனத்தின் உதவி வேண்டியும் இந்நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளர் பொ. ரவிசிசந்திரன் தனது உரையில் குறிப்பிட்டார்.

இத்திறன் வகுப்பறையூடாக 100ற்கு மேற்பட்ட மாணவர்கள் நவீன கற்கையினைத் தடையின்றி கற்கமுடியும். என்றும் இது மாதகல் கிராமத் திற்கு ஒரு வரப்பிரசாதம் என சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட திரு. சு. கிருஸ்



ணகுமார் தனது உரையில் குறிப்பிட்டார். இவருடன் வி.சிற்றம்பலம் (தலைவர் மாதகல் நலன்புரிச்சங்கம்) அவர்களும் சிறப்பு விருந்தினராக் கலந்து சிறப்பித்தார்.

# ஏழாலையில் திறக்கப்பட்ட சரோஜினி பூங்கா





ஏழாலையைச் சேர்ந்த திருமதி கந்தசாமி சரோஜினிதேவியின் ஞாபகர்த்தமாக அவரது குடும்பத்தினரால் ஏழாலையில் அமைக்கப்பட்ட சரோஜினி பூங்கா அண்மையில் வடமாகாண சிரேஸ்ட் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெகத் பழிககாரவினால் திறந்துவைக்கப்பட்டது.

மிகவும் சிறப்பக நடைபெற்ற இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், பிரதிப் பொலீ மா அதிபர் (யாழ்ப்பாணம்) பிரியந்த லியனகே, கோப்பாய் கல்வியியல் கல்லூரி விரிவுரையாளரும், வாழ்வகம் இயக்குநருமான கே.ரவீந்திரன், விரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிசாந்த டி சில்வா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

பெருமளவு பொதுமக்களும் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் பூங்கா பொதுமக்கள், சிறுவர்களின் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டது.








# திமுக அரசுக்கும் பாஜக தலைமைக்கும் இடையில் உச்ச கட்டத்தை நோக்கும் போர்!

## ‘இந்தியா என்பது மாநிலங்களின் கூட்டமைப்பு’



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

சோதனைகள் தனியாக வராது, கூட்டமாகத்தான் வந்து நம்மை சாய்க்கும் என்று என் அம்மா சொல்வார். இந்த புத்தாண்டு பிறந்து ஒரு வாரத்துக்குள்ளேயே நான் கோவிட் தொற்றுக்கு ஆளானேன். ஜனவரி 7 முதல் 14 வரை மருத்துவமனையில் இருந்தேன். கொடைக்கானல் மலை அடிவாரத்தில், கோவை ரோட்டில் உள்ள முதியோர் விடுதியில் தங்கியிருந்த சாம் ராஜப்பாவை சந்தித்து, கடந்த 40 ஆண்டுகளாக இருவரும் பத்திரிகையாளர்களாக இருந்து, தமிழ்நாட்டின் அரசியல் சூழலில் எங்களது பயணம் பற்றிய நினைவுகளைப் பரிமாற நினைத்திருந்தேன். அவரிடம் வருவதாக வாட்சப் மெசேஜூம் அனுப்பியிருந்தேன். அதற்கு பதில் வரவில்லை. மாறாக, ஜனவரி 15ஆம் திகதி கனடாவில் உள்ள தன்னுடைய மகன் சஞ்சீவின் வீட்டில் அவர் இறந்தார் என்ற செய்தி கிடைத்தது. 82 வயதிலும் இளைஞராக, கலகலப்பாக சுற்றிவந்த சாம், என்னுடைய மிக நெருங்கிய நண்பர். அவரின் இழப்பு எனக்கு மிகவும் அதிர்ச்சியைக் கொடுத்தது.

சாமின் மகன் சஞ்சீவுக்கு அவரது தந்தையின் உடலை சென்னைக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் தொடங்கினேன். பிப்ரவரி 2ம் தேதி சென்னைக்கு வந்து சேரும் சாமின் உடல், அவரது விருப்பப்படியே சொந்த ஊரான மார்த்தாண்டத்திற்கு இறுதி சடங்குகளுக்காகக் கொண்டு செல்லப்படுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. என் உற்ற நண்பரை இறுதியாக ஒருமுறை பார்ப்பதற்காகக் காத்திருந்தேன். அப்போதுதான் இன்னொரு இடி விழுந்தது - என் மனைவி இந்துவுக்கு ஜனவரி 29ம் தேதியன்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

அன்று என் மனைவி இந்துவின் 68ஆவது பிறந்தநாள். வாழ்த்துச் செய்தியை குடும்பத்தினரின் வாட்ஸப் குழுவில் பகிர்ந்திருந்தேன். அவரது சகோதரரும் மருத்துவருமான மதன், கிளீவ்லாந்திலிருந்து போனில் அழைத்து முதல் வாழ்த்தைத் தெரிவித்தார். இந்துவின் உற்சாகமான புகைப்படங்களையும் குழுவில் பகிர்ந்தேன். இரண்டு நாட்களாக இந்துவுக்கு ஜ/ரம் இருந்ததால் அன்று இரவு முழுக்க ஆர். டி. பிசிஆர் சோதனையின் முடிவுகளைப் பற்றிய கவலையில், தூங்காமல் இருந்தேன். காலை ஏழு மணிக்கு மெயிலில் கோவிட் டெல்டா வைரஸ் பாசிடிவ் என்று தகவல் வந்தது. ஒரு மணி நேரத்தில் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு இந்து ஆம்புலன்ஸில் அழைத்துச் செல்லப்பட்டார். பிறந்தநாள் வாழ்த்துகளால் தொடங்கிய காலைப்பொழுது, இரண்டு மணி நேரத்துக்குள் ‘குணமாகி வாருங்கள் இந்து’ என்ற குறுஞ்செய்திகளால் மாறியது.

நான் வாழ்க்கையில் ஒருமுறைகூட நேரில் சந்திக்காத பல நண்பர்கள், அவர் விரைவில் நலம் பெறுவதற்காகப் பிரார்த்தனை செய்தனர். வயதைத் தாண்டியும் அவருக்குப் பல மருத்துவச் சிக்கல்கள் இருந்தன என்பதால் நாங்கள் மிகவும் கவலைப்பட்டோம். ஆனால், கடவுள் எப்போதும் ஒரு துணைவராக இருந்து இந்துவை வழிநடத்தி வந்திருக்கிறார், அவரது மனோதிடமும் அசாத்தியமானது. இந்த வெள்ளிக்கிழமை மாலையில் இந்து நலமுடன் வீடு திரும்பினார், பத்து நாட்கள் வீட்டிலேயே தனிமைப்படுத்திக்கொள்வார்.

செவிலியர் பிரியாவின் கவனிப்பில் இந்து இருக்கும்போது, அடுத்த அறையில் என்னுடைய மேசையில் அமர்ந்து, ‘ஈழநாடு’ பத்திரிகைக்கான இந்தக் கட்டுரையை எழுதுகிறேன். இப்போது கொஞ்சம் ஆசுவாசமாக இருக்கிறது. ஈழநாடு பத்திரிக்கையின்மூலம் என்னுடைய நண்பர்களையும் வாசகர்களையும் சந்திப்பதில் மகிழ்ச்சி. இந்த அனுபவத்தை மீண்டும் தந்ததற்குக் கடவுளுக்கு நன்றி.

தமிழ்நாட்டிலும், உங்கள் அண்டை நாடான இந்தியாவிலும் நடந்துகொண்டிருக்கும் சில அரசியல் புதிர்ப் பாதைகளுக்குள் உங்களை அழைத்துச் செல்லப்போகிறேன்.

இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் ஒரு போர்க்கொடியைத் தூக்கிவிட்டார் என்பது தெளிவாகிவிட்டது. அவரது சமூக அரசியல் புரட்சியைப் பார்த்து ஸ்டாலினின் தந்தை மு. கருணாநிதிகூட பெருமைப்படுவார். ஆனால், அவரது காலத்தில் மத்திய அரசால் மாநில அரசு கலைக்கப்படும் ஆபத்து இருந்தது. ஆகவே, இதுபோன்ற ஒரு புரட்சியைத் தொடங்குவதற்குக் கருணாநிதியும் தயங்கியிருக்கக்கூடும். ஜனநாயகத்துக்கு எதிரான பல செயல்களை செய்வதற்குப் பயன்பட்ட ‘மிசா’ சட்டத்தை அமல்படுத்த ஆதரவு தரவில்லை என்று குற்றம் சாட்டி, இந்திரா காந்தி 1976இல் திமுக அரசைக் கலைத்தார். விடுதலைப்புலிகளோடு தொடர்பு இருப்பதாகக் கூறி, சந்திர சேகரின் அரசும் கலைஞரின் அரசைக் கலைத்தது. ஆனால், உண்மையில் ஜெயலலிதா அழுத்தம் கொடுத்ததால் காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி தொடர்ந்து கேட்டுக்கொண்டதால்தான் இது நடந்தது.

1976ஆம் ஆண்டிலும் 1991ஆம் ஆண்டிலும் அரசியலமைப்புச் சட்டத்தின் 356ஆவது பிரிவை அடிப்படையாகக் கொண்டுதான் இந்திரா காந்தியும் அவரது மகனும் கருணாநிதியின் அரசை கலைத்துவிட்டார்கள். இந்தப் பிரிவின் சாராம்சம் இதுதான்: ‘ஒரு மாநில அரசால் அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு செயல்பட முடியாவிட்டால், மத்திய அரசு அந்த மாநிலத்தின் நிர்வாகத்தை எடுத்துக்கொள்ளலாம்’. அடுத்து வந்த அரசியல் சூழல்கள் மற்றும் நீதித்துறையின் தீர்ப்புகளால் இந்த சட்டத்தின் தீவிரம் நீர்த்துப்போய்விட்டது. இதுபோல, மாநில அரசைக் கலைக்கும் முடிவு ஒன்று மத்திய அரசால் எடுக்கப்பட்டால், அது சட்டரீதியாக மறு ஆய்வு செய்யப்படும் என்று உச்சநீதிமன்றம் கூறியிருக்கிறது. இப்போதைய உச்சநீதிமன்றம் தைரியமாக, சுறுசுறுப்பாக, ஜனநாயகத்துக்கு ஆதரவாக செயல்படுகிறது. அரசியல் களத்தில் பிரதமர் மோடிக்கும் அவரின் பாரதிய ஜனதா கட்சிக்கும் எதிரணியில் இயங்கும் தேசிய கட்சிகளின் ஆதரவு ஸ்டாலினுக்கு இருக்கிறது. ஆகவே, ஸ்டாலினின் தந்தையை வீட்டிற்கு அனுப்பியதுபோல் ஸ்டாலினைப் புறந்தள்ளிவிட முடியாது. சில நாட்களுக்கு முன்பு இந்திரா-ராஜீவின் வாரிசான ராகுல் காந்தி மக்களவையில் முழங்கினார். “இந்தியா என்பது ஓர் இராஜாங்கம் கிடையாது, அது மாநிலங்களின் கூட்டமைப்பு” என்று கூறிய ராகுல் காந்தி, “ஒருபோதும் நீங்கள் தமிழகத்தில்ஆட்சி செய்ய முடியாது” என்று பாஜக தலைமையை நோக்கிக் கூறினார். ஜனநாயகத்துக்கு ஆதரவாகப் பேசியதற்காக ஸ்டாலின் ராகுலுக்கு உடனே நன்றி கூறினார்.

ஜனவரி 26ஆம் திகதி, இந்தியாவின் குடியரசு தினத்தன்று, ‘அனைத்து இந்திய சமூக நீதிக் கூட்டமைப்பு’ ஒன்றை உருவாக்குவதற்கான தன் யோசனையை ஸ்டாலின் வெளியிட்டார். இது தேசிய அளவிலான சமூக அரசியல் கூட்டமைப்பு. கி. வீரமணி, வைகோ, திருமாவளவன், சுப. வீரபாண்டியன், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் போன்ற ஒத்த சிந்தனை கொண்டவர்களோடு கலந்து ஆலோசித்து இந்த முடிவை ஸ்டாலின் எடுத்திருக்கிறார். ‘நாட்டில் சமூக நீதிக்கும் மதசார்பற்ற தன்மைக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது’ என்று ஸ்டாலின் எச்சரித்தார் (இது, பாஜகவை நோக்கியது என்று நீங்கள் எளிதில் உணர்ந்துகொள்ள முடியும்.) அதன்பிறகு, பாஜக அல்லாத பிற கட்சிகளைச் சேர்ந்த 38 மாநில முதல்வர்கள் மற்றும் அரசியல் தலைவர்களுக்கு பெப்ரவரி 3ஆம் தேதி கடிதம் எழுதியுள்ளார். அனைவரையும் இந்தக் கூட்டமைப்பில் இணைந்து கொள்ளுமாறு அவர் கடிதத்தின்மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

“இக்கடிதத்தை நான் எழுதும் இவ்வேளையில், தனித்தன்மை மிக்கதும் பன்முகத்தன்மை வாய்ந்த பல பண்பாடுகளால் ஆனதுமான நமது ஒன்றியம், பிரிவினை மற்றும் சமய மேலாதிக்கத்தினால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. சமத்துவம், சுயமரியாதை மற்றும் சமூகநீதி ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டுள்ள நாம் அனைவரும் ஒன்றிணைந்தால்தான் இவற்றை எதிர்த்துப் போரிட முடியும். இது அரசியல் ஆதாயம் பற்றியதல்ல. மாறாக, நமது குடியரசு அமையப் பாடுபட்டோர் காண விழைந்த அடையாளத்தை மீண்டும் நிலைநிறுத்துவது பற்றியது ஆகும். சமூகநீதியில் பல பத்தாண்டுகளாக நாம் அடைந்த முன்னேற்றத்துக்குப் பிற்போக்குச் சக்திகள் சவால் விடும் இந்த இடர்மிகு காலத்தில், ஒடுக்கப்பட்டோர் நலனை உறுதிசெய்ய முற்போக்கு ஆற்றல்கள் கைகோக்க வேண்டியது மிக இன்றியமையாதது ஆகும். இம்முன்னெடுப்பில், எங்களுடன் நீங்களும் இணைய உங்களை வரவேற்க நான் எதிர்நோக்குகிறேன்” என்று அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தொடக்க காலத்தில், மத்தியில் உள்ள பாஜக தலைவர்களோடு ஸ்டாலின் இணக்கமான போக்கைக் கடைபிடிக்க விரும்புவதுபோலத் தோன்றியது. ஆனால், மருத்துவக் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கைக்கான பொது நுழைவுத்தேர்வான ‘நீட்’டுக்கு எதிரான திமுகவின் நிலைப்பாடு காரணமாக சில முரண்கள் ஏற்பட்டன. சிறப்புப் பயிற்சி மையங்கள் கேட்கும் அதீதமான விலையைத் தந்து, நீட் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கு கிராமப்புற மாணவர்களால் முடியாது, ஆகவே இந்தத் தேர்வு முறை அவர்களை விலக்கி வைக்கிறது என்று திமுக எதிர்ப்பு தெரிவித்தது. கல்விக் கட்டணம் தாண்டி, தனியார் மருத்துவக் கல்லூரிகள் பெரும் நன்கொடைக்கு மருத்துவக் கல்விக்கான இடங்களை விற்பது நீட் தேர்வால் தவிர்க்கப்படுகிறது என்று பாஜக கூறுகிறது. தனியார் கல்லூரிகளில் ஒரு எம்.பி.பி.எஸ் சீட்டுக்கு ஒரு கோடி ரூபாயும் முதுகலை மருத்துவப் படிப்புக்கு இரண்டு கோடிக்கு மேலாகவும் வசூலிக்கப்பட்டது. நீட் பிரச்னை தொடர்பான ஈழநாடு கட்டுரைகளில் இதுபற்றி விரிவாக எழுதியிருக்கிறேன். சென்ற ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில், தமிழ்நாட்டு மாணவர்களுக்கு நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்கும் தீர்மானம் சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் மாநில ஆளுநர் ரவியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அவ ரது ஒப்புதலுக்குப் பிறகு, குடியரசுத் தலைவருக்கு மசோதா அனுப்பப்படும்.

தீர்மானத்தை அலசிய ஆளுநர் ரவி, சட்டசபை சபாநாயகரிடம் இதுபற்றிய கூடுதல் விவரங்களைக் கேட்டிருந்தார். பெப்ரவரி 19ஆம் திகதி வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தல்களுக்காக ஸ்டாலின் காத்துக் கொண்டிருக்கக்கூடும். ஆகவே, ஆளுநரின் கேள்விகளுக்கு பதில் வரவில்லை. ஆனால், தனது கடிதத்தை ஆளுநர் ஊடகங்களுக்கு வெளியிட்டதால் திமுக தலைமைக்குக் கோபம் வந்தது.

ஆளுநரின் கேள்விக்குத் தமிழக அரசு ஏன் பதில் அளிக்கவில்லை என்று மாநில பாஜக தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பியதோடு, ஆளுநரின் கேள்விகளும் வெளியிடப்படவேண்டும் என்று சொன்னார். தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது என்று ராகுல் காந்திக்குத் தெரியாது என்றும், பாஜக விரைவிலேயே தமிழ்நாட்டில் அதிகாரத்தைக் கைப்பற்றும் என்றும் அண்ணாமலை அறிவித்தார். இந்த திராவிட மாநிலத்தில் உள்ள மக்களிடம் பாஜகவுக்கான ஆதரவு மிகவும் குறைவு என்பதால் அண்ணாமலையின் இந்த அறிக்கை சமூக வலைதளங்களில் கேலி மீம்கள் பறந்தன.

பெரும்பாலான தமிழக ஆளுநர்கள் பதவிக்காலத்தை அமைதியாகவே நடத்தி சென்றுவிட்டனர். ரவிக்கு முந்தைய ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தின் பதவிக் காலத்தில் ஒரு சிறு சலசலப்பு இருந்தது. நீட் விவகாரம் மற்றும் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதான ஏழு ஆயுள் தண்டனை கைதிகளின் விடுதலை பற்றிய தாமதம் ஆகியவற்றில் அவரோடு முரண்கள் இருந்தன. இப்போது, திமுக அரசோடு ஆளுநர் ரவிக்கு மோதல்கள் இருப்பதால் திமுகவும் கூட்டணிக் கட்சியான காங்கிரஸூம் பாராளுமன்றத்தில், ‘ஆளுநரைத் திரும்பப் பெற வேண்டும்’ என்று கோஷங்களை எழுப்பின. சட்டசபையின் முதல் கூட்டத்தொடரில் தமிழக அரசு அனுப்பிய ஆளுநரின் உரையில் ‘ஜெய் ஹிந்த்’ என்ற முழக்கத்தை ஆளுநர் சேர்த்திருந்தார். தமிழகத்துக்கு ஒரு திராவிட அடையாளத்தை வழங்குவதில் முனைப்புடன் இருக்கும் திமுகவுக்கு இது கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. தேசியவாத எண்ணங்கள், முழக்கங்கள், சின்னங்கள் ஆகியவற்றை பாஜக மற்றும் ஆர்.எஸ்.எஸ். அமைப்புடன் தொடர்பு படுத்திக் குழப்பிக்கொள்கிற தமிழ் தேசியவாதிகள் நிராகரித்திருக்கிறார்கள். ‘ஜெய் ஹிந்த்’ என்ற முழக்கம்மீது திமுகவுக்கு இருக்கும் ஒவ்வாமை ஒரு சோகமான உதாரணம். பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை பெறுவதற்காக விடுதலைப் போராட்ட வீரர்கள் பயன்படுத்திய சொல் இது, நாட்டின் மீதான தங்களது நாட்டுப்பற்று, பாசம் ஆகியவற்றை அவர்கள் இப்படி வெளிப்படுத்தினார்கள். ‘ஹிந்த்’ என்பது இந்துமதம் என்று குழப்பிக்கொள்ளும் திமுக, அதில் உள்ள இந்தியாவைப் பார்க்க மறுக்கிறது.

கடந்த காலத்தில் ஆளுநர் உரையில் ‘ஜெய் ஹிந்த்’ என்பது இருந்தது, ஆனால் திமுக அரசு ஆளுநருக்கு அனுப்பிய உரையில் அந்த சொல் இடம் பெறவில்லை. ஆனால் அதைக் கண்டுகொள்ளாத ஆளுநர், ‘வாழ்க தமிழ், ஜெய் ஹிந்த்’ என்று தன்னுடைய உரையை நிறைவு செய்தார்.

‘கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா?’ என்ற தலைப்பில் திமுக கட்சியின் நாளிதழான முரசொலி ஒரு கட்டுரையை வெளியிட்டது. ‘நாகாலாந்தில் நடந்து கொண்டதுபோல் இங்கு நடந்துகொள்ள முடியாது, உங்கள் ஐ.பி.எஸ் மிரட்டலை எங்களிடம் காட்டாதீர்கள், இது தமிழ்நாடு, இங்கு உங்கள் வித்தையைக் காட்ட முடியாது’ என்று ஆளுநரை எச்சரித்தது.

திமுக அரசுக்கும் பாஜக தலைமைக்கும் இடையிலான போர் உச்சகட்டத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் போது, ஆளுநர் ரவி திங்கட்கிழமையன்று டெல்லி செல்லவிருக்கிறார். ‘சில முக்கிய கலந்துரையாடல்களுக்காக’ அவர் அங்கு செல்கிறார் என்று சொல்லப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மத்தியில், பெப்ரவரி 19ஆம் திகதி நடக்கப் போகும் உள்ளாட்சித் தேர்தலுக்காக தமிழகம் தயாராகிக் கொண்டிருக்கிறது. அடுத்த வாரம் நாம் சந்திக்கும்போது இந்த தேர்தல் களத்தைப் பற்றி விரிவாகப் பேசுவோம்.

வணக்கம்.





# இலங்கை சுதந்திர தினத்துக்கு எதிராக ஜேர்மனியில் தமிழர்கள் போராட்டம்!

பேர்ளின், பெப். 06

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினமான நேற்று முன்தினம் ஜேர்மன் - பேர்ளின் நகரில் ஒன்றுகூடிய புலம்பெயர் தமிழ் மக்கள், இலங்கையின் தமிழினப் படுகொலை குறித்த விழிப்புணர்வு கண்காட்சியை முன்னெடுத்ததுடன், நீதி கோரி வீதியில் இறங்கினர்.

தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றத்தின் விளைவுகள், தமிழர்கள் மீதான அடக்குமுறை மற்றும் வன்முறைகளை சித்தரிக்கும் பல்வேறு கலைப் படைப்புகள் பேர்ளின் நகரில் காட்சிப்படுத்தப்பட்டன.

இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழ் இனத்தின் கறுப்பு தினமாக அறிவித்து யாழ்ப்பாணம் மற்றும் முள்ளிவாய்க்காலில் நேற்று முன்தினம் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இவ்வாறான நிலையிலேயே ஜேர்மனியிலும் தமிழர்கள் நீதி கோரி வீதிக்கு இறங்கியதுடன், இனப்படுகொலைகளை சித்திரிக்கும் விழிப்புணர்வுக் கண்காட்சியையும் நடத்தினர். (அ)

# வீட்டிலிருந்து வெளியேற முடியாதோருக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பம்

கொழும்பு, பெப். 06

வீடுகளிலிருந்து வெளியேற முடியாதவர்களுக்கு, வீடுகளுக்கே சென்று பூஸ்டர் தடுப்பூசியை செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் இந்த நடமாடும் வேலைத்திட்டத்தில், இராணுவ மற்றும் சுகாதாரத்துறை பிரதிநிதிகளின் குழுக்கள் ஈடுபடுத்தப்படுவதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் மேலும் 1,243 பேருக்கு நேற்று கோவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளதோடு, கோவிட்-19 தொற்று உறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 615,902 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)


## மரண அறிவித்தல்

மலர்வு 21 - 01 - 1954



உதிர்வு 29 - 01 - 2022

### திருமதி கலையரசி சிறிவள்ளிநாயகம்

யாழ்ப்பாணம் அத்தியடியில் பிறந்தவரும் பிரான்சில் வசிப்பவருமாகிய ஸ்ரீவள்ளிநாயகம்பிள்ளை கலையரசி இறைபதம் அடைந்து விட்டார்.

காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் – அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா பிள்ளை – அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ஸ்ரீவள்ளி நாயகம் பிள்ளையின் அன்பு மனைவியும், அமரர் சூரியகுமார் (கனடா), மகேந்திரகுமார் (கனடா), சுரேந்திரகுமார் (பிரான்ஸ்), விஜயகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரியும், கீர்த்திகா, கீர்த்திபன், யாழினி ஆகியோரின் அன்பு தாயாரும், மார்க் அந்துவான், யுஸ்றின் ஆகியோரின் அன்பு மாமியும், அபிராமி, நிலா ஆகியோரின் செல்ல பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் 07.02.2022 திங்கட்கிழமை காலை 9:309:30Am - 10:30Am chambre mortuaire Du Grand Hospital Eastergate website De Meaux chem del Hospice, 77100 Meaux, France இல் நடைபெற்று தகனக்கிரியைக்காக 11 மணியளவில் crematorium de Saint soupplets 2Rue Du prede vornat, 77165 Saint-soupplets, France எடுத்துச் செல்லப்படும்.

07.02.2022 திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 10.30 மணி வரை இறுதிக்கிரியை நிகழ்வுகளும், காலை 11 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை தகன நிகழ்வுகளும் L CAST TV YOUTUBE Channel சமூக வலைத்தளம் ஊடக நேரலையாக (LIVE) காணலாம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**சிறி (கணவர்)**
**0033611213963**

தகவல் :
**குடும்பத்தினர்.**


## சிரியாவில்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுவர்கள், கருகிய கூரைகள் மற்றும் ஒரு பகுதி இடிந்து விழுந்த கூரையுடன் - கடுமையான போரின் வடுக்களை கட்டடம் தாங்கியதாக கூறினார்.

சிரியா சிவில் டிஃபென்ஸ் என்று அழைக்கப்படும் ஒயிட் ஹெல்மெட்ஸ் மீட்புக்குழுவினர், சரியாக காலை 03:15 மணிக்கு கட்டடத்தை அடைந்து ஆறு குழந்தைகள் மற்றும் நான்கு பெண்கள் உட்பட 13 பேரின் உடல்களை மீட்டதாக தெரிய வந்துள்ளது. காயமடைந்த ஒரு பெண்ணையும் மீட்புக்குழுவினர் கண்டுபிடித்தனர், அவரது மற்ற குடும்ப உறுப்பினர்கள் அங்கு நடந்த தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக மோதலின் போது கட்டடத்தை நெருங்கியபோது காயமடைந்த ஒருவரும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். பிரிட்டனை தலைமையிடமாகக் கொண்ட கண்காணிப்புக் குழுவான மனித உரிமைகளுக்கான சிரியன் அப்சர்வேட்டரி அமைப்பு, இறந்தவர்களின் எண்ணிக்கை 13 என்று கூறியது. அதில் நான்கு பேர் குழந்தைகள் மற்றும் மூன்று பேர் பெண்கள் என்றும் அந்த அமைப்பு தெரிவித்தது.

பி.பி.சி.

# பகிடிவதையை ஒருபோதும் இங்கு அனுமதிக்க முடியாது!

## நாமல் ராஜபக்ஷ திட்டவட்டம்

கொழும்பு, பெப். 06

“ஒரே நாடு - ஒரே சட்டம்“ நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. அது முன்னாள் இராஜாங்க அமைச்சர் அருந்திகவின் மகனுக்கும் பொருந்தும் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ராகம மருத்துவ பீட மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோவின் மகனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமலிருப்பதற்கான காரணங்கள் எதுவும் இல்லை எனக் குறிப்பிட்ட நாமல் ராஜபக்ஷ, ஜனாதிபதியிடமிருந்து மக்கள் எதிர்பார்க்கும் ‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது எனவும் கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“அருந்திக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். ஏதோ நடந்துள்ளது. அவருடைய மகன் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஆகவே, நாங்கள் சட்டத்தை நடைமுறைப் படுத்துவோம்.

சட்டத்தை மறைக்க வேண்டிய அவசியமில்லை. இராஜாங்க அமைச்சரின் மகனாக இருந்தாலும் சரி, சாதாரண பிரஜையின் மகனாகயிருந்தாலும் சரி அவருக்கு எதிராக ஒரே நாடு ஒரே சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். மக்கள் இதனையே ஜனாதிபதியிடமிருந்து எதிர்பார்க்கின்றனர். தவறு செய்திருந்தால் அவர் தண்டிக்கப்படுவார்.

அப்பாவி என்றால் நீதிமன்றில் அவர் தன்னை நிரூபிப்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும். இந்தச் சம்பவத்துக்குப் பகிடிவதையே காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பகிடிவதைக்கு எதிராகக் கடும் நடவடிக்கையை எடுக்கவேண்டும். எங்களால் ஒருபோதும் பகிடிவதையை அனுமதிக்க முடியாது - என்றார். (அ)

# ஆயிரத்து 800 கொள்கலன்கள் கொழும்புத் துறைமுகத்தில்!

கொழும்பு, பெப். 06

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய சுமார் 1,800 கொள்கலன்கள் கொழும்புத் துறைமுகத்தில் தேங்கியுள்ளன.

அவற்றில் சுமார் 500 அரிசி கொள்கலன்கள் அடங்கியுள்ளதாக அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் பருப்பு, சீனி, உருளைக்கிழங்கு, வெங்காயம் உள்ளிட்ட மேலும் பல உணவுப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களும் தேங்கியுள்ளதாக சங்கத்தினர் குறிப்பிட்டனர்.

மத்திய வங்கி தலையிட்டு இந்த கொள்கலன்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் கேட்டுள்ளது. (அ)

# தந்தையை அடித்து கொன்றார் மகன்!

கொழும்பு, பெப். 06

இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டெல்மார் தோட்டத்தில் மகனின் தாக்குதலுக்கு இலக்காகி தந்தை உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

உயிரிழந்த தந்தையின் சடலத்தை இராகலை பொலிஸார் நேற்று காலை மீட்டனர்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர் 62 வயதான ஒரு பிள்ளையின் தந்தையான சுப்பிரமணியம் செல்வநாயகம் எனவும் இராகலை டெல்மார் மேல் பிரிவைச் சேர்ந்தவர் என கண்டறியப்பட்டுள்ளது

நேற்றுமுன்தினம் இரவு தந்தைக்கும் மகனுக்கும் ஏற்பட்ட வாய்தர்க்கம் கைகலப்பாக மாறியதால் மகன் தந்தையை அவர் இரும்பு ஒன்றினால் தாக்கியுள்ளார். தாக்குதலுக்கு இலக்கான தந்தையின் தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டதையடுத்து அதிக இரத்த போக்கு காரணமாக வீட்டிலேயே உயிரிழந்துள்ளார் என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஆபத்து இல்லை அவதானம் தேவை

## சுகாதார தரப்பினர் வலியுறுத்து

கொழும்பு, பெப். 06

இலங்கையில் மீண்டும் ஒரு கொரோனாத் தொற்று அலை ஏற்படக்கூடிய அளவுக்கு கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் மரணங்கள் பதிவாகவில்லை என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இருப்பினும், சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றி கொரோனாத் தொற்று அலை ஏற்படாது பாதுகாத்துக் கொள்வது மிகவும் முக்கியமானது என்றும் அவர் மேலும் கூறினார். (அ)

## தமிழர்...

பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் திருகோணமலை சண்முகா மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் நான் கூறியதாக தெரிவித்து முகநூல்களில் பல தவறான கருத்துகளை அரசியல் நிகழ்ச்சி நிரலில் அடிப்படையில் வெளியிட்டு வருகின்றனர். நான் கூறாத விடயங்களை கூறியதாக வெளியிட்டு வருகின்றனர்.

திருகோணமலை சண்முகா மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் என்ன நடைபெற்றது என்பதை முழுமையாக அறியாமல் முகநூலிலும் பதியப்படாத இணையத்தளங்களிலிருந்து வெளியாகும் கருத்துகளையும் வைத்துக்கொண்டு எந்த கருத்தையும் நாங்கள் தெரிவிக்கமுடியாது.

திருகோணமலை சண்முகா மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் பக்கசார்பற்ற முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதன் மூலம் உண்மைநிலை அறியப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இந்த விடயத்தை வைத்துக்கொண்டு அரசியல்செய்வதை இரு சமூகங்களை சேர்ந்தவர்களும் நிறுத்திக்கொள்ளவேண்டும்.திருகோணமலை வலயத்துக்குள் இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அது தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கும்போது அதனை அந்த வலயத்துக்குள் தீர்க்கமுடியும்.

அதனைவிடுத்து இதனை தேசிய ரீதியாக இரு இனங்களுக்கிடையே குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் இதனை முன்கொண்டுசெல்வது என்பது மிகவும் வேதனையான விடயம்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் விடுத்த அறிக்கையை நான் வரவேற்கின்றேன்.

இரு சமூகங்களுக்கிடையே இதனைக் கொண்டு பிரச்னைகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படக்கூடாது என தெரிவித்திருந்தார். இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இது தொடர்பில் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் வாழும் அனைத்து இனங்களும் தங்களது உரிமைகளை பேணக்கூடிய வகையில் வாழும் நாட்டை உருவாக்கவேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு.அனைத்து இன மக்களும் தங்களது உரிமைகளை சமனாக கொண்டுசெல்லும் நிலை உருவாக்கப்படவேண்டும்.

வடக்கு-கிழக்கில் உள்ள இரு சமூகமும் எவ்வாறு இணைந்து வாழவேண்டும் என்பது குறித்து சிந்தித்து செயற்படவேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் குறிப்பிட்ட காலப்பகுதியில் வடகிழக்கில் இரு இனங்களும் இல்லாமல்போகும் அபாய நிலையே உருவாகும்.இதனை மனதில்கொண்டு நாங்கள் நடக்கவேண்டும்.ஒரு சிலர் இந்த விடயத்தினை அரசியலாக்கி இரு இனங்களிடையே தேசிய மட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் கருத்துகளை முன்வைப்பதை தவிர்த்துக் கொள்ளவேண்டும்-என்றார். (அ)

## கோவிட் தடுப்பூசி...

முழுமையாக தடுப்பூசி போடாதவர்கள் பொது இடங்களுக்குள் நுழைய ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் தடை விதிக்கப்படும் என வர்த்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவக் காரணங்கள் உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட சில காரணங்களால் தடுப்பூசி போடுவதில் இருந்து விலக்கு அளிக்கப்படும் நபர்களைத் தவிர முழுமையாகத் தடுப்பூசி போடாத எவரும் பொது இடங்களில் நுழையவோ, சேவை பெறவோ அதிமதிக்கப்படமாட்டார்கள்.

பொது இடங்களில் நுழைய அவர்கள் தடுப்பூசி சான்றிதழை சமர்ப்பிக்கவேண்டும் எனவும் வர்த்தமானி கூறுகிறது.

"முழுமையாக தடுப்பூசி" என்பது பொருத்தமான தடுப்பூசியின் தேவையான அளவுகளை சம்பந்தப்பட்ட நபர் பெற்றுள்ளார் என்பதைக் குறிப்பதாகும். இது சுகாதார அமைச்சால் தீர்மானிக்கப்படும் எனவும் வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை , நாட்டில் பல பகுதிகளிலும் தற்போது பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது. எனவே, இதுவரை அதனை பெற்றுக்கொள்ளாதவர்கள் விரைவில் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## மனித உரிமைகள்...

பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன்.

நேற்று கொக்குவிலில் அமைந்துள்ள கட்சி தலைமையகத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

"தமிழ் அரசியல் கைதிகள் 10 தொடக்கம் 20 வருடங்களுக்கு மேலாக சிறையில் வாடுகிறார்கள். இவர்களை விடுதலை செய்ய அரசாங்கம் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை. சர்வதேச ரீதியில் வருகின்ற நெருக்கடிகளை தவிர்ப்பதற்கு பல ஏமாற்று நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் செய்கின்றது.

குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்டமானது சர்வதேச நியமங்களுக்கு முரணான - மோசமான சட்டம் என்பதை ஐ. நா. மனித உரிமைகள் பேரவை உட்பட பல்வேறுபட்ட சர்வதேச சமூக அமைப்புகள் பல்வேறுபட்ட விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் முன் வைத்துள்ளன.

இது தொடர்பான குற்றச்சாட்டுகளை நாங்களும் தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றோம். இத்தகைய நிலையில் அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி தாங்கள் இதனை மாற்றி அமைப்போம் என்று வாக்குறுதிகளை வழங்கி உள்ளார்கள். ஆனால், இன்று வரை அந்த சட்டம் மாற்றி அமைக்கப்படவில்லை. எங்களுடைய நிலைப்பாடு இந்தச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.

இந்த சட்டம் முழுமையாக நீக்கப்படும்போது அதன் கீழ் கைது செய்யப்பட்ட அனைவரும் விடுவிக்கப்படவேண்டும். அரசாங்கம் பயங்கரவாத சட்டத்தை மாற்றி அமைக்கிறோம் என்று கூறிக்கொண்டு பலவித ஏமாற்று வித்தைகளை செய்துவருகின்றது.

குறிப்பாக கடந்த ஒரு வருடத்தில் 16 அரசியல் கைதிகளை விடுவித்துள்ளார்கள். ஆறு மற்றும் எட்டு மாத காலப் பகுதிக்குள் விடுவிக்கப்பட வேண்டிய வர்களையே அரசாங்கம் விடுவித்தது. மாறாக நீண்டகாலமாக விசாரணைகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டவர்கள் மற்றும் நீண்டகால கைதிகள் எவரும் விடுவிக்கப்படவில்லை.

புலிகளை மீளுருவாக்க முயற்சித்தார்கள், சமூக வலைத்தளங்களில் பிரபாகரனின் படத்தை பதிவேற்றினார்கள் என்ற குற்றச்சாட்டுகளின் கீழ் சுமார் 100 பேர் வரை கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். ஐ. நா. மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடர்கள் நெருங்கி வருகின்ற வேளையில் இவர்களை விடுவித்து அரசியல் கைதிகளை விடுதலை செய்தமை போன்று போலியான முகத்தை காண்பிப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

சர்வதேச சமூகம் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பில் முழுமையான கண்காணிப்பை செய்ய வேண்டும் - என்றார். (ஐ)

## ஒரு வயதுக்...

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள னர்.

தொற்றாளர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்திய சாலை ஊடாக பி.சி. ஆர் பரிசோதனைக்கு உட்பட்டவர் கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மயிலிட்டியில் அடாத்தாக வீதி; பார்வையிட்டார் சுமந்திரன் எம்.பி.

அடாத்தாக அமைக்கப்படும் கட்டுவன் - மயிலிட்டி வீதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் நேரில் பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கான பாதையில் 400 மீற்றர் பாதையை அபகரித்துள்ள படையினர் வீதியை விடமறுத்து தனியாருக்கு சொந்தமான நிலத்தின் ஊடாக தற்போது பாதை அமைக்கும் விடயம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் நேற்று சனிக்கிழமை சம்பவ இடத்திற்கு நேரில் வந்து பார்வையிட்டதோடு சட்டப்படி சுவீகரிக்காது நில உரிமையாளரின் சம்மதம் இன்றி அவர்களின் கிணறுகளை இடித்து அழித்து அதன் மேல் புதிய வீதிகளை அமைப்பதையும் பார்வையிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினரோடு நில உரிமையாளர்கள், வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ. சுகிர்தன், உறுப்பினர் ஹரிகரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இருப்பதை...

இருப்பதையும் இழக்கும் விதத்தில் செயற்படக்கூடாது."

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

நாவலப்பிட்டிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற ஆன்மீக நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது: -

இந்த நாட்டிலே விடயம் புரியாத நபர்கள் பலர் தெற்கிலும் உள்ளனர். வடக்கிலும் வாழ்கின்றனர். தெற்கில் உள்ள நபர்களில் ஜனாதிபதி முதன்மையானவர். அவரின் சுதந்திர தின உரையை செவிமடுக்கையில் சிரிப்புத்தான் வந்தது. வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு, முதலீடுகளை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றார். ஆனால், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் வேறு நாடுகளுக்குச்சென்றுவிட்டனர். புலம்பெயர் தமிழர்களிடம் பணம் உள்ளது. கோட்டா ஆட்சியில் அவர்கள் இங்கு வருவார்களா? வரமாட்டார்கள்.

எனவே, சஜித் தலைமையில் அமையும் ஆட்சியில் நாம் நிச்சயம் வெளிநாட்டு முதலீடுகளை உள்ளீர்ப்போம்.

இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு. அனைவரும் ஒன்றிணைந்தால்தான் நாடு முழுமைப்படும். அதுவரைக்கும் இந்த நாடு உருப்படாது. நாம் அனைவரும் இலங்கையர்கள். அதற்கு பிறகு தான் இனம் எல்லாம் வரும்.

13ஆவது திருத்தச்சட்டத்தை நாம் முழு தீர்வாக ஏற்கவில்லை. அதேபோல சிங்கள மக்களின் ஆசியின்றி தீர்வை பெற முடியாது. இது எனக்கு மட்டுமல்ல அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டவர்களுக்கும் தெரியும். எனவே, இருப்பதையும் இழக்காமல், முன்னோக்கி செல்வோம் என்பதை விசயம் புரியாதவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்-என்றார். (அ)

## அரசியல்வாதி...

தினத்தன்று ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்படாமை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரஞ்சன் ராமநாயக்க பலருக்கு நல்லவராக இருக்கலாம். ஆனால், அவர் இழைத்த குற்றத்துக்காகச் சட்டம் அவரைத் தண்டித்துள்ளது. சஜித் அணியினரின் விருப்பத்துக்கிணங்க அவரைப் பொதுமன்னிப்பில் விடுவிக்க முடியாது. அதற்கான நடைமுறைகள் உள்ளன-என்றார். (அ)

## உள்ளூராட்சித்...

சபைகளின் பதவிகாலம் ஓராண்டுக்கு நீடிக்கப் பட்டிருந்தாலும், அரசு நினைக்கும் நேரத்தில் அதற்கான தேர்தலை நடத்த முடியும் .

தற்போதைய சூழ் நிலையில் தேசிய மட்டத்திலான தேர்தலொன்றுன்றுக்கு வாய்ப்பில்லை என்பதாலேயே, உள்ளூராட்சித் தேர்தல் பற்றி அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

## மன்னார்...

இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. நேற்று காலை 9 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

முச்சக்கரவண்டியில் பயணித்த தாய், அவரது இரு பிள்ளைகள் மற்றும் தாயின் சகோதரன் ஆகியோரே பயணித்துள்ளனர். இந்த விபத்தில் ஒரு சிறுவன் உயிரிழந்துதுடன், மற்றைய மூவரும் படுகாயமடைந்து மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

லொறி சாரதியின் கவனயீனமே விபத்திற்கு காரணம் என்றும் அவரை தாம் கைது செய்துள்ளனர் என்றும் மன்னார் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## பயங்கரவாத...

ளவில் இந்த நிகழ்வு தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் தனராஜ் தலைமையில் கிளிநொச்சி சேவைச் சந்தை வளாகத்தில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

## வயலில் வேலை...

வெட்டி - கீரிப்பள்ளி பகுதியைச் சேர்ந்த விக்னேஸ்வரமூர்த்தி நிதர்சன் (வயது 26) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞர், கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரிக்கு முன்பாக சகோதரனுடன் வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோதே திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார். உடனடியாக அவரை பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று பரிசோதித்த மருத்துவர்கள் தெரிவித்தனர்.

சடலம் மரண விசாரணைகளுக்காக மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-2)

## எனது...

கடற்றொழிலாளர்கள் எனது வாக்குறுதியை அடுத்து போராட்டத்தை கைவிட்டு தொழிலுக்கு சென்றுவிட்டனர்", என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தேசிய மீனவர் சம்மேளனத்தின் பணிப்பாளர் சபை கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நடைபெற்ற மீனவர் சம்மேளனத்தின் கலந்துரையாடலில், சம்மேளனத்தின் எதிர்கால செயல்பாடுகளை விஸ்தரிப்பது தொடர்பாகவும், கடற்றொழில் மாவட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# நாடு எங்கே செல்கின்றது என அரசில் எவருக்கும் தெரியாது

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 06

**நாடு எந்த திசையை நோக்கி பயணிக்கின்றது என்பது அரசாங்கத்தில் இருக்கும் எவருக்கும் தெரியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது குறித்து அரசாங்கத்தில் இருப்போர் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு - கொட்டாவை பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு எந்த திசையில் செல்கிறது என்பது எவருக்கும் தெரியாது. சர்வதேச நாணய நிதியத்துக்கு கடிதம் எழுதியுள்ளதாக கூறுகின்றனர். அப்படியான கடிதம் கிடைக்கவில்லை என்று நாணய நிதியம் கூறுகிறது. இது என்ன ஒரு கேலிக்கூத்து, நாட்டுக்கு ஏற்பட்டுள்ள கதி. முற்றாக நாடு சீரழிந்துள்ளது. இதனால், எதிர்காலத்தில் நாங்கள் "அச்சாறு" போன்ற அரசாங்கத்தை அமைக்கமாட்டோம் -என்றார். (அ)

# மல்வத்து பீடத்தின் மாத்கமுவ விஹாரை ஜனாதிபதி கோட்டபாயவால் பிரதிஷ்டை

கொழும்பு, பெப். 06

வரலாற்றுச் சிறப்புமிக்க மல்வத்து மஹா விஹாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட "மாத்கமுவ விஹாரை", ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நேற்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.

நேற்று முற்பகல் மல்வத்து மஹா விஹாரைக்குச் சென்ற ஜனாதிபதி, மல்வத்து பீடத்தின் மஹா நாயக்கர் அதி வணக்கத்துக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

மல்வத்து மஹா விஹாரை வளாகத்தில் அமைந்துள்ள மாத்கமுவ விஹாரையின் பழைய கட்டடம் முற்றாக அழிக்கப்பட்டு, ஜனாதிபதி ஆலோசனைப்படி கடற்படையினரின் பங்களிப்பில், சுமார் ஒரு வருட காலப்பகுதியில் மூன்று மாடிக் கட்டடமாக நிர்மாணிக்கப்பட்டது.

பாரம்பரிய முறைகளுக்கமைய இந்தப் புதிய கட்டடம் பிரதிஷ்டை செய்யப்பட்டு, அதற்கான சன்னஸ் பத்திரம், மல்வத்து பீடத்தின் அனுநாயக்கர் அதி வணக்கத்துக்குரிய திம்புல்கும்புரே விமலதம்ம தேரரிடம் ஜனாதிபதியால் கையளிக்கப்பட்டது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உளுகேதென்ன, இக்கட்டிடத்துக்கான சாவியை, அநுநாயக்கத் தேரரிடம் கையளித்தார்.

மல்வத்து பீடத்தின் அனுநாயக்கர் அதி வணக்கத்துக்குரிய நியங்கொட விஜித்தசிறி தேரர் உள்ளிட்ட மஹா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து, ஜனாதிபதிக்கு ஆசீர்வாதமளித்தனர்.

அதன் பின்னர், அஸ்கிரிய மஹா விஹாரைக்குச் சென்ற ஜனாதிபதி, அஸ்கிரிய பீடத்தின் மஹா நாயக்கர் அதி வணக்கத்துக்குரிய வரக்காகொட ஸ்ரீ ஞானரத்தன தேரரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார். (அ)

# போக்குவரத்து தண்டம் விதித்த பொலிஸ்காரரை கோடரியால் கொத்திவிட்டு விசம் அருந்திய நபர்!

கொழும்பு, பெப். 06

அம்பலாந்தோட்டையில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த அம்பலாந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கோடரியால் தாக்கப்பட்டதில் காயமடைந்த நிலையில்



நேற்று பிற்பகல் அம்பலாந்தோட்டை அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவ இடத்தில் விஷம் அருந்திய நிலையில், தாக்குதல் நடத்திய நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் குடிபோதையில் வாகனம் ஓட்டியதாக தாக்குதல்தாரி மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

சம்பவத்தின்போது மற்றொரு அதிகாரி சம்பவ இடத்தில் பணியில் இருந்தார். சம்பவம் தொடர்பில் அம்பலாந்தோட்டை பொலிஸார் விசாரணைகளை

# உயர்தரப் பரீட்சை ஏற்பாடுகள் பூர்த்தி

நாளை ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. அறிக்கை ஒன்றை வெளியிட்டு பரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன இதனைத் தெரி வித்தார்.

பெப்ரவரி 7ஆம் திகதி முதல் முதல், மார்ச் மாதம் 5ஆம் திகதிவரை, 2, 437 பரீட்சை நிலையங்களில் உயர் தரப் பரீட்சை இடம்பெறவுள்ளது. 3 இலட்சத்து 45,242 பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சையில் தோற்றவுள்ள தாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அவர்களில், 279,141 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 66,101 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் உள்ளடங்குகின்றனர். கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மற்றும் தனிமைப் படுத்தலில் உள்ள பரீட்சார்த்திகளுக்காக, விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

## மரண அறிவித்தல்



பிறப்பு 07 - 03 - 1972

இறப்பு 04 - 02 - 2022

### திரவிய நாயகம் சிவஜெயகுமார்

யாழ். கரவெட்டி வதிரி துலாக்கட்டைப் பிறப்பிடமாகவும், Zurich சுவிஸ், Toronto கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திரவிய நாயகம் சிவஜெயகுமார் அவர்கள் 04.02.2022 வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரவிய நாயகம் பறுவதம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருச்செந்தூர், சிவசோதிமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், சுதர்சினி அவர்களின் அன்புக் கணவரும், கிசாந்த், மிதுசா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாதம், யோகன், செல்வராணி, காலஞ்சென்ற செல்வதேவி, சிவம், செல்வம், தவம், திரவியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,கெங்காதரன், பரணீதரன், சிறீதரன், சாந்தினி, கிருபாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

பார்வைக்கு :
Monday, 07 Feb 2022 6:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை :
Tuesday, 08 Feb 2022 6:00 AM - 9:30 AM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

தகனம் :
Tuesday, 08 Feb 2022 9:30 AM - 10:30 AM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**செல்வன் - மைத்துனர்**
**Mobile : +16472943974**

தகவல்:
**குடும்பத்தினர்**










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-இம்சை அரசன் 23ம் புலிகேசி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-திறமையாளர்களுக்கான களம்

**இரவு**

7.00 மணி : SPOTLIGHT- அமிர்தலிங்கம் பகீரதன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : டான் பட்டிமன்றம்



10.00 மணி: -நேர்கொண்ட பார்வை




## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சிவி (Shivi)

**காலை**

05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு